# இஸ்லாத்தை அறிவோம்.
# (வண்ணப் படங்களில்
# விஞ்ஞான நுட்பங்கள்



www.islamic-invitation.com

# இஸ்லாத்தை அறிவோம்

## (வண்ணப்படங்களில் விஞ்ஞான நுட்பங்கள்)

மூலம்

**I. A. இப்ராஹீம்**

தமிழில்

**K.J. மஸ்தான் அலீ பாகவி, உமரி**
(அபூ காலித்)

வெளியீடு
இஸ்லாமிக் சென்டர், உனைஸா
சவூதி அரேபியா

# الدليل المصور الموجز لفهم الإسلام

## إبراهيم أبو حرب

ترجمه الى لغة تاميل: علي ابو خالد العمري

مراجعة

المهندس عبد الرؤوف خالد

ابراهيم (كاتب مشهور)

النشر والتوزيع

مكتب التعاوني للدعوة وتوعية الجاليات بعنيزة

المملكة العربية السعودية

# ஆங்கில நூலின் பொது ஆய்வாளர்கள்

டாக்டர். வில்லியம் (Daoud) பிச்சி ❖ மைக்கேல் (அப்துல் ஹகீம்) தாமஸ் ❖ டோனி (அபூ கலீல்) ❖ சில்வெஸ்டர் ❖ இத்ரீஸ் பால்மெர் ❖ ஜமீல் ஸராபோஸோ ❖ அலீ அல்-திமீமி ஆகியோருக்கும்

# அறிவியல் ஆய்வாளர்கள்

பேராசிரியர் ஹரோல்ட் ஸ்டிவார்ட் கோ∴பி ❖ பேராசிரியர் F.A. ஸ்டேட் ❖ பேராசிரியர் மஹ்ஜூப் O. தாஹா ❖ பேராசிரியர் அஹ்மத் அல்லாம் ❖ பேராசிரியர் சல்மான் சுல்தான் ❖ துணைப்பேராசிரியர் H.O. சின்தி ஆகியோருக் கும்

# தமிழ் மொழியில்

இந்நூலைத் தமிழாக்கம் செய்தபொழுது, அறிவியல் - மருத்துவக் கலைச்சொற்களுக்குச் சரியான தமிழ்ச்சொற் களைத் தேடித் தந்து உதவி புரிந்த

ஜனாப் சேயன் இப்ராஹீம், T. அஜீஸ் லுத்∴புல்லாஹ், K.M. அப்துர் ரவூ∴ப் காலித் B.E. , K.M. ஆதிலா B.Sc. ஆகியோருக்கும்

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், கருணைமிக்க இறைவன் அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்கூலி வழங்கிடப் பிரார்த்தனையும் செய்கிறோம்!

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | முன்னுரை | 3 |
| 2 | **அத்தியாயம் 1**<br>இஸ்லாம் இறையருள் மார்க்கம்தான் என்று நிரூபிக்கும் சான்றுகள் | 6 |
| 3 | குர்ஆனில் இடம்பெற்றுள்ள அறிவியல் ரீதியான அற்புதங்கள் | ,, |
| 4 | குர்ஆனும் கருவளர்ச்சியும் | 8 |
| 5 | குர்ஆனும் மலைகளும் | 16 |
| 6 | குர்ஆனும் பேரண்டத்தின் தொடக்கமும் | 20 |
| 7 | குர்ஆனும் மனித மூளையும் | 22 |
| 8 | குர்ஆனும் கடல்களும் நதிகளும் | 24 |
| 9 | ஆழக்கடல்கள் - உட்புற அலைகள் பற்றி குர்ஆன் கூறுவது என்ன? | 28 |
| 10 | குர்ஆனும் மேகங்களும் | 31 |
| 11 | அறிவியல் நுட்பங்களும் அறிவியலாளர் கருத்துகளும் | 37 |
| 12 | குர்ஆன் விடுக்கும் அறைகூவல் | 45 |
| 13 | நபியவர்களின் தூதுத்துவமும் பைபிளின் முன்னறிவிப்புகளும் | 47 |
| 14 | பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிவித்த குர்ஆன் வசனங்கள் | 50 |
| 15 | முஹம்மது நபி (ஸல்) மூலம் நிகழ்ந்த அற்புதங்கள் | 53 |
| 16 | முஹம்மது நபியவர்களின் எளிய வாழ்க்கை | ,, |
| 17 | இஸ்லாத்தின் அபாரமான வளர்ச்சி | 57 |
| 18 | **அத்தியாயம் 2**<br>இஸ்லாத்தின் தனிச்சிறப்புகள் | 59 |
| 19 | நிரந்தரமான சுவனத்தின் வாசல் | ,, |
| 20 | நரகத்தில் இருந்து ஈடேற்றம் | 60 |
| 21 | உண்மையான பாக்கியமும் உள்மன அமைதியும் | 61 |
| 22 | முந்தைய பாவங்கள் முழுவதையும் மன்னித்தல் | 63 |

| | | |
|---|---|---|
| 23 | **அத்தியாயம் 3**<br>இஸ்லாம் : முக்கியமான தகவல்கள்<br>இஸ்லாம் என்றால் என்ன? | 64 |
| 24 | இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் | ,, |
| 25 | மலக்குகளின் மீது நம்பிக்கை கொள்வது | 68 |
| 26 | இறைத்தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வது | ,, |
| 27 | இறுதித் தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொள்வது | 69 |
| 28 | விதியின் மீது நம்பிக்கை கொள்வது | ,, |
| 29 | குர்ஆன் நீங்கலாக<br>வேறு மூலாதாரம் இஸ்லாத்தின் உண்டா? | ,, |
| 30 | முஹம்மது நபியவர்களின் பொன்மொழிகள் சில | |
| 31 | இறுதித் தீர்ப்பு நாள் பற்றி<br>இஸ்லாம் கூறுவது என்ன? | 72 |
| 32 | இஸ்லாத்தில் சேரவிரும்புபவர்<br>என்ன செய்ய வேண்டும்? | 75 |
| 33 | குர்ஆன் எதைப் பற்றி பேசுகிறது? | 76 |
| 34 | முஹம்மது நபி (ஸல்) அவர்கள் யார்? | 77 |
| 35 | இஸ்லாத்தின் வளர்ச்சி<br>அறிவியல் முன்னேற்றத்திற்கு உதவியது எப்படி? | 79 |
| 36 | ஏசுநாதர் பற்றி முஸ்லிம்களின் நம்பிக்கை என்ன? | 81 |
| 37 | பயங்கர வாதம் குறித்து<br>இஸ்லாம் கூறுவது என்ன? | 84 |
| 38 | இஸ்லாத்தில் நீதியும் மனித உரிமைகளும் | 86 |
| 39 | இஸ்லாத்தில் மகளிர் உரிமைகள் | 89 |
| 40 | இஸ்லாத்தில் குடும்ப அமைப்பு | 90 |
| 41 | முதியோரை நடத்தும் முறை | ,, |
| 42 | இஸ்லாத்தின் ஐந்து கடமைகள் | 91 |
| 43 | நம்பிக்கையைப் பறைசாற்றல் | 92 |
| 44 | தொழுகையை நிலைநாட்டுதல் | ,, |
| 45 | (எளியோர்க்கு) ஜக்காத் வழங்குதல் | 93 |
| 46 | ரமளான் மாதத்தில் நோன்பு வைத்தல் | 94 |
| 47 | மக்காவுக்குப் புனிதப் பயணம் | ,, |
| 48 | அமெரிக்காவில் இஸ்லாம் | 95 |

# முன்னுரை

இந்நூல், இஸ்லாத்தைச் சுருக்கமாக விளக்கித் தரும் வழிகாட்டி நூல் ஆகும். இதில் மூன்று அத்தியாயங்கள் உள்ளன.

# அத்தியாயம் 1


இஸ்லாம், உண்மையில் இறைவன் அருளிய மார்க்கம்தான் என்பதற்கான சில சான்றுகள் இந்த அத்தியாயத்தில் தரப்படுகின்றன. அத்துடன் மக்களில் சிலர் எழுப்புகின்ற பின்வரும் முக்கியமான சில கேள்விகளுக்கு பதிலும் அளிக்கப்படுகிறது.

- குர்ஆன் அல்லாஹ்வின் வாக்குதானா? அது, அவனிடம் இருந்து வஹி மூலம் இறக்கியருளப்பட்ட வேதம்தானா?
- முஹம்மது நபி (ஸல்)அவர்கள், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட உண்மையான தூதர்தானா?
- இஸ்லாம், அல்லாஹ் அருளிய மார்க்கம் என்பது சரிதானா?

இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் ஆறுவகையான ஆதாரங்களை நாம் சமர்ப்பிக்கிறோம். அவை வருமாறு:

1 - திருக்குர்ஆனின் அறிவியல் ரீதியான அற்புதத்தன்மை.

இந்த முதலாம் அத்தியாயத்தில், சமீப காலத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு விஞ்ஞான உண்மைகள் அலசப்படுகின்றன. கடந்த 15 நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவற்றை குர்ஆன் எடுத்துரைத்துள்ளது. (இத்தகைய விஞ்ஞானக் கருத்துகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன)



2 - குர்ஆனின் அத்தியாயங்களைப் போல் ஒரே ஓர் அத்தியாயத்தை கொண்டுவாருங்கள், பார்க்கலாம் என்று விடுக்கப்படும் மக்கத்தான சவால்.

குர்ஆனின் அத்தியாயங்களுக்கு ஒப்பான ஒரே ஓர் அத்தியாயத்தைக் கொண்டுவருமாறு மனித குலம் முழுவதையும் முன்னோக்கி குர்ஆனில் அல்லாஹ் சவால் விடுகிறான். 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு குர்ஆன் வஹி மூலம் இறக்கியருளப்பட்ட நாளிலிருந்து இன்று வரை யாராலும் இந்தச்

சவாலை எதிர்கொள்ள முடியவில்லை. வெறும் பத்து வாக்கியங்களில் அமைந்த ‘அல்கௌஸர்’ போன்ற திருக் குர்ஆனின் மிகச்சிறிய அத்தியாயத்தைப் போன்ற அத்தியாயத்தைக் கூட யாரும் கொண்டு வரவில்லை.

3 - இஸ்லாத்தைப் போதிக்கும் தீர்க்க தரிசியாக முஹம்மது (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டது தொடர்பாக முந்தைய பரிசுத்த இறைவேதங்களில் பதிவாகியுள்ள முன்னறிவிப்புகள்! அவை பற்றி இந்த அத்தியாயத்தில் விரிவாக அலசப்படுகிறது.

4 - எதிர்கால நிகழ்வுகள் பற்றி எடுத்துரைத்த திருக்குர்ஆனின் வசனங்கள்! பிற்காலத்தில் அவை அப்படியே நிகழவும் செய்தன.

எதிர்காலத்தில் இப்படி இப்படி நிகழும் என்று பல நிகழ்வுகளை குர்ஆன் கூறியுள்ளது. எடுத்துக்காட்டாக, பாரசீகர்களை ரோமானி யர்கள் வெற்றி கொண்ட நிகழ்ச்சி!

5 - முஹம்மது நபி (ஸல்) அவர்களின் கையால் நிகழ்ந்த அற்பு தங்கள்! - முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மூலம் ஏராளமான அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. மக்களில் பல பிரிவினர் அவற்றைக் கண்கூடாகப் பார்த்து இருக்கிறார்கள்.

6 - நபி (ஸல்) அவர்களின் எளிமையான வாழ்க்கை.

இதன் மூலம் தெரியவருவது என்னவெனில், உலகாயதப் பயன் களையோ சாதனங்களையோ செல்வாக்கையோ தமக்கு ஏற்படுத் திக்கொள்ளும் நோக்கத்துடன் முஹம்மது நபி (ஸல்)அவர்கள் இவ்வுலகத்திற்கு வருகை தரவில்லை என்பதையும், தாம் ஒரு நபி என்று போலியாக வாதிடவில்லை என்பதையும் தெளிவாக நிரூபிக் கக்கூடிய சான்றுகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

இந்த ஆறுவகையான சான்றுகளின் மூலம், நாம் நிரூபிக்க விரும்புவது இந்த உண்மைகளைத்தான்:

❁ குர்ஆன் என்பது, அல்லாஹ்வின் வேதம் ஆகும். வார்த் தைக்கு வார்த்தை அவன் மொழிந்த வாக்குகள் ஆகும். நபி(ஸல்) அவர்களுக்கு வஹி மூலம் அல்லாஹ் அருளியதுதான் குர்ஆன்.

❁ முஹம்மது நபி (ஸல்)அவர்கள், அல்லாஹ்வினால் அனுப் பப்பட்ட உண்மையான தூதர்தான்.

❁ இஸ்லாம் என்பது, உண்மையில் மனிதர்கள் அனைவருக் காகவும் உள்ள அல்லாஹ்வின் மார்க்கம்தான்.

- ஒரு மதத்தின் எதார்த்த நிலையைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் எனில், நம்முடைய உணர்வுகளையோ நம் முடைய கருத்துகளையோ பாரம்பரிய பழக்கங்களையோ அதற்கு அடிப்படையாக ஆக்குவது தகுமானதல்ல. மாறாக நமது பகுத்தறி வையும் நுண்ணறிவையும்தான் அடிப்படையாகக் கொள்ள வேண் டும். தூய்மையும் உயர்வும் மிக்க அல்லாஹ், நபிமார்களை அனுப்பி வைத்த பொழுது, அவர்கள் உண்மையான நபிமார்கள்தாம் என்று நிரூபிக்கும் ஆதாரங்களையும் அற்புதங்களையும் வழங்கி அவர் களுக்கு உறுதுணை புரிந்துள்ளான்.

# அத்தியாயம் 2

இஸ்லாத்தின் சில தனிச்சிறப்புகள்:

இஸ்லாம் மனிதர்களுக்கு அளிக்கும் சில பயன்பாடுகள் குறித்து இந்த அத்தியாயத்தில் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. அவை இஸ்லாத்தின் தனிச் சிறப்புகளாகும். அவை வருமாறு:

1 - நிலையான சுவனபதி செல்லுதல்

2 - நரக நெருப்பிலிருந்து விடுதலை பெறுதல்

3 - உண்மையான பாக்கியத்தை - மன அமைதியை அடைதல்

4 - உண்மையான பாவமீட்சி தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளு வதன் மூலம் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படுதல்

# அத்தியாயம் 3

இஸ்லாத்தைப் பற்றிய பொதுஅறிவுகள்:

இந்த அத்தியாயம், இஸ்லாத்தைப் பற்றிய பொதுஅறிவுகளை முன்வைக்கிறது., இஸ்லாத்தைப் பற்றிய சில தவறான கருத்து களை அகற்றவும் செய்கிறது. மேலும் பரவலாக எழுப்பப்படும் சில கேள்விகளுக்குப் பதில்களும் அளிக்கப்படுகின்றன. எடுத்துக்காட் டாக,

1 - பயங்கர வாதத்தைப் பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது?

2 - இஸ்லாத்தில் மகளிர் நிலை என்ன?

3 - இஸ்லாம் வழங்கும் நீதி, மனித உரிமைகள்

4 - இஸ்லாத்தில் குடும்ப அமைப்பு

5 - மனித வாழ்க்கைக்குத் தேவையான வேறு சில முக்கியத் தலைப்புகள்.

அத்தியாயம் - 1

# இஸ்லாம் இறையருள் மார்க்கம்தான் என்று நிரூபிக்கும் சான்றுகள்

உயர்வுமிக்க அல்லாஹ், இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பல அற்புதங்களை வழங்கி வலிமை சேர்த்தான். அவர்கள், அல்லாஹ் அனுப்பிவைத்த உண்மையான நபிதான் என்று நிரூபிக்கும் ஏராளமான சான்றுகளையும் வழங்கியுள்ளான்.

இதேபோன்று, வஹி எனும் இறையருட்செய்தியின் மூலம் இறக்கி அருளப்பட்ட இறுதிவேதம்தான் திருக்குர்ஆன் என்பதற்குப் பல்வேறு அற்புதங்களை வழங்கி அவற்றின் மூலம் வலிமை சேர்த்தான். அந்த அற்புதங்கள் -

'நிச்சயமாக இந்தக் குர்ஆன், வார்த்தைக்கு வார்த்தை அல்லாஹ் மொழிந்த வாக்குதான் என்றும், அல்லாஹ்தான், வஹியின் மூலம் அதை அருளினான்., அதை அருளியதன் பின்னணியில் எந்த மனிதனின் பங்களிப்பும் இல்லை என்றும்' நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் பின்வரும் பல்வேறு ஆதாரங்களை இந்த அத்தியாயம் அலசுகிறது:

## 1 - திருக்குர்ஆனும் அறிவியல் அற்புதங்களும்

குர்ஆன் வார்த்தைக்கு வார்த்தை அல்லாஹ் அருளிய வேதம் தான்.,அதை ஜிப்ரீல் எனும் வானவர் மூலம் முஹம்மது நபி (ஸல்) யிடம் அல்லாஹ் வஹியின் வாயிலாக அனுப்பினான். முஹம்மது நபி (ஸல்)அவர்கள் அதனை தமது நெஞ்சில் மனனம் செய்து கொண்டார்கள். பிறகு அதனைத் தம்முடைய தோழர்களிடத்தில் ஓதிக் காட்டினார்கள். அந்தத் தோழர்கள், அதனை நெஞ்சங்களில் மனனம் செய்து கொண்டதுடன் எழுதியும் வைத்தார்கள்.

இதற்கும் மேலாக குர்ஆனை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் எனும் அந்த மலக்குடன் சேர்ந்து - இருவரும் ஒவ்வோர் ஆண்டும் ஒருதடவை ஓதிச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்கள். தமது வாழ்நாளின் கடைசி ஆண்டில், வானவர் ஜிப்ரீலுடன் சேர்ந்து - இருவரும் இரண்டு தடவை ஓதிச் சரிபார்த்தார்கள்.


**மேலும் வஹியின் மூலம் குர்ஆன் இறக்கியருளப்பட்ட நேரத்தில் இருந்து இன்று வரையில் முஸ்லிம்களில் ஒரு பெரும் எண்ணிக்கை யினர், குர்ஆன் முழுவதையும் தமது நெஞ்சகத்தில் மனனம் செய் யக்கூடியவர்களாக உள்ளனர். இன்னும் சொல்லப்போனால், பத்து வயதே நிரம்பிய எண்ணற்ற பாலகர்கள், குர்ஆன் முழுவதையும் எளிதாக மனனம் செய்யும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறார்கள். மேலும் இத்தனை நூற்றாண்டுகள் கழிந்த பிறகும்கூட குர்ஆனின் ஒரே ஒரு எழுத்தில்கூட எந்த மாற்றமும் ஏற்படவில்லை.**

**பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இறக்கியருளப்பட்ட திருக் குர்ஆன், இன்றைய நவீன யுகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட - இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படாத பல்வேறு அறிவியல் உண்மைகளை எடுத்துரைக்கிறது. அவை சரியான கருத்துகள்தான் என்று தனித் திறமை பெற்ற அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.**

**இவையெல்லாம் காட்டுவது என்ன? நிச்சயமாக இந்தக் குர்ஆன் அல்லாஹ்வின் வாக்குதான்.,வஹியின் மூலம் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அருளியதுதான் என்றும், திருக்குர்ஆனை முஹம்மது நபியோ வேறு எவருமோ சுயமாக எழுதவில்லை என்றும் ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கின்றது.**

**மேலும் நிரூபிக்கப்படுகிறது: முஹம்மது (ஸல்)அவர்கள், அல் லாஹ்வினால் அனுப்பப்பட்ட உண்மையான தூதர்தான் என்றும் உறுதிப்படுத்துகிறது.**

**மேலும் எந்த ஒரு மனிதனும் - கடந்த 14 நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்த அறிவியல் உண்மைகளை அறிந்திருந்தார் என்று சொல்வது பகுத்தறிவுடன் மோதக்கூடிய விஷயமாக உள்ளது. ஏனெனில், இந்த அறிவியல் உண்மைகள், பிந்தைய காலத் தில்தான் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன., அதுவும் நவீன உப கரணங்களைக் கொண்டும், பல்வேறு கால கட்டங்களில் பரிணாம வளர்ச்சிகள் பெற்று முன்னேற்றம் அடைந்துள்ள நவீன அறிவியல் நுட்பங்களின் உதவியுடனும்தான் அந்தக் கண்டு பிடிப்புகள் உண்மையா னவை என்று நிரூபிக்கப்பட் டுள்ளன. அப்படிப்பட்ட அறிவி யல் நுட்பங்களை 14 நூற்**



றாண்டுகளுக்கு முன்பு எவ ரேனும் அறிந்திருந்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்? சில எடுத்துக்காட்டுகளை உங்களுக்குத் தருகிறேன்:

## 1 - குர்ஆனும் கரு வளர்ச்சியும்

உயர்வும் பாக்கியமும் மிக்க அல்லாஹ், பெண்ணின் கருவறை யில் மனித சிசு வளர்ச்சி பெற்றுவரும் பல்வேறு நிலைமாற்றங் களைப் பற்றி திருக்குர்ஆனில் எடுத்துரைக்கிறான்:

وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ مِنْ سُلاَلَةٍ مِنْ طِيْنٍ ، ثُمَّ جَعَلْنَاهُ نُطْفَةً فِى قَرَارٍ مَّكِيْنٍ ، ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظَامًا فَكَسَوْنَا الْعِظَامَ لَحْمًا ثُمَّ اَنْشَاْنَاهُ خَلْقًا آخَرَ فَتَبَارَكَ اللهُ أَحْسَنُ الْخَالِقِيْنَ (المؤمنون ١٢ – ١٤ )

'மனிதனை நாம் களிமண் சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் (செலுத்தப்பட்ட) விந்தாக ஆக்கினோம். பிறகு அந்த விந்தை, ரத்தக்கட்டியாக ஆக்கினோம். பிறகு அந்த ரத்தக்கட்டியை, மெல்லப்பட்டதாக ஆக்கினோம். பிறகு அந்த மெல்லப்பட்ட கட்டியை, எலும்புகளாக ஆக்கினோம். பிறகு அந்த எலும்புகளைச் சதையால் போர்த்தினோம். பின்னர் அதை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச்செய்தோம். பெரும் பேறு டையவன் ஆவான் அல்லாஹ். படைப்பாளர்களில் எல்லாம் மிகவும் அழகிய படைப்பாளன்' (23 : 12 - 14)

அலகத் (العلقة) எனும் அரபிச்சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள்ளன.

1 - அட்டைப்பூச்சி
2 - ஒட்டிக்கொண்டிருக்கும் பொருள்
3 - இரத்தக்கட்டி

## அ - அட்டைப்பூச்சி

இந்நிலையிலுள்ள கருவறைச் சிசுவையும் அட்டைப்பூச்சியையும் ஒப்புநோக்கினால் அவ்விரண்டிற்கும் மத்தியில் ஒற்றுமை [1] இருப்ப தைக் காணலாம். படம் 1 ல் விளக்கப்பட்டுள்ளதைப் போன்று!

மேலும் இந்தக் காலகட்டத்தில் உள்ள சிசு, தாயின் இரத்தத்தை உணவாகப் பெறுகிறது. அட்டைப்பூச்சியானது, தான் ஒட்டியிருக்

[1] பார்க்க: The Developing Humen - மனித வளர்ச்சி எனும் நூல். ஆசிரியர்: மூர், பதிப்பு 5. பக்கம் 8)

கும் உடலில் இருந்து இரத்தத்தை உறுஞ்சுவதுபோன்று அது அமைந்துள்ளது. [2]

# ஆ - ஒட்டிக்கொண்டிருக்கும் பொருள்


'அலக்கா' எனும் சொல்லின் இரண்டாவது அர்த்தம், ஒட்டிக் கொண்டிருக்கும் பொருள் என்பதாகும். படம் எண் 2 இல், படம் எண் 3 இல் நாம் காணக்கூடியதாகும் இது. இந்தக் காலகட்டத் தில் தாயின் கருவறையில் சிசு ஒட்டிக்கொண்டிருப்பதாகும் இது.

# இ - இரத்தக் கட்டி

'அலக்கா' எனும் சொல்லின் மூன்றாவது அர்த்தம், இரத்தக் கட்டி என்பதாகும். இந்நிலையிலுள்ள சிசுவின் வெளிப்புறத்தோற்றம் - அதன் மேலே மூடியிருக்கும் பையுடன் சேர்ந்துப் பார்த்தால் இரத்தக்கட்டியைப் போன்றே உள்ளது. மேலும் இந்தக் காலகட் டத்தில் [3] கருவின் அதிகப்படியான உதிரம், இரத்தக்கட்டி அள வுக்கு அதிகமாகப் பெருகி இருப்பது, இந்த அர்த்தத்திற்குத்தான் வலுசேர்க்கிறது. படம் 4 ல் பார்க்கவும்.

மேலும் இந்தக் காலகட்டத்தில் கருவினுள் இருக்கும் இரத்தம் மூன்று வாரங்கள் வரையில் ஓடாமல் நிற்கிறது.[4] ஆக! இந்தக் கால கட்டத்திலுள்ள கரு, இரத்தக் கட்டியைப் போன்று உள்ளது.

# படம் 1




**படம் 1:** இங்குள்ள இவ்விரு படங்களும், அட்டைப்பூச்சிக்கும் கருவின் சிசு வுக்கும் உள்ள ஒப்புமையை விளக்குகிறது. அட்டைப்பூச்சிப்படம், The Deve loping Humen என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. பிறகு அது Inte

---


[2] (The Developing Humen - மனித வளர்ச்சி எனும் நூல் பக்கம் 36

[3] (The Development as des ribed in Quran and sunna, Moore and others p, 36)

[4] (The Developing Humen. Moore And Persaud புதிப்பு5 பக்கம் 65)


grated princioles of Zoology என்னும் நூலின் மூலம் சரிபார்க்கப்பட்டது. கரு வின் வரைபடம் The Developing Humen (பதிப்பு 5 பக்கம் 73) என்ற நூல் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

# படம் 2




படம் 2: ‘அலக்கா’ நிலையிலுள்ள சிசு, தாயின் கருவறையில் ஒட்டிக்கொண்டி ருப்பதை இந்தப் படத்தில் காண்கிறோம். இந்த வரைபடம் The Developing Humen (ஐந்தாம் பதிப்பு பக்கம் 66)எனும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.


# படம் 3



**படம் 3 : நவீன நுண்ணோக்கிக் கருவி மூலம் பெரிதாக்கப்பட்ட இந்தப் படத்தில் அலக்கா நிலையில் (B மூலம் அடையாளம் காட்டப்பட்டு) உள்ள கரு, தாயின் கருவறையில் ஒட்டிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். (கருவின் வயது 15 நாட்கள். அதன் எடை 0.6 மி. கி) - நூல்: The Developing Humen (மூன்றாம் பதிப்பு, பக்கம் 66) இது, Histology, Leeson And Leeson எனும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டதாகும்.**

# படம் 4

## இரத்தக் குழாய்கள்




**படம் 4 : இது, இதயத்தின் ஆரம்ப நிலையையும் 'அலக்கா' நிலையிலான சிசுவின் இரத்தக் குழாய்களையும் விளக்கும் படம். மேலும் சிசுவின் வெளித் தோற்றமும் அதனை மூடியுள்ள உறையும் சேர்ந்து இரத்தக்கட்டிபோல் அமைந்துள்ளது. கருசிசுவின் அதிகப்படியான இரத்த ஓட்டம்தான் இதற்குக் காரணம். (நூல்: The Developing Hume கருவியல்) பதிப்பு 5 பக்கம் 65)**

---

**இவ்வாறாக அலக்கா எனும் வார்த்தையின் மூன்று அர்த்தங்களும் இந்த காலகட்டத்திலுள்ள சிசுவின் தன்மைகளுடன் ஒத்துப் போகின்றன.**

# வாயில் போட்டு மெல்லப்பட்ட பொருள்

**குர்ஆனிலுள்ள வரிசைப்படி அடுத்து வருவது, முள்ஃகத் எனும் நிலையாகும். முள்கத் என்றால் மெல்லப்பட்ட பொருள் என்று அர்த்தம். ஒருவர், கோந்துத் துண்டு ஒன்றை எடுத்து வாயில் போட்டு கடித்தால் அதன் பிறகு அதனை, முள்கத் நிலையிலுள்ள கரு சிசுவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் - முள்ஃகத் நிலையிலுள்ள கரு, வாயில் போட்டுக் கடிக்கப்பட்ட பொருளின் வடிவத்திற்கு ஒத்திருக்கிறது என்கின்ற முடிவுக்குத்தான் வருவார். இதற்குக் காரணம், கருச்சிசுவின் முதுகுத் தண்டுப்பகுதி, மெல்லப்பட்ட பொரு**

ளில் காணப்படும் பற்களின் பதிவுகளுடன் பெரும் அளவு ஒப்பாக இருப்பதே ஆகும். [5] வரை படம் 5 - 6 ஐப் பார்க்கவும்)

## படம் - 5




**படம் 5 : முள்ஃகா நிலையிலுள்ள - 28 நாட்களே ஆன கருவின் போட்டோவைத்தான் இங்கு காண்கிறீர்கள். இந்தக் கரு சிசுவின்நிலை, வாயில் போட்டு மெல்லப்படும் கோந்துக்கு ஒப்பாக உள்ளது. ஏனெனில் கரு சிசுவின் முதுகுத்தண்டுப் பகுதியில் உள்ள பதிவுகள், வாயில் போட்டு மெல்லப்படும்-பற்கள் பதிந்த அடையாளங்களுடன் பெரும்அளவு ஒப்பாக இருக்கிறது. (நூல்: The Developing Humen. புதிப்பு 5 பக்கம் 82 From professor Hideo Nishimura, Kyoto University, Kyoto, Japan)**

கடந்த பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இவற்றையெல் லாம் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் எப்படி சுயமாக அறிந்திருக்க முடியும்? அறிவியல் வல்லுனர்களேகூட இத்தகைய அறிவியல் நுட் பங்களைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு முன்னேறியிருப்பது,

[5] (நூல்: The Deve loping Humen, Moore பதிப்பு 5 பக்கம் 8)

**பிந்தைய காலத்தில்தான். அதுவும் புதிய புதிய சாதனங்களையும் நவீன நுண்ணோக்கிக் கருவியையும் பயன்படுத்தித்தான் இந்த உண்மை களைக் கண்டுபிடித்தார்கள். முந்தைய நூற்றாண்டுகளில் அப்படிப் பட்ட கருவிகள் எதுவும் கிடையாது!**

# படம் - 6




**படம் 6 : முள்ஃகா நிலையிலுள்ள கருவின் முதுகுத்தண்டுப் பகுதியையும் வாயில் மெல்லப்பட்ட பொருளையும் ஒப்புநோக்கும்பொழுது அவ்விரண்டிற்கும் மத்தியில் இரண்டு விதத்தில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம்:**

**ஒன்று: முள்ஃகா நிலையிலுள்ள கரு பற்றிய வரைபடம். இங்கே கருவின் முதுகுத் தண்டுப்பகுதி, பற்கள் பதிந்த அடையாளங்களுடன் ஒப்பாக இருப் பதை நாம் காணலாம். (The Developing Humen. Moore And Persaud புதிப்பு 5 பக்கம் 79)**

**இரண்டு: வாயில் போட்டு மெல்லப்பட்ட சுவிங்கத் துண்டின் போட்டோ**

# நவீன அறிவியலுடன் ஒப்பிடும் பொழுது ...

ஹாம் மற்றும் லீன்ஹோக் (Hamm And Leeuwnhock) ஆகிய இருவரும்தான், உலகில் முதன் முதலாக நவீன நுண்ணோக்கியைப் பயன்படுத்தி மனித விந்து அணுவைக் (Spermatozooa) கண்டு பிடித்த அறிவியல் நிபுணர்கள் ஆவர். இது நடந்தது 1677 ஆம் ஆண்டில்! (அதாவது, முஹம்மது நபி (ஸல்) அவர்களது காலத் திலிருந்து சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு) அதற்கு முன்னர் இவ்விரு அறிவியல் நிபுணர்களும் - ஒரேஒரு மனித விந்தணு, மனி தனை உருவாக்க வல்ல மிகமிகச் சிறிய பொருளைத் தாங்கியுள் ளது என்றும் அது, பெண்ணின் இனப்பெருக்கப் [6]பாதையில் செலுத் தப்பட்டவுடன் படிப்படியாக வளர்ச்சி அடைகிறது என்றும் தப்புந் தவறுமாகப் புரிந்து வைத்திருந்தார்கள்.

பேராசிரியர் கேத் எல் மூர் (Keith L Moore), உடற்கூறு மற்றும் கருவியல் துறைகளில் உலகளாவிய புகழ்பெற்ற நிபுணர் ஆவார். அவர்தான், The Developing Humen எனும் நூலின் ஆசிரியர். இந் நூல், சுமார் எட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் துறையில் முக்கிய மூலாதாரமாகத் திகழ்கிறது. தனி யொரு மனிதர் எழுதிய மிகச்சிறந்த நூல் என்று அமெரிக்க சிறப்புக் குழு மூலம் இந்நூல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் மூர், கனடா நாட்டின் டொராண்டோ பல்கலைகழகத்தில் (Univer sity Of Toronto, Canada) உடற்கூறு மற்றும் கருவியல் துறைகளில் பேரா சிரியராக உள்ளார். அங்கே அவர், மருத்துவக் கல்லூரியில் அடிப் படை அறிவியல் நுட்பங்களின் உதவி இயக்கநர் பதவியையும் வகித்துள்ளார். மேலும் உடலமைப்பியல் துறைத்தலைவராக 8 ஆண்டு பணிபுரிந்துள்ளார். மேலும் 1984 ஆம் ஆண்டு கனடாவில் உடலமைப்பியல் துறையில் வழங்கப்பட்ட சிறப்புமிக்க விருதைப் பெற்றுள்ளார். இது J.C.B. விருது என்று அழைக்கப்படுகிறது. Cana da Association Of Anatomists எனும் அமைப்பின் சார்பில் வழங் கப்படும் மிக உயரிய விருதாகும் இது. இன்னும் கனட - அமெரிக்க உடற்கூறு இயல் நிபுணர்களின் கூட்டமைப்பு, உயிரியல் விஞ்ஞான நுட்பங்கள் கூட்டமைப்பு போன்ற பல உலகளாவிய நிறுவனங் களின் இயக்குநராகவும் அவர் பொறுப்பு வகித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டில் சவூதி அரேபியா தம்மாம் மாநகரில் ஏழா வது மருத்துவ மாநாடு நடைபெற்ற பொழுது பேராசிரியர் மூர், கூறி னார்:

---

[6] The Developing Humen, Moore and others 5 ஆம் பதிப்பு. பக்கம் 9

“மனிதக் கரு வளர்ச்சி பற்றி குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விவரங்களைத் தெளிவுபடுத்துவதற்கு உதவி செய்யும் பாக்கியம் பெற்றது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். மனிதக் கரு வளர்ச்சி தொடர்பாக எடுத்துரைக்கப்பட்ட இந்த விஷயங்கள், அல்லாஹ்விடம் இருந்து வஹி மூலமாகத்தான் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்பது எனக்குத் தெளி வானது. ஏனெனில் அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் இந்த அறிவியல் நுட்பங்களெல்லாம் கண்பிடிக்கப்பட்டன. இது, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என்பதை நிரூபிக்கிறது. [7]

இந்த அடிப்படையில் பேராசிரியர் மூர் அவர்களிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டது: ‘திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வாக்கு தான் என்று நீங்கள் நம்புகிறீர்களா? ’

மூர் பதிலளித்தார்: ‘இதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எந்தக் கஷ்டமும் கிடையாது’ (இதுதான் உண்மை வீடியோ கேஸட்)

இன்னொரு மாநாட்டில் பேராசிரியர் மூர் கூறினார்: ‘மனிதக் கருவின் காலகட்டங்கள் தெளிவற்றவையாக உள்ளன. காரணம் என்னவெனில், கரு, படிப்படியாக வளர்ந்து வரும்போது நிகழும் தொடர்ச்சியான நிலைமாற்றங்களே காரணமாகும். அதனால் திருக் குர்ஆனிலும் ஹதீஸிலும் இடம்பெற்றுள்ள சொற்களைப் பயன்படுத்தி (கரு வளர்ச்சியை) வகைப்படுத்தும் புதியதொரு முறையினை ஏற் படுத்தலாமே என்றொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இந்தக் கருத்து எளிதானது, பயன்மிக்கது (அல்லது ஒருங்கிணைந்தது) ஆகும். மேலும் கரு வளர்ச்சி தொடர்பாக தற்போதுள்ள கருத்து களுடன் ஒத்துவரக்கூடியதும் ஆகும்.

கடந்த நான்காண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட - அதாவது, குர்ஆன் ஹதீஸில் சொல்லப்பட்ட விஷயங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆழமான ஆய்வுகள் மூலம், மனிதக்கரு பற்றி வகைப்படுத்தும் புதிய முறை கண்டுபிடித்துள்ளது. அது, கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் பதிவாகியுள்ள விவரங்களுடன் ஒப்பிட்டால் மிக வும் திகைப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.

அதேநேரத்தில் கரு தொடர்பான அறிவியலுக்கு அடித்தளம் அமைத்தவரான அரிஸ்டாடில், கி. மு. நான்காம் நூற்றாண்டில்

---

[7] ‘இதுதான் உண்மை’ எனும் பெயரில் வெளியாகியுள்ள வீடியோ கேஸட்டில் இருந்து எடுக்கப்பட்டதாகும் இது. விரும்பும் சகோதரர்கள், www.islam-guide. com\ truth எனும் இணைய தளத்தில் இருந்து இதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது அதை நேரடியாகக் கேட்டு மகிழலாம்)

கோழிமுட்டையை வைத்து நடத்திய ஆய்வுகளின் மூலம் - கோழியின் விந்து, பல கட்டங்களில் வளர்ந்து வருகிறது என்று கண்டு பிடித்தார். ஆனாலும் இந்தக் காலகட்டங்களைக் குறித்து எந்த விவரங்களையும் அவர் முன்வைக்கவில்லை. கருவியல் வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ளப்பட்டது போன்றே மனிதக் கருவின் வளர்ச்சி நிலைகள் பற்றியும் வகைப்படுத்தல் பற்றியும் - 20 ஆம் நூற்றாண்டு வரையில் மிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. இதன் காரணத்தால் மனிதக்கரு பற்றி திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்ட வர்ணனை, ஏழாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் நுட்பங்களை அடிப்படையாகக்கொண்டு அமையப் பெற்றதாக ஆக முடியாது. எனவே அறிவுப்பூர்வமாகத் தெரிய வருவது என்னவெனில், இந்த வர்ணனைகள் ரீதியிலான விளக்கம், அல்லாஹ்விடம் இருந்து வஹியின் மூலம்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டுள்ளது,. இந்த விவரங்களை நபியவர்களே சுயமாக தெரிந்திருக்க முடியாது என்று தெரிய வருகிறது. ஏனெனில் அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத (உம்மி) மனிதராக இருந்தார்கள். அறிவியல் ரீதியிலான பயிற்சியைப் பெறும் எவ்விதமான வசதியும் அவர்களிடம் இருந்ததில்லை' (இதுதான் உண்மை வீடியோ கேசட்)

# 2 - குர்ஆனும் மலைகளும்

Earth - பூமி என்று ஒரு நூல் உள்ளது. இந்நூல்தான், உலகில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் அடிப்படை மூலாதாரமாகக் கரு தப்படுகிறது. இதை எழுதிய இரண்டு ஆசிரியர்களில், பேராசரிரியர் ஃபிராங் பிரஸ்(Professor Emeritus Frank Press) என்பவர் ஒருவர். இவர், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டரின் அறிவியல் ஆலோசகராக இருந்துள்ளார். பிறகு 12 ஆண்டுகள் அமெரிக்காவில் உள்ள (Academy of Science) தேசிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இந்நூலில் பேரா சிரியர் ஃபிராங் பிரஸ் கூறுகிறார்:

கீழ்நோக்கிய வேர்கள் மலைகளுக்கு உண்டு. [8] அவை பூமியினுள் ஆழப்பகுதிகளில் புதைந்திருக்கின்றன. பிறகு மலைகளுக்கு ஓர் வடிவமைப்பு உள்ளது. முளைகளுக்கு ஒப்பான வடிவமைப்பாக அது உள்ளது. (பார்க்க: படங்கள் 7, 8, 9)


---

[8] (நூல்: Earth , Press and Siever, பக்கம் 435, மேலும் பார்க்க: Science, Tarbuuck And Lutgens, பக்கம் 157)

மலைகளைப் பற்றிய திருக்குர்ஆனின் வர்ணனை இவ்வாறுதான் அமைந்துள்ளது. உயர்வும் மேன்மையும் மிக்க அல்லாஹ் திருக் குர்ஆனில் கூறுகிறான்:


'நாம் பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா? மேலும் மலைகளை முளைகளாக ஆக்கவில்லையா?' (78 : 6 - 7)

## படம் - 7





படம் 7: பூமியின் மேற்பறப்புக்குக் கீழே ஆழமாக நீளும் வேர்கள் மலை களுக்கு உள்ளன. (நூல்: Earth, Press And Siever பக்கம் 413)

## படம் - 8



**படம் 8: திட்டமிடல் பிரிவு, முளைகளைப் போலுள்ள மலைகள். பூமிக்குக் கீழே ஆழமாகப் புதைந்துள்ள வேர்கள் அம்மலைகளுக்கு உள்ளன. (நூல்: Anatomy Oh The Earth, Cailleux பக்கம் 220)**

## படம் - 9




**படம் 9: மலைகள், தமது ஆழமான வேர்களின் காரணத்தால் தோற்றத்தில் முளைகளுக்கு எவ்வாறு ஒப்பாகின்றன என்பதை இந்தப்படம் விளக்குகிறது! (நூல்: Earth Science, Tarbuuck And Lutgens)**

---

**பூமிக்குக் கீழே ஆழப்பதிந்த வேர்கள், மலைகளுக்கு உண்டு என்று நவீன புவியியல் நுட்பங்கள் நிரூபித்திருக்கின்றன (என்பதை படம் 9 ல் பார்த்தோம்.) பூமியின் மேற்பரப்பில் மலைகள் எழுந்து நிற்கும் உயரத்தின் அளவை விட பன்மடங்கு ஆழமாகப் பூமியினுள் இந்த வேர்கள் பதிந்திருக்க சாத்தியம் உண்டு.** [9]

**இந்த ரீதியில், இந்தத் தகவல்களுடன் இணைத்து மலைகளை வர்ணிப்பதற்கு மிகவும் பொருத்தமான-நுட்பமானதொரு வார்த்தை, முளை என்பதுதான். ஏனெனில் அந்த 'முளை'யின் பெரும்பாலான பகுதி, புவியின் மேற்பரப்புக்குக் கீழே மறைந்திருக்கிறது. அறிவியலின் வரலாறு நமக்குச் சொல்லித் தருகிறது. அதாவது, இந்த முளைகளைப் பற்றி அறியத் தருகின்ற மலைகள் தொடர்பான**

---

[9] **(The geological Concept of Mountains in the Quran, El - Naggar P 5)**

கருத் தோட்டம் 1865 ஆம் ஆண்டில்தான் - ஆஸ்தான கோளியல் அறிஞர் சர் ஜோர்ஜ் (Sir George Airy) என்பவரின் மூலம்தான் அறியப் பட்டது,! [10]

பூமியின் மேற்பரப்பு, அதிராமல் நிலைபெற்றிருப்பதற்கு மலைகளின் பங்களிப்பு முக்கியமாக உள்ளது. ஏனெனில் அவைதான் பூகம்பம் ஏற்படாமல் தடுக்கின்றன. [11]

குர்ஆனில் அல்லாஹ் கூறியிருக்கிறான்: 'மேலும் பூமியில் மலை களை (முளைகளாக) அவன் ஊன்றினான்.,உங்களோடு சேர்ந்து அது சாய்ந்துவிடக்கூடாது என்பதற்காக! அவனே ஆறுகளையும் ஓடச்செய்தான். இயற்கைப்பூர்வமான பாதைகளையும் அமைத்துத் தந்தான்' (16 : 15 - 16)

பூமியின் மேற்பரப்பு தொடர்பான நவீன விஞ்ஞான முடிவுகள் நிரூ பித்துள்ளது: பூமியை அதிராமல் நிலைப்படுத்தும் பணியை, மலை கள் செய்கின்றன. இந்தப் பங்களிப்பு தொடர்பான விவரங்களை மனிதன் புரிந்து கொள்ளத் தொடங்கியது எப்பொழுது எனில், பூமி யின் மேற்பரப்பு தொடர்பான நவீன அறிவியலின் சோதித்து அறியும் பணிகளினூடேதான் - 1960 களின் காலகட்டத்தில் தான் புரிந்து கொள்ளத் தொடங்கி னான். [12]



முஹம்மது நபி (ஸல்) அவர் களது காலத்தில் வாழ்ந்த எந்த ஒரு மனிதனுக்கும் - மலைகளின் உண்மையான வடிவமைப்பு என்ன என்று அறிந்து கொள்வது சாத் தியமாக இருந்ததா? தன் முன் னால் உறுதியாக, பிரமாண்டமாக எழுந்து நிற்கும் இந்த மலைகள், பூமியின் ஆழங்கள் வரையில் நீளுகின்றன என்றும் - இன்றைய

---

[10] (Earth, Press And Siever பக்கம் 435, மேலும் பார்க்க: The geological Concept of Mountains in the Quran, பக்கம் 5)

[11] (The geological Concept of Mountains in the Quran, பக்கம் 44 -45)

[12] (The geological Concept of Mountains in the Quran, பக்கம் 5)

அறிவியலாளர்கள் நிரூபித்துள் ளதைப் போன்று - அவற்றிற்கு வேர்கள் உண்டு என்றும் மனிதனால் சிந்தித்துப்பார்க்கும் நிலை இருந்ததா? இந்த ரீதியில், குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்தக் கருத்துகள் உண்மைதான் என்று நவீன புவியியல் தகவல்கள் உறுதிப்படுத்தி உள்ளன!

# 3 - குர்ஆனும் பேரண்டத்தின் தொடக்கமும்

நவீன விண்ணியல் கண்டுபிடிப்பின் இருபிரிவுகளாக உள்ள -நிரூ பிக்கப்பட்ட ஆய்வும், கொள்கை அளவிலான ஆய்வும் விளக்கித் தருவது என்னவெனில், ஒரு யுக காலத்திற்கு முன்பு இந்தப் பிர பஞ்சம் முழுவதும் வெறும் புகைக்கூட்டமாகவே இருந்தது! (அதா வது. அடர்த்திமிக்க, வெப்பமான, மிகவும் கருகருத்த வாயுக்கூட்ட மாக இருந்தது) [13]

இது, ஆக்கப்பூர்வமான - உறுதிசெய்யப்பட்ட நவீன விண்ணிய லின் ஓர் அடிப்படை ஆகும். இன்றைக்கு அறிவியலாளர்கள், இத்த கைய வாயுவின் சிதறல்களால் ஆன நட்சத்திரங்களை நேரடியாகக் கண்ணெதிரில் காணும் வசதியைப் பெற்றிருக்கிறார்கள். (பார்க்க: படம் 10- 11)

இந்தப்பேரண்டம் முழுவதும் இந்த வாயு எனும் மூலப்பொருளின் உள்ளே அமைந்திருந்தது போன்றுதான், இப்பொழுது இரவில் நீங் கள் காணுகின்ற பிரகாசமான நட்சத்திரங்கள் அனைத்தும் அந்த வாயுவில் உள்ளடங்கி இருந்தன. குர்ஆனில் அல்லாஹ் கூறியுள் ளான்: ‘இறைநிராகரிப்பாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா, இந்த வானங்களும் பூமியும் ஒன்றினுள் ஒன்றாக உள்ளடங்கி இருந்தது., பிறகு அவற்றைத் தனித்தனியாக நாம் பிரித்தோம் என் பதை?’ (21: 30)

டாக்டர். அல்ஃபர்ட் குரோனர் (Alfred Kroner) என்பவர் உலகில் புவியியலில் மிகவும் பிரபலமான அறிவியலாளர் ஆவார். அவர் புவியி யல் துறையின் பேராசிரியராகவும் ஜெர்மெனி மைன்ஸ் நகரிலுள்ள ஜோஹன்ஸ் கொட்டன்பர்க் பல்கலை கழகத்தில் (INSTITUTE OF GEOSECIE NCES, JOHANNES GUTENBERG UNIVESITY, MAINZ, GERMANY) புவியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் புவியியல் துறைத் தலைவராகவும் இருக்கிறார். அவர் கூறினார்:

---

[13] The first three minutes, a modern view of Origin of the Universe, Weinberg p 94 – 105

**'இந்த அறிவியல் நுட்பங்களை முஹம்மது, எங்கிருந்து கொண்டு வந்தார்கள்? என்று நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம் ...**

**நான் கருதுகிறேன், அதாவது, பேரண்டத்திற்குரிய பொதுவான அடிப்படைக் கருத்துரு போன்ற ஏதேனும் ஒரு கருத்தை அறிந்து கொள்வதற்கான சாத்திய நிலையை அடைவது, பெரும்பாலும் அவ ருக்கு (முஹம்மது நபிக்கு) அசாத்தியமான விஷயம் ஆகும். உண் மையில் அது, முடியாத ஒரு காரியமே ஆகும்.**

**ஏனெனில், இதுதான் உண்மைநிலை என்று அறிவியலாளர்கள் கண்டுபிடித்ததுகூட பிந்தைய ஒரு சில ஆண்டுகளில்தான்! அதுவும் மிகவும் சிக்கலான நவீன விஞ்ஞான தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தித்தான் கண்டுபிடித்தார்கள்!**


**மேலும் அவர் கூறினார்: 'அணுகுண்டு பௌதியல் தொடர்பாக கடந்த 14 நூற்றாண்டுகளாக எதுவும் தெரியாமல் இருக்கும் ஒரு மனிதர், தனது சொந்த அறிவைக்கொண்டு மட்டும் -இந்த வானங் களும் பூமியும் ஒன்றினுள் ஒன்றாக உட்ளடங்கிப் பிணைந்து ஒரே மூலப் பொருளாக இருந்தது என்று கண்டுபிடிக்கும் நிலையை அடைந்திட முடியாது என்பதே எனது கருத்தாகும். (ஆதாரம்: 'இதுதான் உண்மை' வீடியோ கேஸட்)**

**படம் - 10**



**படம் 10: வாயும் புழுதியும் கொண்ட மேகத்தினாலான புதிய நட்சத்திரம் Nebula. இப்பேரண்டம் முழுவதன் தொடக்க நிலையாக இருந்த புகைக் கூட்டத்தின் மிச்சமீதிப் பகுதியாகும் இது. (The Space Atlas, Heather and Henbest page 50)**

**படம் - 11**



**படம் 11 : மேக நதி (Lagoon Nebula), வாயு, புழுதி ஆகிய வற்றின் மேகக் கூட்டமாகும் இது. இதன் உள்வட்டத்தின் தூரம், 60 ஆண்டு கால ஒளிப்பய ணத் தூரமாகும். புதிதாக அமைந்த - உச்சநிலை வெப்பம் கொண்ட நட்சத் திரங்களில் இருந்து வரும் புற ஊதாக்கதிர்கள், அந்த மேகக்கூட்டத்தை மேலெழச் செய்கின்றன. (HORIZONS EXPLORING THE UNIVERSE, SEEDS PLATE 9 ASOOCIATION OF UNIVERSITIES FOR RESEACH IN ASTRONOMY, INC)**

# 4 - குர்ஆனும் மனித மூளையும்

**கஅபா ஆலயத்தில் தொழக்கூடாது என அண்ணல் நபி(ஸல்) அவர்களைத் தடுத்த இணைவைப்பாளர்களில் ஒருவனைப் பற்றி குர்ஆனில், அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:**


**'அவ்வாறன்று! இப்படிச் செய்வதில் இருந்து அவன் விலகிக் கொள்ளவில்லை எனில், திண்ணமாக நாம், நாஸியாவை (நெற்றி யைப்) பிடித்து இழுப்போம், பொய்யுரைத்த, கடும் தவறிழைத்த நாஸியாவை (நெற்றி முடியைப் பிடித்து இழுப்போம்!)' (96:15- 16)**

**அரபி மொழியில், அந்நாஸியத் எனும் சொல்லுக்கு நெற்றிப் பகுதி என்று பொருள். அல்லாஹ், குர்ஆனில் 'பொய்யுரைக்கக் கூடி யது, தவறிழைக்கக்கூடியது' என்றெல்லாம் நெற்றியைக் குறித்து ஏன் வர்ணிக்கிறான்? பொய்யுரைக்கக் கூடியவன், தவறிழைக்கக் கூடியவன் என்று மனிதனைத்தானே**

குறிப்பிடவேண்டும்., அவனை ஏன் குறிப்பிடவில்லை? பொய்யுரைத்தல் -தவறிழைத்தல் ஆகியவற் றிற்கும் நெற்றிக்கும் என்ன தொடர்பு?

நாம், நெற்றிப் பகுதியிலிருந்து தலையை நோக்கிப் பார்த்தால், முன்னெற்றியின் பாகமே மூளையின் பிரத்தியேகப் பகுதியாக இருப்ப தைக் காணலாம். (பார்க்க படம் 12)

## படம் 12




படம் 12 : மூளையின் தொங்கு சுருள்களின் பாதி வட்டத்தின் வலது பகுதியின் பணி மனைகளாகும் இவை. முன்நெற்றிப் பகுதியானது, மூளைப்பகுதியுடன் சேர்ந்தாற்போல் உள்ள தாடை எலும்புகளுக்கு மேலே அமைந்துள்ளது.

தலையின் இந்த முன்பகுதிக்குரிய பணி என்ன என்பது பற்றி, உடலமைப்பியல் கல்வி (Physiology) என்ன சொல்கிறது என்று பார்ப்போம். உடலமைப்பியலின் - உடற்கூறுயியலின் அடிப்படைகள் (Essventials Of Anatomy And Physiology) எனும் நூல் கூறுகிறது:

‘உந்தச்செய்தல், திட்டமிடுதலில் தொலைநோக்கு, விரைந்து இயங்கும் உணர்வு ஆகியன, மூளையின் முன்பகுதி தொங்கு சுருள் களில்தான் உருவாகின்றன. அதுதான் முன்நெற்றிப் பகுதி

ஆகும். அதுதான், தாடை எலும்புகளுக்கு மேலுள்ள பகுதி ஆகும்' [14]

மேலும் அந்நூல் கூறுகிறது: 'உந்துணர்வை ஏற்படுத்துவதில் முன்னெற்றிப் பகுதிக்குத் தொடர்பு இருப்பதன் ரீதியில், இந்தப் பகுதிதான் வரம்பு மீறலுக்கான பணி மையமாகவும் இருக்கும் என்று நம்பப்படுகிறது. அப்படியானால் மூளையின் இந்த முன்பகுதிதான் - திட்டமிடுதலுக்கும் உந்தித்தள்ளும் உணர்வை ஏற்படுத்துவதற்கும் நன்மை தீமையைச் செயல்படுத்த விரைவதற்கும் பொறுப்பேற்கும் உறுப்பாக இருக்கிறது ... பொய் அல்லது உண்மை பேசுவதற்கும் அதுதான் பொறுப்பு ஏற்கக்கூடியதாக இருக்கிறது ... [15]

இந்த ரீதியில் ஒருமனிதன் பொய் சொல்லவோ பாவம் செய்யவோ முனையும் பொழுது இந்த முன்னெற்றிப்பகுதி மூளையை - பொய் பேசக்கூடியது என்றும் பாவம் செய்யக்கூடியது என்றும் வர்ணிப்பது பொருத்தமான ஒன்றாக உள்ளது, 'பொய்யுரைத்த, கடும் தவ றிழைத்த, அந்த நெற்றி' என்று குர்ஆன் குறிப்பிடுவது போன்று!

அறிவியல் வல்லுனர்கள், இந்த முன்னெற்றிப் பகுதி மூளையின் பிரத்தியேகப் பணிகளைப்பற்றி கடந்த 60 ஆண்டுகளில்தான் கண்டு பிடித்துள்ளார்கள். இவ்வாறு பேராசிரியர் மூர் கூறியுள்ளார்.[16]

# 5 - குர்ஆனும் கடல்களும் நதிகளும்

மாறுபட்ட இரண்டு கடல்கள் சந்திக்கின்ற இடங்களில் -அவற்றிற் கிடையே ஒரு தடுப்பு உள்ளது என்று தற்கால அறிவியல் கண்டு பிடித்துள்ளது. இந்தத் தடுப்பு அவ்விரண்டு கடல்களையும் பிரிக்கி றது. அதே நேரத்தில் - வெப்பம், உவர்ப்பு, அடர்த்தி ஆகிய தனித் தன்மைகள், அவற்றிற்கே உரிய விகிதாச்சாரத்துடன் ஒவ்வொரு கடலிலும் பாதுகாப்பாக இருப்பதுடனேயே அந்தப் பிரிப்பு அமைந் துள்ளது. [17]

உதாரணமாக, மத்திய வெண்கடல், அட்லாண்டிக் பெருங்கட லில் தாரிக் மலையினூடாகக் கலக்கிறது. அப்பொழுது மத்தியக் கடல், அட்லாண்டிக் பெருங்கடலினுள் சுமார் 100 மீட்டர் அளவு

---

[14] (Essentials Of Anatomy And Physiology) Seely and others page 211 Also see The Human Nervous System Noback and others page 410 - 411)

[15] (Essentials Of Anatomy And Physiology) Seely and others page 211)


[16] (The Scientific Miracles in The front of the head, page 41)

[17] (Principles Of Oceanogrophy, Davis page 92 – 93)

**ஆழத்தில், நூற்றுக்கணக்கான கி.மீ. தூரம் உள்ளே செல்கிறது. அப்போதும் வெப்பம், உவர்ப்பு, குறைந்த அடர்த்தி ஆகிய தனது தனித் தன்மைகளைப் பாதுகாப்பாகத் தக்கவைத்துக் கொண்டே செல்கிறது. அந்தக்கடல் நீர், இந்த ஆழத்திலும் தனித்தன்மை களுடன் நீடிக்கிறது.** [18]

**இந்தக் கடல்களில், உயரமான அலைகள், உயர் மின்னழுத் தங்கள், உயர்தல் - தாழ்தல் ஆகியவை இருப்பதுடனேயே அவற் றின் நீர்கள் ஒன்றோடொன்று கலப்பதுமில்லை.,தடுப்பைக் கடப்பது மில்லை! (படம் 13 ஐப் பார்க்கவும்)**

## படம் 13




**படம் 13: மத்திய வெண்கடலின் நீர், ஜபல்தாரிக் ஊடாக அட்லாண்டிக் பெருங் கடலினுள் கலக்கிறது. அப்பொழுது வெப்பம், உவர்ப்புத் தன்மை, குறைந்த பட்ச அடர்த்தி ஆகிய தனது தனித்தன்மைகளைப் பாதுகாப்பதுடன் அதில் சென்று கலக்கின்றது. அவ்விரண்டிற்கும் மத்தி**

[18] **(Principles Of Oceanogrophy, Davis page 92, 93)**

யில் தடுத்துக்கொண்டிருக்கும் தடுப்புதான் அதற்குக் காரணம் ஆகும். (வெப்பநிலை செல்சியஸ் விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது)

---

பரஸ்பரம் சந்திக்கக்கூடிய ஆனால் எல்லை மீறாத இரு கடல் களுக்கு மத்தியிலுள்ள தடுப்பைப் பற்றி திருக்குர்ஆனில் ஓரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

'அவன் இரு கடல்களையும் சங்கமிக்கச் செய்தான். ஆயினும் அவ்விரண்டிற்கும் இடையே ஒரு தடுப்பு உள்ளது. அதனை அவை மீறுவதில்லை' (55 : 19 -20)

ஆயினும் குர்ஆன், இனிமையான தண்ணீர், உவர்ப்பும் கசப்பும் கலந்த தண்ணீர் ஆகிய இரண்டிற்கும் மத்தியிலுள்ள தடுப்பைப் பற்றி குறிப்பிடும்பொழுது 'பர்ஸக்' பிரிக்கக்கூடியது எனும் வார்த் தையுடன் 'உறுதியான தடுப்பு' (ஹிஜ்ரன் மஹ்ஜூ ரா) என்கின்ற இன்னொரு வார்த்தையையும் பயன்படுத்துகிறது. அந்த வசனம் வருமாறு:

وَهُوَ الَّذِى مَرَجَ الْبَحْرَيْنِ هَذَا عَذْبٌ فُرَاتٌ وَهَذَا مِلْحٌ اُجَاجٌ

وَجَعَلَ بَيْنَهُمَا بَرْزَخًا وَحِجْرًا مَحْجُوْرًا (الفرقان الآية : ٥٣)

'மேலும் இரு கடல்களை ஒன்றிணைத்து வைத்திருப்பவன் அவனே. ஒன்று சுவையும் இனிமையும் வாய்ந்தது., மற்றொன்று, உப்பும் கசப்பும் கலந்தது. மேலும் இரண்டுக்குமிடையே திரை - வலுவான தடுப்பு ஒன்று உள்ளது. (ஒன்றோடொன்று கலந்து விடாதவாறு அவ்விரண்டையும் அது தடுக்கிறது)' (25 : 53)


யாரேனும் ஒருவர் இப்படி ஒருகேள்வி கேட்கலாம். இனிமையான நீரையும் உவர்ப்பான நீரையும் தனித்தனியாகப் பிரிக்கக்கூடிய ஒரு தடுப்பு உண்டென்று அல்லாஹ் கூறுகிறான். ஆனால் இரு கடல் களுக்கு மத்தியில் பிரிக்கக்கூடியதைப் பற்றி குறிப்பிடும் பொழுது அப்படிக் குறிப்பிடவில்லையே, ஏன்?

இன்றைய அறிவியல் புதிதாகக் கண்டுபிடித்துள்ள உண்மைகள் என்ன வெனில், கடலில் நதிகள் சந்திக்கும் முகப்புத்துவாரத்தில் நல்ல தண்ணீரும் உப்புத் தண்ணீரும் கலக்கும் போதுள்ள நிலை, இரு கடல்கள் சந்திக்கும் இடங்களிலுள்ள நிலையிலிருந்து பெரும் அளவு வித்தியாசப்படுகிறது.

மேலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது: கடலில் நதிகள் கலக்கும் பொழுது உப்புத் தண்ணீரை விட்டும் நல்ல தண்ணீரை பிரித்துக் காட்டுவது எது என்றால், Pycnocline என்கிற தண்ணீர் கொட்டும்

பகுதிதான் பிரித்துக்காட்டுகிறது. அது, பிரத்தியேக அடர்த்தியைப் பெற்றுள்ளது., தொடர்ச்சி இல்லாமலும் உள்ளது. இரு நீரடுக்கு களைத் தனியே பிரித்துக்கொண்டும் இருக்கிறது. இவ்வாறு பிரிந்து நிற்கும் பகுதியிலுள்ள நீருக்கு, வித்தியாசமான உவர்ப்புத் தன்மை உள்ளது. அந்த உவர்ப்பு, நல்ல தண்ணீர் - உப்புத் தண்ணீர் [19] ஆகிய இரண்டை விட்டும் வித்தியாசமாக இருக்கிறது. (படம் 14 பார்க்கவும்)

## படம் 14




படம் 14: நீளவாக்குக் கோடு, நதிமுகப்புத் துவாரத்திலுள்ள நீரில் ஜீரோ டிகிரி உப்பு இருப்பதை இந்தப் படம் விளக்குகிறது. இதில், நல்ல தண்ணீருக்கும் உப்புத்தண்ணீருக்கும் மத்தியிலுள்ள இந்தத் தனிப் பகுதியை (வேறுபடுத்தும் பகுதியை) நாம் பார்க்கிறோம். (Introdu ctory Oceano graphy, பக்கம் 30)

---

இந்த அறிவியல் நுட்பங்கள் அண்மையில்தான் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அதுவும் நீரின் வெப்பம், உப்பு, அடர்த்தி ஆகியவற்

---

[19] (Oceanography கடல் பற்றிய அறிவியல், Gross, p. 19 20) மேலும் பார்க்க: Oceanography, Thurman, pp 300 – 301)

றின் தரத்தையும் ஆக்ஸிஜன் கரையும் தன்மையையும் அளவீடு செய்யும் அதிநவீன கருவிகளைப் பயன்படுத்தியே இவ்விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சங்கமிக்கும் இரண்டு கடல்களுக்கு மத்தியிலுள்ள வேறுபாட்டை மனிதனின் வெறும் கண்களால் மட்டும் பார்க்க முடியாது. அவை நமக்கு எப்படிக்காட்சி அளிக்கின்றன எனில், வெப்பமும் உவர்ப்பும் அடர்த்தியும் ஒரே தொடர்ச்சியாக இருப்பது போன்றுதான் காட்சி அளிக்கின்றன. மேலும் நதிகளின் நீர் கலக்கும் முகப்புத் துவாரங்களில் - இனிமையான நீர், உப்பு நீர், வேறுபாடான நீர் என்று தண்ணீர் மூன்று வகைகளாகப் பிரிவதையும் மனிதனின் கண்களால் பார்க்க முடியாது.

## 6 - ஆழ் கடல்கள் - உட்புற அலைகளைப் பற்றி குர்ஆன் கூறுவது என்ன?

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

'அல்லது (நிராகரிப்பாளர்களின் செயல்கள்) ஆழ்கடலின் இருள்களைப் போலுள்ளன. அதனை ஓர் அலை மூடியுள்ளது. அதற்கு மேல் மற்றொரு அலை., அதற்கு மேல் மேகம்! (இப்படியாக) இருளுக்கு மேல் இருள்கள் என எங்கும் இருள் மயம்! மனிதன் தனது கையை நீட்டினால் அதைக்கூட அவனால் பார்க்க முடியாது. யாருக்கேனும் அல்லாஹ் ஒளியை வழங்கவில்லை எனில், பிறகு அவனுக்கு வேறு எந்த ஒளியும் கிடையாது! ' (24 : 40)

இவ்வசனங்களில் -

கடல்களில் - ஆழமான பெருங்கடல்களில் உள்ள இருள்களைப் பற்றி குர்ஆன் வர்ணிக்கிறது. எவ்வாறெனில், ஒருமனிதன் கடலின் ஆழங்களில் தனக்கு முன்னால் தனது கையை நீட்டினால் அதைக் கூட அவனால் பார்க்க முடியாத அளவுக்கு இருள் மண்டியுள்ளது என்று வர்ணித்துக்கூறுகிறது. கடல்களிலும் ஆழமான பெரும் சமுத்திரங்களிலும் சுமார் 200 மீட்டருக்கு கீழே இருள்கள் உள்ளன. இவ்வளவு ஆழத்திற்குக் கீழே பெரும்பாலும் எவ்விதமான ஒளியும் கிடையாது. (படம் 15 ஐப் பார்க்கவும்) எனவே அதற்கும் கீழே 1000 மீட்டர்க்கு கீழே பொதுவாக எவ்வித ஒளியும் இருக்க முடியாது. [20] மனிதன், நீர்மூழ்கிக் கப்பல்கள், பிற உப கரணங்களின் துணையின்றி 40 மீட்டருக்கு கீழே மூழ்கிச் செல்ல முடியாது.


அறிவியல் வல்லுனர்கள், அண்மையில்தான் இந்த இருள்களைக் கண்டுபிடித்தார்கள். அதுவும், பெரிய பெரிய சமுத்திரங்களில் மூழ்

[20] (Oceans Elder and Pernetta page 27

குவதற்கு வழிவகை செய்துகொடுத்த நீர்மூழ்கிக் கப்பல்கள், பிற உபகரணங்கள் ஆகியவற்றின் துணையுடன் கண்டுபிடித்தார்கள்.

‘...ஆழ்கடலின் இருள்களைப் போலுள்ளன., அந்தக் கடலினை ஓர் அலை மூடியுள்ளது. அதற்கு மேல் மற்றொரு அலை., அதற்கு மேல் மேகம்!’ என்கின்ற முன் சென்ற வசனத்தின் மூலம் - நாம், பின்வரும் இந்த விவரங்களையும் புரிந்து கொள்ளலாம். அதாவது, ஆழ் கடல்களின் அடிஆழத்திலுள்ள - பெரும் சமுத்திரங்களின் அடிஆழத்திலுள்ள நீர்கள், பல அலைகளால் மூடப்பட்டுள்ளன., அவற்றின் மேலே இன்னும் பல அலைகள் உள்ளன என்பதையும் புரிந்து கொள்ளலாம்!

## படம் 15




படம் 15: சூரிய ஒளியின் 3 மற்றும் 30 சதவிகிதம், கடற்பரப்பின் மீது எதிரொலிக்கிறது. அப்பொழுது சூரிய ஒளிக்கற்றையின் நுட்பமான ஏழு கலர்களும் ஒன்றன் மேல் ஒன்றாக முதல் 200 மீட்டரில் முழுமையாகப் படிகிறன்றன, நீல ஒளி நீங்கலாக! (Oceans, Elder and Pernetta, பக்கம் 27)


---

இரண்டாவதான அலைகள் கூட்டம், கடலின் மேற்பரப்பிலுள்ள அலைகளாகும் என்பது வெளிப்படை,. நாம் காண்பதைப் போன்று! ஏனெனில் இந்த இரண்டாவது அலைகக்கூட்டங்களின் ஆர்ப்பரிப்புக்கு மேலே மேகம் உள்ளது என்றுதான் இவ்வசனம் குறிப்பிடுகிறது.

ஆனால் முந்தைய அலைக் கூட்டத்தின் நிலைமை என்ன? அறிவியல் வல்லுனர்கள், உட்புற அலைகள் உண்டு என அண்மையில் கண்டுபிடித்துள்ளார்கள். (அவை,பல்வேறு அடர்த்திகளை உடைய

**தொடர் அடுக்குகளுக்கு மத்தியிலுள்ள அடர்த்தியின் காரணத்தி னால் ஏற்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது)** [21] **(படம் 16 ஐப் பார்க்கவும்)**

# படம் 16




**படம் 16: உட்புற அலைகள். இவை பல்வேறு அடர்த்தித் தன்மைகளுடைய ஈரடுக்குத் நீர்களுக்கு மத்தியிலுள்ளன. அதிக அடர்த்தியுடைய ஓரடுக்குக் கீழே உள்ளதாகும். இரண்டாவது அடுக்கு அடர்த்தி குறைவானதாகும். அது மேலே உள்ளதாகும். (Oceanography பக்கம் 204)**

**கடல்களிலும் பெரும் சமுத்திரங்களிலும் ஆழமான நீர்களை மூடி யுள்ள உட்புற அலைகள் எழுவதற்கான காரணம் என்னவெனில், அடி ஆழத்திலுள்ள நீர்கள், அவற்றின் மேலே உள்ள நீர்களின் அடத்தியை விடவும் கூடுதலான அடர்த்தியைப் பெற்றுள்ளன என்ப தாகும். அதனால்தான் கடலின் மேற்பரப்பில் அலைகள் எழுந்து ஆர்ப்பரிப்பதுபோல் உட்புறங்களிலும் அலைகள் எழுந்து ஆர்ப்பரிக் கின்றன. மேலும் எவ்வாறு மேற்பரப்பின் அலைகள் சிதறுண்டு போகின்றனவோ அவ்வாறு உட்புற அலைகளும் சிதறுண்டு போவ தற்கும் சாத்தியம் உண்டு.**

**ஆனால் ஒரு வித்தியாசம்: உட்புற அலைகளை மனிதனின் கண் களால் பார்க்க முடியாது. அவற்றைக் கண்டறிவது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வெப்பம், உப்புத்தன்மை**

---

[21] **(Oceanography, Groos page 205)**

ஆகியவற்றின் மாறு பட்ட நிலைகளை ஆய்வு செய்வதன் மூலம்தான் கண்டுபிடிக்க முடி யும்.[22]

# 6 - குர்ஆனும் மேகங்களும்

அறிவியல் வல்லுனர்கள், பல்வேறு வகையான மேகங்களை ஆய்வு செய்து இவ்வுண்மைகளைக் கண்டறிந்துள்ளார்கள். அதாவது, மழைமேகங்கள் என்பன, வரையறுத்த செயல்முறைகளுக்காக -குறிப்பிட்ட நகர்வுகளுக்கென ஒருகூட்டமாக ஒன்றிணைகின்றன. குறிப்பிட்ட காற்றுகளுடனும் மேகங்களுடனும் தொடர்புடையவையாக ஆகின்றன. மழைக்கான மேகக்கூட்டங்களில் ஒருவகை, Cumulonimbus என்கிற அடர்த்தி மேகங்களாகும்.


மேலும் வானிலை இயல் வல்லுனர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். அடர்த்தி மேகங்கள் எவ்வாறு உருவாகின்றன? மழை, பனிக்கட்டி, மின்னல் ஆகியவற்றை எப்படி உற்பத்தி செய்கின்றன? என்பது பற்றிய ஆய்வை மேற்கொண்டார்கள். அதன் மூலம், அவர்கள் கண்டறிந்துள்ள விஷயங்கள் இவைதான்: அதாவது, அடர்த்தி மேகங்கள், மழையை உற்பத்தி செய்வதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன:

## 1 - காற்றுகளால் மேகங்கள் தள்ளப்படுதல்

அடர்த்தி மேகங்கள் எப்பொழுது உருவாகத் தொடங்குகின்றன எனில், Cumulus எனப்படும் சிறுசிறு மேகத்துண்டுகளை, அடர்த்தி மேகங்கள் ஒன்றுதிரளுகின்ற பகுதியை நோக்கி காற்றுகள், தள்ளு கின்றபோது அவை (அடர்த்தி மேகங்கள்) உருவாகத் தொடங்கு கின்றன. (பார்க்க: படம் 17 - 18)


[22] (Oceanography பக்கம் 205)

# படம் 17




படம் 17: சாட்டிலைட் மூலம் எடுக்கப்பட்ட இந்தப்படம் விளக்குவது என்னவெனில், மேகங்கள், B C D என்கிற ஒன்றிணைகின்ற பகுதிகளை நோக்கி நகர்கின்றன. சிறுசிறு அம்புக்குறிகள், காற்றின் திசைகளைக் காட்டுகின்றன. (The Use of Sate llite Pictures, in Weather Analysis and forecasting, Anderson and others page 188)

# படம் 18




படம் 18 : (Cumulus clouds என்கின்ற சிறிய சிறிய மேகங்கள் கீழ் வானத்திற்கு அருகே ஒன்றிணையும் பகுதியை நோக்கி நகர்கின்றன. அவ்வகையில் அடுக்கடுக்காகக் குவிந்த பெரிய மேகத்தை இங்கே காண்கிறோம். (Clouds and storms, Ludldm, page 7 - 4)

---

# 2 - மேகங்கள் ஒன்றிணைதல்

இந்தச் சிறுசிறு மேகத்துண்டுகள் ஒன்றோடொன்று இணைகின்ற பொழுது படிப்படியாக பெரிய மேகமாக உருவெடுக்கின்றன.[23] (பார்க்க: படம் 18 - 19)

## படம் 19




படம் 19 : (அ) பிரிந்து கிடக்கும் சிறுசிறு மேகத்துண்டுகள்.
(ஆ) மேகத்தின் பருமன் அதிகரித்து வரும் நிலை. பெரிய மேகக்கூட்டத்தை விட்டும் தனியாக உள்ள மேகத்துண்டுகள். பிறகு அவை ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிகின்றன. நீர்த்துளிகள் இந்த* அடையாளத்தின் மூலம் பிரித்துக் காட்டப் பட்டுள்ளன.

# 3 - ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிதல்

தனித்தனியாக உள்ள சிறுசிறு மேகங்கள், ஒன்றாகக் குவிகின்ற பொழுது, பெரிய மேகத்தினுள் காற்றோட்டம் மேலெழும்புகிறது. அப்படி எழும் காற்றோட்டம், மேகக்கூட்டத்தின் ஓரப்பகுதிகளில் உள்ள அழுத்தத்தைக் காட்டிலும் மேகக்கூட்டத்தின் மையப்பகுதி அருகே மிகமிக அழுத்தமாக உள்ளது.[24]

---

[23] (See the Atmosphere, Anthes and others பக்கம் 268 -269 மேலும் Elements of Meteorology, Miller and Thompson 141)

[24] (மேகக்கூட்ட மையப்பகுதியின் அருகே உள்ள உயர்க்காற்றோட்டம், ஓரப்பகுதி மேகத்தின் அருகே உள்ள காற்றோட்டத்தை விடவும் மிக வலுவாக உள்ளது. அதற்குக்காரணம், அவற்றைச் சுற்றிலும் உள்ள மேகங்கள், ஈரத் தன்மையை விட்டும் அவற்றைக் பாதுகாக்கின்றன என்பதுதான்)

மேகக்கூட்டமானது நீளவாக்கில் வளர்ந்து வருவதற்குக் காரணமாக அமைவது மேலெழும் காற்றோட்டங்கள்தான். அவ்வாறாக மேகங்கள் அடுக்கடுக்காகக் குவிகின்றன. (படங்கள் 19 (அ, ஆ) 20, 21 ஐப் பார்க்கவும்)

இந்த நீளவாக்கிலான வளர்ச்சி, அந்த மேகத்தின் தடிப்பத்தை, காற்று மண்டலத்தில் அதிகக் குளிர்ச்சியான பகுதிகளை நோக்கிப் படர்ந்து செல்லும்படி செய்கிறது. அங்கே அவை, தண்ணீர்த் துளி களாகவும் பனிக்கட்டியாகவும் உருப்பெறுகின்றன. மேலும் தொடர்ந்து அப்படியே வளர்ச்சி அடைந்து அதிகம் அதிகமாகப் பெருகுகின்றன. நீர்த்துளிகளும் பனிக்கட்டியும் மிகவும் அதிகக் கன மாகும்பொழுது, அவற்றை - உயர்ந்து வரும் காற்றோட்டம் தாங்க முடியாமல் ஆகின்றது. அப்பொழுதுதான் மேகத்திலிருந்து மழை யாகவும் பனிக்கட்டிகளாகவும் கீழே வீழத்தொடங்குகிறது![25]

குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

'நீங்கள் பார்க்கவில்லையா, என்ன? அல்லாஹ் மேகத்தை மெல்ல மெல்ல நகர்த்துகின்றான். பின்னர் அதன் சிதறல்களை ஒன்றிணைக்கின்றான். பிறகு அதனை அடர்த்தியான மேகமாக ஆக் குகின்றான். பிறகு அதற்கிடையிலிருந்து மழைத்துளிகள் வெளிப் பட்டுக் கொண்டிருப்பதை நீர் காண்கிறீர்' (24 : 43)

## படம் 20




---

[25] (see the Atmosephere. Anthes and others, page 269 and Elements of Meterology, Miller and Thompson, pp. 141 142)

**படம் 20 : (ஒன்றின்மேல் ஒன்றாக குவிந்த மேகங்கள். அவ்வாறு குவிந்த பிறகு அவற்றிலிருந்து மழை வெளிப்படத் தொடங்குகிறது. (Wea ther and Climate, Bodin, page 123)**

# படம் 21



**படம் 21 : குவிந்துநிற்கும் மேகக்கூட்டம்**

**(Cumulonimbus Cloud. (A colour Guide to Cloude, Scorer and Wexler. Page 23)**

**மேகங்கள் உருவாகுவது, கட்டமைவது, அவற்றின் பணிகள் ஆகிய இவ்விவரங்களை வானிலை இயல் வல்லுனர்கள், அண்மை யில்தான் கண்டுபிடித்தார்கள். அதுவும் விமானங்கள், செயற்கைக் கோள்கள் (Satellites), கணினிகள், வான்குடைகள் போன்ற அதி நவீனக் கருவிகளைப் பயன்படுத்தி - காற்றுகளையும் அவற்றின் திசைகளையும் ஈரப்பத அளவுகளையும் அதன் மாற்றங்களையும் காற்றழுத்த நிலைகளையும் - மாற்றங்களையும் ஆராய்ச்சி செய்து தான் கண்டுபிடித்தார்கள். [26]**

**மேலே சொன்ன வசனங்கள் - மேகம், மழை ஆகியவை பற்றி விவரித்த பிறகு பனிக்கட்டி, மின்னல் ஆகியவை பற்றி இவ்வாறு விவரிக்கின்றன.**

---

[26] **(பார்க்க: இஃஜாஸுல் குர்ஆனில் கறீம் ஃபீ வஸ்ஃபி அன்வாஇர் ரியாஹி வஸ் ஸஹ்பி வல் மதர். Makky and others. page 55)**

‘ ...மேலும் அவன் வானத்திலிருந்து - அவற்றில் உயர்ந்து நிற்கும் மலைகளில் இருந்து பனிக்கட்டிகளைப் பொழிவிக்கின்றான். பிறகு அதன் மூலம், தான் நாடுகிறவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறான்., தான் நாடுகின்றவர்களை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான். அதன் மின்னலின் ஒளி, பார்வைகளைப் பறிக்க முனைகிறது’ (24 : 43)


வானிலை இயல் வல்லுனர்கள், ஆய்வின் மூலம் கண்டறிந்தார்கள். அதாவது, அதிக அளவில் பனிக்கட்டிகளைப் பொழிவிக்கக் கூடிய, குவிந்து உயர்ந்துள்ள இந்த மேகங்களின் உயரம் 25,000 முதல் 30,000 ஆயிரம் பாதம் (4.7 ல் இருந்து 5.7 மைல்) [27] ஆகும்.

அதைப் பற்றியே குர்ஆன், ‘மேலும் அவன், வானத்திலிருந்து - அங்கே உயர்ந்து நிற்கும் (மேக)மலைகளில் இருந்து பனிக்கட்டிகளைப் பொழிவிக்கின்றான்’ (24 :43) என்று குறிப்பிடுகிறது. (படம் 21 ஐப் பார்க்கவும்)

குர்ஆனின் இந்தத் திருவசனம் தரும் கருத்தின் அடிப்படையில் இப்படி ஒரு கேள்வி எழலாம். அதாவது, இந்த வசனம் சுட்டிக் காட்டுவது பனிக்கட்டியைத்தான் என்கின்ற நிலையில், سنا برقه ‘அதன் மின்னலின் ஒளி’ என்று ஏன் குறிப்பிடுகிறது? மின்னலை உற்பத்தி செய்வதற்குப் பனிக்கட்டிதான் முக்கியமான காரணியாக இருக்கிறதா? என்பதுதான் அந்தக் கேள்வி.

Meteorology Today - ‘இன்றைய வானிலை ஆய்வு’ என்கிற நூல் அது பற்றி என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

அது கூறுகிறது: அதிகக் குளிர்ச்சியான நீர்த்துளிகளும் பனிச் சிதறல்களும் நிறைந்த மேகப் பகுதியிலிருந்து பனிக்கட்டிகள் வீழ்வதன் காரணத்தால், அந்த மேகம், மின்னாற்றல் நிறைந்ததாக ஆகிறது. மிகச்சன்னமான நீர்த்துளிகள், பனிக்கட்டிகளுடன் மோதுகின்றன. அதனால் அவை குளிர்ந்து போகின்றன. உள்நிலையிலுள்ள வெப்பத்தை வெளியே கக்குகின்றன. இது, குளிர்ந்த பனிக்கட்டியின் மேற்பரப்பை அதிகம் வெப்பமடையச் செய்கிறது. அந்த வெப்பமானது, பனிக்கட்டிச் சிதறல்களைச் சூழ்ந்துள்ள வெளிப்புறத்தைக் காட்டிலும் அதிகமாக



[27] (Elements of Meteorology, Miller and Th

இருக்கிறது! உறைந்திருக்கும் பனிக் கட்டியானது, சிதறல் பனிக்கட்டி களைத் தொடுகின்றபோது வியக்கத் தக்க - அதிசயமான ஒரு நிகழ்வு ஏற் படுகிறது.

அந்நிகழ்வு இதுதான்: மின்சாரங் கள், அதிகக் குளிர்ச்சியான பொருளை விட்டும் வெளியேறி அதிக வெப்பமான பொருளின் பால் பாய்கிறது. அதன் மூலம் பனிக்கட்டி யானது, எதிர்மறையான சக்திகளால் நிரப்பப்படுகிறது. இதே விளைவு, அதிகக் குளிர்ச்சியான நீர்த்துளிகள், உறைபனிக் கட்டி களைத் தொடுகின்றபொழுது ஏற்படுகிறது. அத்துடன் நேர்மறை யான சக்திகளால் நிரப்பப்பட்ட மிக மிகச் சன்னமான பனிச் சிதறல் கள், திடீரெனச் செயலிழந்து விடுகின்றன. மிகமிகக் குறைந்த கன முடையதாகவும் நேர்மறையான சக்திகள் நிரப்பப்பட்டும் உள்ள இந்தப் பொருள்கள், மேலெழுகின்ற காற்றழுத்த ஓட்டங்களால் மேகத்தின் உச்சிக்கு உயர்த்திச் செல்லப்படுகின்றன.

எதிர்மறை ஆற்றல்கள் நிறைந்துள்ள பனிக்கட்டிகள், மேகத்தின் கீழ்ப்பகுதியின் பால் நேராக விழுகின்றன. அப்பொழுது மேகத்தின் அந்தக் கீழ்பகுதி, எதிர்மறையான ஆற்றல்களால் நிரம்பியதாக ஆகின்றன. இந்த எதிர்மறையான சக்திகள் நிறைந்திருக்கும் பகுதி கள்தான் தமது சக்திகளை மின்னலின் வடிவத்தில் வெளிப்படுத்து கின்றன. [28]

மின்னல் தொடர்பான இந்த விஷயங்கள் அண்மையில்தான் கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி. 1600 ஆம் ஆண்டு வரையில் வானியல் இயல் தொடர்பாக அரிஸ்டாடிலின் கருத்துதான் மேலாதிக்கம் செலுத்திக்கொண்டிருந்து. எடுத்துக்காட்டாக, அவர் கூறினார்: ‘காற்று மண்டலம் என்பது, ஈரமான, உஷ்ணமான இருவகை மூச்சு விடுதலுடன் அமைந்துள்ளது’

மேலும் அவர் சொன்னார்: ‘உஷ்ணமான மூச்சுக்காற்று, அரு கிலுள்ள மேகத்துடன் மோதும் சப்தம்தான் இடி என்பது. உஷ்ண மான மூச்சுக்காற்று சூடாகி, சன்னமான அல்லது தடிப்பமான நெருப்பின் வடிவத்தில் எரிவதுதான் மின்னல் என்பது’ [29]

இவைதான், 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் - குர்ஆன் இறக்கி யருளப்பட்ட காலகட்டத்தில் வானியல் இயல் தொடர்பாக உலகில் பிரபலமாக இருந்த சில கருத்துகள் ஆகும்.

---

[28] (Meteorology Today, Ahrens page 437)

[29] (The Works of Aristotle Translated into English, Meteorologica VOl 3 Ross and others page 369a 369b)

# 7 - அறிவியல் நுட்பங்களும் அறிவியலாளர் கருத்துகளும்

திருக்குர்ஆனின் அறிவியல் ரீதியிலான சான்றுகள் குறித்து விஞ் ஞானிகள் கூறும் சில கருத்துகள் இங்கு இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் 'இதுதான் உண்மை' வீடியோ கேஸட்டில் இருந்து எடுக்கப்பட்டவை ஆகும். இந்த கேஸட்டில், இந்த அறிவி யல் வல்லுநர்களை நீங்கள் பார்க்கலாம். அவர்களின் குரலையும் கேட்கலாம். அவர்கள் பின்வரும் கருத்துகளை வழங்குகிறார்கள்:

(இந்த வீடியோ கேசட் வேண்டுமெனில்,அல்லது இந்தவீடி யோவை அல்லது இந்தக் கருத்துகள் தொடர்பாக வீடியோ கிளப்பை கம் யூட்டரில் பார்க்க விரும்பினால், இந்த இணையதள முகவரில் கிளிக் செய்யுங்கள். (www.Islam-guide. com\truth)

1 - டாக்டர் T.V.V. Persaud என்பவர், கனடா நாட்டின் மெனி தோபா பல்கலை கழகத்தில், உடல்கூறு இயல் பேராசிரியராகவும், குழந்தை மருத்துவ - குழந்தை நலத்துறை பேராசிரியராகவும், மக ளிர் நோய்கள், பேறுகாலம், இனப்பெருக்க அறிவியல் ஆகிய துறை களில் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். அங்கே உடல்கூறு இயல் துறைத்தலைவராக 16 ஆண்டு காலம் பணியாற்றியுள்ளார். இந்தத் துறையில் மிகவும் பிரபலமாக உள்ளார். சுமார் 22 நூல் களின் ஆசிரியராக அல்லது மேற்பார்வையாளராக இருக்கிறார். மேலும் 181 க்கும் அதிகமான அறிவியல் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். 1991 ஆம் ஆண்டில் கனடா நாட்டின் உடல்கூறு இயலில் வழங்கப்பட்ட மிகச் சிறந்த விருது ஒன்றை அவர் பெற்றுள் ளார். இது, கனடாவில் உடல்கூறு இயல் துறையின் தனித்திறனாளி கள் (ஸ்பெஷலிஸ்ட்) கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படும் மிக கௌரவமிக்க J.C.B. விருது ஆகும்.

டாக்டர் பெர்சௌத் அவர்களிடம் - திருக்குர்ஆனின் அறிவியல் ரீதியிலான அற்புதங்கள் எனும் தலைப்பில் அவரே ஆய்வு செய்து வந்த நிலையில் -அவை பற்றி ஒருகேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் இவ்வாறு பதில் அளித்தார்: "என்னிடம் விளக்கமாக எடுத்து ரைக்கப்பட்ட முறை என்னவெனில், முஹம்மது அவர்கள், மிகவும் சாதாரணமான மனிதராக இருந்தார். அதாவது, அவருக்குப் படிக் கத் தெரியாது., எழுதும் முறையையும் அறியமாட்டார். உண்மை யில் எழுதப்படிக்கத் தெரியாத மனிதராகவே இருந்தார். நாம், கடந்த 12 நூற்றாண்டுகளுக்கு (தற்போதைய கணக்குப்படி14 நூற்

றாண்டுகளுக்கு)முன்னுள்ள காலகட்டத்தைப் பற்றி பேசிக்கொண்டி ருக்கிறோம். எழுதவும் படிக்கவும் தெரியாத ஒரு மனிதர், ஆழமான விளக்கங்களையும் தெளிவுகளையும் - திகைப்பூட்டும் வகையிலான - விஞ்ஞான நுட்பங்களையும் எடுத்துரைப்பதை நீங்கள் பார்க் கிறீர்கள். என்னைப் பொறுத்த வரையில், வெறும் தற்செயல் நிகழ் வாக இதனைக் கருத முடியாது. அப்படி எவ்வாறு சொல்ல முடி யும்? அங்கே இதேபோன்ற இன்னும் ஏராளமான விஷயங்கள் மிக மிகச் சரியாக - பொருத்தமாக இருக்கின்றனவே! ஆக! ஓர் இறை சக்தியே ஓர் உள்ளுதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்., ஆத் மார்த்த ரீதியில் (முஹம்மது நபிக்கு) இந்த விஷயங்களின் பக்கம் இறை சக்தியே வழிகாட்டியிருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள் வதில் பேராசிரியர் மூர் அவர்களைப் போன்று எனக்கும் எந்தத் தயக்கமும் கிடையாது.

பேராசிரியர் பெர்செளத் அவர்கள், தமது நூல்களில் திருக் குர்ஆனின் பல வசனங்களையும் நபிமொழிகளையும் குறிப்பிட்டுள் ளார். பல மாநாடுகளிலும் அதே வசனங்களையும் ஹதீஸ்களையும் குறித்து விளக்கம் அளித்து உரை நிகழ்த்தியுள்ளார்.

2 - டாக்டர் ஜூ லி சிம்சோன் (Joe Leith Simpsin) என்பவர், அமெரிக்க டெக்சாஸ் மாகாண - ஹோஸ்டனில் உள்ள பைலோர் மருத்துவக் கல்லூரியில் பேறுகாலம் மற்றும் மகளிர் நோய்கள் பிரிவு (Ob – Gyn) மற்றும் மனித மரபணு நுண்ணாய்வு ஆகிய துறை களின் முன்னாள் தலைவராகவும் பேராசிரியராகவும் இருக்கிறார். மேலும் அமெரிக்க மெம்பிஸ் டென்னெஸ்ஸிலுள்ள ‘டென்னெஸ்ஸி பல்கலை கழகத்தில்’ மகளிர் நோய்கள், இனப் பெருக்க அறிவியல் ஆகிய துறைகளின் பேராசிரியராகவும் தலைவராகவும் இருக்கிறார். மேலும் அவர், அமெரிக்க பசுமை சமுதாய அமைப்பின் (American fertility Society) தலைவராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் பல விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். 1992 ஆம் ஆண்டில் (Asso ciation of Professors of Obstetrice and Gynecologe Public Recognition) பெண்கள் நோய்கள் மற்றும் பேறுகாலச் சிகிச்சைப் பிரிவு பேராசிரியர்கள் பொதுநல மன்றத்தின் சார்பில் வழங்கப்பட்ட விருது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பேராசிரியர் ஜூ லி சிம்சோன், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மொழிந்த பின்வரும் இரண்டு ஹதீஸ்களை ஆய்வு செய்துள்ளார்:

اِنَّ اَحَدَكُمْ يُجْمَعُ خَلْقُهُ فِى بِطْنِ اُمِّهِ اَرْبَعِيْنَ يَوْماً (بخارى ومسلم)

‘நிச்சயமாக உங்களில் ஒவ்வொருவரின் (படைப்பு) அம்சம் என்னவெனில், அவரைப் படைப்பதற்குத் தேவையான அம்சங்கள்

அனைத்தும் அவரது அன்னையின் வயிற்றில் (கருதரித்ததிலிருந்து) நாற்பது நாட்களில் ஒன்று சேர்க்கப்படுகிறது (ஆயத்தம் செய் யப்படுகிறது)' (ஸஹீஹு ப் புகாரி, 3208, ஸஹீஹ் முஸ்லிம், 2643)

اِذَا مَرَّ بِالنُّطْفَةِ ثِنْتَانِ وَاَرْبَعُوْنَ لَيْلَةً بَعَثَ اللهُ اِلَيْهَا مَلَكًا فَصَوَّرَهَا وَخَلَقَ سَمْعَهَا وَبَصَرَهَا وَجِلْدَهَا وَ لَحْمَهَا وَ عِظَامَهَا (رواه مسلم)

'விந்து, (கர்ப்ப அறையில்) செலுத்தப்பட்டு 42 இரவுகள் கழிந் தால், மலக்கு (எனும் வானவர்) ஒருவரை அதனிடம் அல்லாஹ் அனுப்புகிறான். அவர், அதன் உருவத்தை வடிவமைக்கிறார்., அதன் செவிப் புலனையும் பார்வைப் புலனையும், அதன் தோல், சதை, எலும்புகள் ஆகியவற்றையும் படைக்கிறார்' (முஸ்லிம், 2645)

பேராசிரியர் பெர்சௌத் அவர்கள், இந்த நபிமொழிகள் இரண் டையும் ஆழமாக ஆய்வு செய்து, ஆரம்ப நாற்பது நாட்கள் என்பது, சிசு உருவாக்கத்திற்கான வித்தியாசமான காலகட்டமாக அமை கின்றது என்று கணித்துள்ளார். மேலும் இந்த ஹதீஸ்களின் நுட்ப மான, மிகத் துல்லியமான இந்த விளக்கத்தைக் கண்டு பேராசிரியர் மிகவும் ஆச்சரியப்பட்டார். இந்நபிமொழிகளைப் பற்றிய தமது கருத்தை ஒரு மாநாட்டில் இவ்வாறு எடுத்துதைத்தார்:

'இந்த இரு நபிமொழிகளும் - 40 நாட்களுக்கு முந்தைய நிலை யில் கரு வளர்ச்சி அடைவது தொடர்பாகத் தெளிவானதொரு கால அட்டவணையை நமக்கு அளித்தன.

இன்று காலையில் ஏனைய இரண்டு சொற்பொழிவாளர்கள் இந்தப் புள்ளி விவரத்தையும் எடுத்துரைத்தார்கள் என்று கருதுகிறேன், அதாவது, நபிமொழிகள் எழுதப்பட்ட காலத்தில் பரவலாக அறியப் பட்டிருந்த அறிவியல் நுட்பங்களின் அடிப்படையில் இவ்விரு நபி மொழிகளும் உருவாகியிருக்க சாத்தியமில்லை என்கின்ற விவரத் தையும் எடுத்துச் சொன்னார்கள்...

(நாம் தெரிய வேண்டிய) இன்னும் சில விவரங்களும் உள்ளன. அதாவது, நிச்சயமாக மதத்திற்கும் மரபியல் விஞ்ஞானத்திற்கும் மத்தியில் எந்த முரண்பாடும் கிடையாது. உண்மையில் பாரம்பரிய அறிவியல் அணுகுமுறைகள் தொடர்பாக, வஹி எனும் இறையருட் செய்தியின் மூலம் மதம் என்பது, அறிவியலுக்கு வழிகாட்ட முடியும். கடந்த பல நூற்றாண்டுகளாக அறிவிக்கப்பட்டு வருகின்ற பல்வேறு அறிவியல் கருத்துகள் குர்ஆனில் காணக்கிடைக்கின்றன. அவை சரியான கருத்துகள்தான் என்று பிந்தைய காலங்களில் நிரூபிக்

கப்பட்டுள்ளன. குர்ஆன் இறையருள் வேதம்தான் என்பதை இவை அனைத்தும் உறுதிப்படுத்துகின்றன ...'

3 - டாக்டர் E. மார்சல் ஜான்ஷன் E. Marshall Johnson என்பவர், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்திலுள்ள தாமஸ் ஜெ∴பர்சன் பல்கலை கழகத்தில், உடல்கூறு இயல், பரிணாம வளர்ச்சி தொடர்பான உயிரியல் ஆகிய அறிவியல் துறைகளின் கௌரவப் பேராசிரியர் ஆவார். அங்கு உடல்கூறு இயல் துறையில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் 22 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். Daniel Baugh Institute எனும் நிறுவனத்தின் இயக்குனராகவும் பொறுப்பு வகித்துள்ளார். மேலும் அதிசயப் படைப்புகள் - உயிரினங்கள் ஆய்வகத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். டாக்டர் E. மார்சல் ஜான்ஷன், 200 க்கும் அதிகமான வெளியீடுகளின் ஆசிரியர் ஆவார். 1981 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவின் தம்மாம் மாநகரில் நடைபெற்ற 7வது மருத்துவ மாநாட்டில் கலந்து கொண்டு தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த பொழுது கூறி னார்:

'சுருக்கமான கருத்து என்னவெனில், கருவில் உள்ள சிசுவின் வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் குர்ஆன் வர்ணிக்கவில்லை., சிசுவின் உட்புறத்தில் -அதன் படைப்புத்தன்மை, வளர்ச்சி ஆகிவை தொடர்பாக நிகழும் நிலைமாற்றங்களையும் உறுதிப்படுத்துகிறது. தற்கால அறிவியல், கண்டுபிடித்துச் சொல்லக்கூடிய முக்கியமான உள்ளீட்டு நிகழ்வுகளையும் விவரிப்பதாக அது இருக்கிறது'

மேலும் அவர் கூறுகிறார்: 'நான் ஒரு அறிவியலாளர் எனும் ரீதியில், எந்தெந்த பொருட்களை என்னால் நேரடியாகப் பார்க்க முடியுமோ அந்தப் பொருட்களைப் பற்றி மட்டும்தான் எந்த ஒரு கருத்தையும் என்னால் கூறமுடியும். மேலும் கருவைப் பற்றிய அறிவியல் தொடர்பான - உயிர்ப்பரிணாம அறிவியல் தொடர்பான விஷயங்களை என்னால் புரிந்து கொள்ள முடியும். மேலும் குர்ஆனில் இருந்து எனக்கு மொழிபெயர்த்துச் சொல்லப்பட்ட வார்த்தைகளை என்னால் புரிந்து கொள்ள முடியும். (தொடர்ந்து கூறுகிறார்:) நான் முன்னர் ஓர் உதாரணமாக எடுத்துரைத்தது போல்- அந்தப் பழைய காலத்திற்கு நான் திரும்பிச் செல்கிறேன் என்று வைத்துக் கொண்டால் ... இன்று நான் அறிந்து வைத்திருக்கும் விஷயங்களை இயல்பாக அன்று அறிந்துள்ளேன் என்று வைத்துக்கொண்டால், பொருள்களை வர்ணிக்கும் சக்தியையும் பெற்றிருக்கிறேன் என்றால் ... இப்போது (குர்ஆன் வர்ணிப்பதைப் போல்) கரு வளர்ச்சி நிலைகளைப் பற்றி வர்ணித்துக்கூறிட என்னால் முடியாது.

இந்தக் கருத்தை -அதாவது முஹம்மது அவர்கள், தனிப் பட்ட முறையில் ஏதோ ஓர் இடத்திலிருந்து இந்த விஷயங்களைப் படிப்படியாகத் தெரிந்து கொண்டார் என்கின்ற கருத்தை மறுப்ப தற்கு எந்த முகாந்திரமும் எனக்குத் தெரியவில்லை. அத்துடன் முஹம்மது, எதனை எழுதிவைப்பதற்குச் சக்தி பெற்றிருந்தார்களோ அதில் இறைவனின் புனிதமான உதவி - ஒத்துழைப்பு கிடைத் திருக்க முடியும் என்கின்ற கருத்துடன் முரண்பாடு எதுவும் இருப்ப தாகவும் எனக்குத் தெரியவில்லை.[30]

4 - டாக்டர் டபிள்யூ. வில்லியம் ஹை (Dr. William W. Hay) கடல் அறிவியலாளர் என்று பிரபலமாகியுள்ள விஞ்ஞானி ஆவார். இவர் அமெரிக்க கொலூராடு பல்கலைகழகத்தில் புவிஇயல் அறிவி யல் துறையில் பேராசிரியராக உள்ளார். அமெரிக்க ஃபுளோரிடா மாகாண மியாமி பல்கலை கழகத்தின் கீழ் இயங்கும் கடல் மற்றும் காற்றுமண்டல ஆராய்ச்சிக்கான ரோசன்ஷியல் பள்ளிக்கூடத்தின் முன்னாள் இயக்குநர் ஆவார். திருக்குர்ஆனில் கடல்கள் தொடர்பா கக் கூறப்பட்டுள்ள விஷயங்கள் மற்றும் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ள விஷயங்கள் தொடர்பாக டாக்டர் டபிள்யூ. வில்லியம் ஹை அவர்களுடன் விவாதம் நடத்தப்பட்டது. அதன் பிறகு டாக்டர் கூறினார்:

‘இப்படிப்பட்ட சுருக்கமான சில தகவல்கள் (எனது கைக்குக் கிடைத்த) குர்ஆனில் பழைய பிரதிகளில் இடம்பெற்றிருப்பதை மிக வும் வியப்பிற்குரிய விஷயமாகக் கருதுகிறேன். இந்தக் தகவல்கள் வந்த மூல ஊற்றை அறிந்து கொள்வதற்குரிய எந்த வழியும் என் னிடமில்லை. ஆனால் இந்தத் தகவல்கள் இங்கே உள்ளன என் பது மிகமிக வியப்புக்குரியதாக உள்ளது. இதைக் கண்டுபிடிக்க வேண்டும் எனும் வகையில்தான், இந்த ஒருசில சொற்களின் அர்த் தங்களைப் புரிந்திட வேண்டும் எனும் வகையில்தான் இந்த (ஆய் வுப்) பணி சென்று கொண்டிருக்கிறது.

குர்ஆனின் மூல ஊற்று எதுவாக இருக்கலாம் என்பது பற்றி டாக்டர் டபிள்யூ.வில்லியம் ஹை அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்ட போது அவர் கூறினார்: ‘நல்லது! அது இறையருட் செய்தியாகத் தான் இருக்க வேண்டும் என்று நிச்சயமாக நான் கருதுகிறேன்’

[30] முஹம்மது நபி (ஸல்), எழுத - படிக்கத் தெரியாத உம்மி மனிதராக இருந் தார்கள். ஆனால் தம் தோழர்களிடம் குர்ஆனை ஓதிக்காண்பித்தார்கள்., அதை எழுதிக்கொள்ளுமாறு தோழர்கள் சிலருக்குக் கட்டளை இடக்கூடியவராகவும் இருந்தார்கள்.

5 - டாக்டர் ஜரால்ட் ஜியோரிஞ்ஜர் Dr Gerald Goeringer கல்வி இயக்குநராகவும் அமெரிக்க வாஷிங்டன் ஜார்ஜ்டவுன் பல்கலை கழக மருத்துவக் கூடத்தின் உயிரியல் விந்தணுப்பிரிவுப் பேராசிரிய ராகவும் (DC. USA) இருக்கிறார். இவர், சுவூதி அரேபியாவின் தலை நகர் ரியாத்தில் 8 வது மருத்துவ மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தபொழுது கூறினார்:

'குர்ஆனின் இந்த ஒருசில வசனங்களைப் பொறுத்து சொல் வது என்னவெனில், கரு வளர்ச்சி பற்றிய விரிவான வர்ணனை இந்த வசனங்களில் உள்ளது. அதாவது, கலப்பட விந்தணுக்கள், (கருவறையில்) சேர்க்கப்பட்டுத் கருத்தரித்த அந்தநேரம் முதற் கொண்டு, உறுப்புகள் அமைந்து சிசுவாக வடிவம் பெறுவது வரை யிலான முழு வளர்ச்சி பற்றிய விரிவான வர்ணனை இந்த வசனங் களில் உள்ளது. மனிதக்கரு வளர்ச்சி பற்றிய விவரங்களை இதைப்போல் பதிவு செய்தல் என்பது - அதாவது, வளர்ச்சி நிலை களை வகைப்படுத்தல், வழக்குச்சொற்கள், வர்ணனை உள்ளிட்ட அனைத்தையும் தெளிவாக, நிறைவாகப் பதிவுசெய்தல் என்பது இதற்கு முன்பு இருந்ததில்லை., அந்த வர்ணனை, (குர்ஆனிலுள்ள தைப் போல்) பெரும்பாலும் அனைத்து நிலைகளைப் பற்றியும் இல்லை. ஆனாலும் பாரம்பரிய அறிவியல் இலக்கியங்களில் மனிதக் கருவின் பல்வேறு நிலைகளைப் பற்றியும் கருவளர்ச்சி பற்றியும் பதிவாகியுள்ள விவரங்களின் விஷயத்தில் பல நூற்றாண்டுகளை - இந்த வர்ணனை தரத்தில் முந்திவிட்டது எனலாம்.

6 - டாக்டர் யூசுஹீடு கோஸாய் (Dr. Yoshihide Kozai) என்பவர் ஜப்பான் ஹோன்கோ டோக்கியோ பல்கலை கழகத்தில் கௌரவப் பேராசிரியராக இருக்கிறார். மேலும் ஜப்பான் டோக்கியோ மீடாக்கா விண்வெளி ஆய்வுக் கழகத்தின் இயக்குநராகவும் பதவி வகித்துள் ளார். அவர்கள் கூறுகிறார்:

"குர்ஆனில் விண்ணியல் பற்றிய சரியான தகவல்கள் இருப்ப தைக் கண்ட நான், மிகவும் திகைப்புக்குள்ளானேன். மேலும் மற் றொரு புறம் என்னைப் போன்ற நவீன விண்ணியல் வல்லுநர்களைப் பொறுத்த வரையில் பேரண்டத்தின் மிகவும் சிறிய பகுதியைப் பற்றித் தான் ஆய்வு செய்துள்ளோம். மேலும் அண்டத்தின் மிகமிகச் சிறிய பகுதியைப் பற்றி அறிந்துகொள்வதற்காக நாங்கள் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைப் பற்றி எடுத்துக்கூறியுள்ளோம். (கடுமையான முயற்சிகளை மேற்கொண்டோம்) ஏனெனில் நுண்ணோக்கிக் கருவி யைப் பயன்படுத்தி வானத்தின் மிகமிகச் சிறிய பகுதிகளைத்தான்

எங்களால் பார்க்க முடிந்தது. தவிர அண்டம் முழுவதையும் பார்ப் பது பற்றி எங்களால் சிந்தித்துப்பார்க்கவே முடியாது.

ஆக! குர்ஆனைப் படித்த பிறகு - சில கேள்விகளுக்குப் பதில் அளித்த பிறகு - அண்டத்தைப் புரிந்துகொள்வதற்கான எனது எதிர்கால அணுகுமுறையைப் பற்றி நிச்சயமாக என்னால் சிந்தித் துப் பார்க்க முடிகிறது"

7- பேராசிரியர் டீஜாதாத் டீஜாஸன் (Proof Tejatat Tejasen) என்பவர், தாய்லாந்து நாட்டின் (Chiang Mai University) ஷியாங் மை பல்கலை கழகத்தின் உடல்கூறு இயல் துறைத்தலைவராக இருக்கிறார். அதே பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை இயக்கு நராகவும் முன்பு பதவி வகித்துள்ளார். சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற 8 வது மருத்துவ மாநாட்டில் பேராசிரியர் டீஜாதாத் டீஜாஸன் எழுந்து கூறினார்:

" கடந்த மூன்று ஆண்டுகளாகத்தான் நான் குர்ஆனை வாசிப்ப தற்கு முக்கியத்துவம் கொடுத்தேன். நான் மேற்கொண்ட ஆய்வின் பயனாக - இந்த மாநாட்டில் நான் கற்றுக்கொண்டதன் மூலமாக நான் நம்புவது என்னவெனில், கடந்த 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே அனைத்து விஷயங்களும் குர்ஆனில் பதிவு செய்யப்பட்டு விட்டன. இதுதான் சத்தியமாக இருக்க வேண்டும். இதுதான் சத்தியம் என்று அறிவியல் கருவிகளின் மூலம் நிரூபிப்பது சாத்திய மாக இருக்கிறது. அத்துடன் முஹம்மது அவர்கள், எழுத-படிக்கத் தெரியாமல் இருந்தார்கள். ஆகவே படைப்பாளன் என்று சொல்லத் தக்க ஒருவனிடம் இருந்து ஒளியூட்டி வழிகாட்டுவது போன்று வஹி யாக அறிவிக்கப்பட்டதன் மூலம் இந்த உண்மையைக்கொண்டு வந்த நபியாகத்தான் முஹம்மது அவர்கள் இருக்க வேண்டும். அந்தப் படைப்பாளன், அல்லாஹ்வாகத்தான் இருக்க வேண்டும். ஆகையால் **லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல் லாஹ்** (வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை., முஹம்மது, அல்லாஹ்வின் தூதர்) என்று மொழி வதற்கான நேரம் நெருங்கி விட்டது என்பதாகவே நான் கருது கிறேன்.

இறுதியாக ... இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்த சிறப்புக்குரிய - உயர்வுமிக்க குழுவினரை நான் பாராட்டுகின்றேன். அறிவியல் கருத்துகள், மதக்கருத்தோட்டங்கள் என்கிற ரீதியில் மட்டும் நான் பயன்பெறவில்லை. மாறாக இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருக் கும் பிரபலமான அறிவியல் வல்லுநர்களைச் சந்திக்கும் வாய்ப்பை யும் புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்ளும் நல்லதொரு வாய்ப்பையும் நான் பெற்றிருக்கிறேன். இந்த இடத்திற்கு வந்ததன்

மூலம், நான் சம்பாதித்த மிகவும் மகத்தான பாக்கியம், **லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்** என்பதுதான்., அதன் மூலம் நான் முஸ்லிமாக ஆனதுதான்! ”

# இறுதியில் சில கேள்விகள் ...

குர்ஆனில் உள்ள அறிவியல் அற்புதங்கள் எனும் வகையில் நாம் மேலே பார்த்த எடுத்துக்காட்டுகளுக்குப் பிறகு -அவை தொடர்பாக அறிவியல் வல்லுநர்கள் அறித்த விளக்கங்களுக்குப் பிறகு இந்த சில கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம்:

❁ அண்மைக்காலத்தில் பல்வேறு துறைகள் தொடர்பாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள இத்தகைய அறிவியல் கருத்துகள் அனைத்தும், கடந்த பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு வஹி எனும் இறை யருட்செய்தி மூலம் அருளப்பட்ட குர்ஆனில் கூறப்பட்டுள்ளன எனில், அவை அனைத்தும் திடீரெனச் சந்தப்பவசத்தால் கூறப் பட்டவையாக இருக்க முடியுமா?

❁ இந்தக் குர்ஆனை, முஹம்மது (ஸல்) அவர்களோ அல்லது வேறு யாரேனும் ஒரு மனிதரோ சுயமாக எழுதி இருக்க முடியுமா?

இதற்குரிய சரியான - ஒரேஒரு விடை இதுதான்: இந்தக் குர் ஆன், வார்த்தைக்கு வார்த்தை, உயர்வும் பாக்கியமும் மிக்க ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் மூலம் இறக்கப்பட்ட வேதம் ஆகும் என்பதுதான்.

(திருக்குர்ஆன் தொடர்பான அறிவியல் கருத்துகள் தொடர்பான கட்டுரைகள், நூல்கள், வீடியோ கேசட்கள் போன்ற கூடுதல் விவ ரங்களுக்கு: www.islam-guide.com\science எனும் இணைய தள முகவரியை அணுகவும். அல்லது இந்நூலின் இறுதியில் கொடுக்கப் பட்டுள்ள இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளவும்)

# 2 - குர்ஆன் விடுக்கும் அறைகூவல்

திருக் குர்ஆனின் அத்தியாயங்களைப் போன்ற ஏதேனும் ஓர் அத்தியாத்தைக் கொண்டுவருமாறு விடுக்கப்படும் அறைகூவல்.

قال الله تعالى : وَانْ كُنْتُمْ فِى رَيْبٍ مِمَّا نَزَّلْنَا عَلَى عَبْدِنَا فَأْتُوْا بِسُوْرَةٍ مِن مِثْلِهِ وَادْعُوْا شُهَدَاءَكُمْ مِنْ دُوْنِ اللهِ اِنْ كُنْتُمْ صَادِقِيْنَ ، فَاِنْ لَمْ تَفْعَلُوْا

وَلَنْ تَفْعَلُوْا فَاتَّقُوْا النَّارَ الَّتِى وَقُوْدُ هَا النَّاسُ وَالْحِجَارَةُ اُعِدَّتْ لِلْكَافِرِيْنَ

(سورة البقرة الآية: ٢٣-٢٥)


**இறைவன் கூறுகிறான்: 'நாம் நம் அடியார் மீது இறக்கியுள்ள இ(வ்வேதத்)தைப் பற்றி(இது நம்மால் அருளப்பட்டதா, இல்லையா எனும்) சந்தேகத்தில் நீங்கள் இருந்தால் இதைப் போன்ற ஓர் அத்தியாயத்தை ஏனும் நீங்கள் கொண்டு வாருங்கள்! அல்லாஹ்வைத் தவிர உள்ள உங்கள் உதவியாளர்களைத் துணைக்கு அழைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இதனைச் செய்து காட்டுங்கள். நீங்கள் அப்படிச் செய்யா விட்டால் - நிச்சயமாக உங்களால் ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது - நரக நெருப்புக்கு அஞ்சுங்கள்! அது எத்தகையது எனில், அதன் எரிபொருட்கள் (தீய) மனிதர்களும் கற்களுமே ஆவர். (சத்தியத்தை) நிராகரிப்பவர்களுக்காக அது தயார் செய்யப் பட்டுள்ளது' (2 : 23 -25)**

கடந்த பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு குர்ஆன் இறக்கப் பட்ட காலம் முதற்கொண்டு - எடுத்துரைக்கும் அழகிலும் இலக்கிய நயத்திலும் கவர்ச்சியிலும் சட்டங்களை வகுத்துத் தரும் விவேகத் திலும் தகவல்களைச் சரியாகத் தரும் ஆதாரத் தன்மையிலும் துல்லியமான முன்னறிவிப்புகளிலும் இதர பரிபூரணத் தன்மைகளிலும் குர்ஆனின் அத்தியாயங்களுக்கு ஒப்பான ஓர் அத்தியாயத்தைக் கூட எவராலும் கொண்டு வரமுடியவில்லை.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் எனில், குர்ஆனிலுள்ள மிகச் சிறிய (108 வது அல்கௌஸர்) அத்தியாயம், வெறும் பத்து வார்த்தைகளால் அமைந்ததுதான். அத்துடனேயே இந்த அறைகூவலை எதிர்கொள்ள- அன்றும் சரி, இன்றும் சரி-யாராலும் முடியவில்லை! [31]

---

[31] இமாம் ஜர்கஸி அவர்களின் அப் புர்ஹான் ஃபீ உலூமில் குர்ஆன். பாகம் 2 பக்கம் 224




குர்ஆனிலுள்ள மிகச் சிறிய அல்கௌஸர் (108) அத்தியாயமாகும் இது. வெறும் பத்து வார்த்தைகளால் அமைந்ததுதான். திருக்குர்ஆனின் அத்தியாயங்ளைப் போன்ற ஓர் அத்தியாயத்தையாவது கொண்டு வாருங்கள், பார்க்கலாம் என்கிற இந்த அறைகூவலை இன்று வரையிலும் யாராலும் எதிர்கொள்ள முடியவில்லை.


முஹம்மது நபி (ஸல்) அவர்களுடன் பகைமை கொண்டிருந்த நிராகரிப்பாளர்களில் சிலர், இந்த அறைகூவலை எதிர்கொள்ள முயன்றனர். முஹம்மது நபியவர்கள் உண்மையான தூதர் அல்லர் என்று நிரூபிக்க முயற்சி மேற்கொண்டனர். ஆனால் அதில் தோல்வி யைத்தான் சந்தித்தனர்.[32] திருக்குர்ஆன், அவர்களது தாய் மொழி யிலேயே - அவர்களது உச்சரிப்பு முறையிலேயே இறக்கப்பட்டிருப்ப துடனேயே அவர்களுக்குத் தோல்விதான் ஏற்பட்டுள்ளது., மேலும் முஹம்மது நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த அரபுகள், மொழி வளத்தில் -இலக்கிய நயத்தில் மிகவும் திறமையாளர்களாக இருந்த னர்., இலக்கிய நயத்திலும் மொழிஅழகிலும் சரிநிகர் சிறப்புடைய கவிதைகளையெல்லாம்கூட அவர்கள் இயற்றிக்கொண்டிருந்தனர்., இன்று வரையிலும் அந்தக் கவிதைகள் படிக்கப்படுகின்றன., மக்க ளின் பாராட்டுதலைப் பெறுகின்றன!

# 3 - நபியவர்களின் தூதுத்துவமும் பைபிளின் முன்னறிவிப்புகளும்

முஹம்மது நபி (ஸல்)அவர்களின் தூதுத்துவம் பற்றி பைபிளில் பதிவாகியுள்ள முன்னறிவிப்புகள், பைபிளின் மீது நம்பிக்கை வைத்

[32] இமாம் ஜர்கஸி அவர்களின் அப் புர்ஹான் ஃபீ உலூமில் குர்ஆன். பாகம் 2 பக்கம் 226

துள்ள மக்களின் முன்னிலையில் இஸ்லாத்தின் உண்மைநிலைக் கான ஆதாரமாக உள்ளது.




மூஸா நபியிடம் இறைவன் கூறினான்: ‘அவர்களுக்காக ஒருதீர்க்கதரிசியை அவர் களின் சகோதரரில் இருந்து உம்மைப் போல் ஒருவரை எழும்பச்செய்வேன். அவரது வாயில் எனது வாக்கை போடுவேன். அவருக்கு நான் கட்டளையிடும் எல்லாவற்றையும் அவர்களிடம் அவர் பேசுவார். என் பெயரில் அவர் பேசுகின்ற எனது வாக்கை எந்த மனிதன் செவிமடுக்கவில்லையோ அந்த மனிதனிடம் நான் கேள்வி - கணக்கு கேட்பேன்’ (உபாககம் 18 :18 - 19) [33]

இந்த வசனங்களிலிருந்து தெரியும் கருத்துச் சுருக்கம் இது தான்: இந்த முன்னறிவிப்பின்படி தோன்றக்கூடிய தீர்க்கதரிசி, பின் வரும் சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருப்பது அவசியமாகும்:

1 - அவர் மூஸா நபியைப் போன்று திகழ்வார்.

2 - அந்தத் தீர்க்கதரிசி, இஸ்ரவேலர்களின் சகோதரர்களில் இருந்து - அதாவது, இஸ்மாயீல் நபியின் சந்ததிகளிலிருந்து தோன்றி வருவது அவசியம்.

3 -அந்தத் தீர்க்கதரிசியின் வாயிலே இறைவன் தனது வாக்கை அருளுவான். இறைவன் இடும் கட்டளைகளை அவர் பகிரங்கமாக அறிவிப்பார்.

இத்தகைய தனிச்சிறப்பு அம்சங்களைக் குறித்து இன்னும் ஆழமாக நாம் ஆய்வு செய்வோம்.

# 1 - மூஸா நபி போன்ற தீர்க்கதரிசி

நபிமார்களில் மூஸா-முஹம்மது ஆகிய இரு நபிமார்களைப் போன்ற ஒப்பான தன்மையுடைய வேறு இரு நபிமார்களை நாம் காண்பது கடினமான ஒன்றாகும். மூஸா நபி - முஹம்மது நபி ஆகிய இரு வருக்கு மத்தியில் மட்டும்தான் முழுமையான ஒப்புமை உள்ளது.

ஆம்! இவ்விருவரில் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்த முழுமை யான ஷரீஅத் சட்ட நெறிகளையும் வாழ்க்கைக்கான நடைமுறை நியதிகளையும் வழங்கியுள்ளார்கள். இருவரும் தத்தம் எதிரிகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள். மிகவும் அதிசய மான முறையில் எதிரிகள் மீது இவ்விருவரும் வெற்றி பெற்றார்கள். மேலும் இவ்விருவருமே தீர்க்கதரிசியாகவும் ஆட்சியாளராகவும் இருந்தார்கள் என்கின்ற உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[33] The verses of the Bible in this book have been taken from The NIV Study Bible , New International Version.

இருவரும் (நாடுதுறத்தல் எனும்) ஹிஜ்ரத்தை மேற்கொண்டார் கள்., இருவரையும் எதிரிகள் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த நிலையில் அவர்களின் அந்த ஹிஜ்ரத் நடைபெற்றது!

ஆனால் மூஸா நபியையும் ஈசா நபியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அது, மேலே கூறப்பட்டுள்ள ஒப்புமை இலக்கங்களுடனும் ஒத்து வருவதில்லை. இதேபோல உறுதியான வேறு சில ஒப்புமை இலக் கங்களுடனும் ஒத்துவருவதில்லை. உதாரணத்திற்குச் சொல்வதா யின், மூஸா நபி, முஹம்மது நபி இருவரின் இயற்கையான பிறப்பு, குடும்ப வாழ்வு,மரணம் ஆகிய நிலைகளைக் குறிப்பிடலாம்! ஆனால் ஈஸா நபியவர்கள் மரணம் அடையவில்லை!

இவை நீங்கலாக, 'ஈஸா எனும் ஏசு நாதர், அல்லாஹ்வின் குமாரர்தான்., மூஸா(அலை), முஹம்மது (ஸல்)ஆகிய இருவரை யும் போன்று ஒருநபி அல்லர்' என்றுதான் ஈஸாவைப் பின்பற்றியோர் பார்க்கிறார்கள்., முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டது போல ஒரு நபி என்று பார்க்கவில்லை!

மேலே சொன்ன விளக்கத்தின் அடிப்படையில் பைபிளின் ஏற்பாடு களின் முன்னறிவிப்பு என்பது, முஹம்மது நபியவர்களுடன்தான் ஒத்துவருகிறதே தவிர, ஈஸா நபியுடன் ஒத்துவருவதில்லை. நிச்ச யமாக மூஸா நபியுடன் அதிகம் ஒப்பாக இருப்பது முஹம்மது நபிதானே தவிர, ஈஸா நபி அல்ல என்பதே காரணமாகும்.

இன்னொரு கோணத்தில் பார்த்தால், யோஹன்னா பைபிளில் சொல்லப்பட்டுள்ளது: அதாவது, யூதர்கள், வித்தியாசமான மூன்று முன்னறிவிப்புகள் நிகழ்ந்துவிடும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந் தார்கள். அவை வருமாறு: அ - ஈஸாவின் வருகை. 2 - யலியா வருகை. 3 - நபியின் வருகை

அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விஷயம், யோவான் ஸ்நாகனிடம் கேட்கப்பட்ட மூன்று கேள்விகளின் மூலம் தெளிவாகி றது:

யோவானிடம் சென்று -'நீர் யார்?' என்று கேட்பதற்காக ஆசாரி யரையும் லேவியரையும் ஜெரூசலத்தின் யூதர்கள், அனுப்பி வைத்த போது, யோவான் அளித்த சாட்சியம் ஆகும் இது. யோவான் ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. மாறாக, 'நான் கிறிஸ்து அல்லன்' என்று தெளிவாக ஏற்றுக்கொண்டான். அப்படியானால் 'நீர் யார்? எலியாவா? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு, 'நான் அவரல் லன்' என்றார். 'நீர் நபியா?' என்றதற்கு, 'இல்லை' என்று பதில் அளித்தார். (யோஹன்னா சுவிஷேசம் 1 : 19 - 21)

அடிக்குறிப்புகளுடன் உள்ள பைபிளில் நாம் பார்த்தோமானால் அடிக்குறிப்பில் Prophet - நபி எனும் வார்த்தை இருப்பதைக் காண லாம். (யோஹன்னா சுவிஷேசம் 1 : 21)

இவை, உபாகமம் (18-15,18:18) [34] இல் கூறப்பட்டுள்ள முன்னறி விப்புடன் தொடர்புடைய வார்த்தைகள் ஆகும். இதன் மூலம், ஏசு கிறிஸ்து, (உபாககம் 18 : 18) ல் கூறப்பட்ட நபி அல்லர் என்பது தெளிவாகிறது.

# ஆ - இஸ்ரவேலர்களின் சகோதரர்களில் இருந்து ...

இப்ராஹீமுக்கு, இஸ்மாயீல், இஸ்ஹாக் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். (பைபிள் அத்: உற்பத்தி - 21) இஸ்மாயீல், அரேபியர் களின் தந்தை ஆனார். இஸ்ஹாக், யூதர்களின் தந்தை ஆனார். பைபிள் முன்னறிவிப்பில் சொல்லப்பட்ட நபி என்பவர், யூதர்களில் இருந்தே தோன்றுபவர் அல்லர். அவர்களின் சகோதரர்களில் - அதாவது, இஸ்மாயீலின் சந்ததிகளிலிருந்து தோன்றியவர் ஆவார். முஹம்மது நபியவர்கள், இஸ்மாயீலின் வழித்தோன்றலில் பிறந்தவர். எனவே அவர்கள்தான் எதிர்பார்க்கப்பட்ட உண்மையான நபி ஆவார்.

மேலும் எசய்யா சுவிஷேசம் (42:1-13) வசனத்தில், இறைவனின் தாசன் என்று குறிப்பிடுகிறது. அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றும் புதிய சட்டநெறிகளைக் கொண்டுவரக்கூடிய ரசூல் என்றும் கூறுகிறது. அதன் வாசகங்கள் வருமாறு: (அவர் சடைந்து போகமாட்டார்., பூமியில் நீதியை நிலைநாட்டும் வரையில் ஓய்ந்திட மாட்டார். தீபகற்பத்தினர் அவரது சட்டநெறிகளில் நம்பிக்கை வைத்திருப்பார்கள்) ஏஷியா 42 : 4)

11 வது வசனம், கேதார் என்பவரின் சந்ததிகளில் இருந்து எதிர்பார்க்கப்படும் தூதர் பற்றி குறிப்பிடுகிறது. யார் இந்த கேதார்? எசய்யா சுவிஷேசம் 25 : 13 ஆம் வசனத்தின்படி கேதார் என்பவர், இஸ்மாயீலின் இரண்டாவது மகன் ஆவார். அவர்தான், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் முப்பாட்டனார்.

---

[34] See the marginal notes in The NIV Study Bible , New Inter national Version on verse 1: 21, p, 1594

# இ - கர்த்தர் தனது வாக்கினை இந்த நபியின் வாயில் போடுவார்

இறைவனின் வார்த்தை(யாகிய இந்த குர்ஆன்) முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாயில் போடப்பட்டது. முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு புனித இறைவாக்கினை (குர்ஆனை) கற்றுக் கொடுப் பதற்காக இறைவன், வானவர் ஜப்ரீலை அனுப்பி வைத்தான். மேலும் நபியவர்கள் ஜிப்ரீலிடம் இருந்து செவியேற்றது போல், மக்க ளுக்கு ஓதிக்காண்பிக்க வேண்டும் என்றும் ஜிப்ரீல் கேட்டுக்கொண் டார். அப்படியெனில், குர்ஆனின் வார்த்தைகள், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சொந்த வார்த்தைகள் அல்ல., அவர்களின் சுய சிந்தனையிலிருந்து பிறந்த வார்த்தைகள் அல்ல. மாறாக, வானவர் ஜப்ரீல் மூலம் நபியவர்களின் வாயில் போடப்பட்டவை ஆகும். முஹம்மது நபியவர்களது ஜீவித காலத்தில், அவர்களது கண்காணிப்பின் கீழ், நபித்தோழர்கள், இந்த இறைவாக்குகளை மனப்பாடம் செய்யும் பணியையும் எழுதி வைத்துக்கொள்ளும் பணியையும் மேற்கொண்டார்கள்.

பைபிள் உபாகமம் (18 : 19) ல் முஹம்மது நபி (ஸல்) அவர் களின் தூதுத்துவம் பற்றிய முன்னறிவிப்பில் பின்வருமாறு இறைவன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்: ‘என் பெயரில் அவர் பேசு கின்ற எனது வாக்கினை எந்த மனிதன் செவிமடுக்கவில்லையோ அந்த மனிதனிடம் நான் கேள்வி - கணக்கு கேட்பேன்’ - எனவே இவ்வாறு முன்னறிவிப்பு செய்யப்பட்ட நபி - தீர்க்கதரிசி, முஹம்மது (ஸல்) அவர்கள்தாம்.

(முஹம்மது நபியவர்ளைப் பற்றி பைபிளில் கூறப்பட்டுள்ள இன்னும் பல தகவல்களுக்கு, www.islam-guide.com\mohamed) எனும் மின்னனு முகவரியை நாடவும்.

# 4 - பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிவித்த குர்ஆன் வசனங்கள்

குர்ஆன் முன்னறிவிப்புச் செய்த நிகழ்ச்சிகளுக்குரிய ஓர் எடுத் துக்காட்டுதான், பாரசீகர்கள் மீது ரோமானியர்கள் பெற்ற வெற்றி. பாரசீகர்களிடம் ரோமானியர்கள் தோல்வி அடைந்து சரியாக மூன்று ஆண்டிலிருந்து ஒன்பது ஆண்டுகளுக்குள் இந்த வெற்றி நிறைவேறி யது. இது பற்றி குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

‘ரோமானியர்கள் அண்டை நாட்டில் தோல்வி அடைந்துள்ளனர். அவர்கள் தங்களது இந்தத் தோல்விக்குப் பின் சில ஆண்டுகளுக் உள்ளாகவே வெற்றி அடைந்து விடுவார்கள்’ (30 : 2-4)

அண்டை நாடு என்றால், அரேபிய தீபகற்பத்திற்கு அருகிலுள்ள நாடு என்று பொருளாகும்.

இந்த யுத்தங்களைப் பற்றி வரலாறு என்று சொல்கிறது என்று பார்ப்போம்.

History of The Byzantine State எனும் நூல் கூறுகிறது: ‘ரோமானியப் படைகள், கி.பி. 613 ஆம் ஆண்டில் அன்தாக்கிய்யா என்ற இடத்தில் படுதோல்வி அடைந்தன. அதன் விளைவாக பாரசீகர்கள் எளிதாக எல்லாத் திக்குகளிலும் ஊடுறுவினார்கள். [35]

அந்தக் காலகட்டத்தில், பாரசீகர்கள் மீது ரோமானியர்கள், வெற்றி பெறுவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதே கடினமாக இருந்தது. ஆனால் மூன்றிலிருந்து ஒன்பது ஆண்டுகளுக்குள் ரோமானியர்கள், பாரசீகர்களின் மீது வெற்றி பெற்றுவிடுவார்கள் என்று குர்ஆன் முன்னறிவிப்புச் செய்தது. ரோமானியர்கள் தோல்வி அடைந்ததில் இருந்து சரியாக ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 622 ஆம் ஆண்டில் இரண்டு படையினரும் (ரோமானியரும் பாரசீகர்களும்) ஆர்மீனியாவில் மோதினார்கள். அந்தப் போரின் முடிவில் - கி. பி. 613 ஆம் ஆண்டில் [36] ரோமானியர்கள் தோல்வி அடைந்த பிறகு, முதன் முறையாக ரோமானியர்கள் பாரசீகர்கள் மீது பிரமாண்டமான முறையில் வெற்றி பெற்றார்கள்.

அல்லாஹ் குர்ஆனில் செய்த முன்னறிவிப்பு, முழுமையான முறையில் நிறைவேறியது.

இதேபோன்று பிற்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை முன்கூட் டியே எடுத்துரைத்த திருக்குர்ஆன் வசனங்களும் நபி(ஸல்) அவர் களுடைய பொன்மொழிகளும் இன்னும் பல உள்ளன. (அவை பற்றி மேலும் அறிய, எகிப்து இஸ்லாமியப் பிரச்சாரக்கழகம் வெளி யிட்ட அல் முஃஜிஸாத்துல் காலிதா எனும் நூலைப் பார்க்கவும்)

---

[35] History of The Byzantine State , Ostrogorsky , page 95

[36] History of The Byzantine State, Ostrogorsky, pp. 100-101, and History of persion , Sykes , VOL . 1, pp , 483 – 484, Also see New Encyclopaedia Britannica, Micropacdia VOL.4. p, 1036.

# 5 - முஹம்மது நபி(ஸல்) அவர்களின் மூலம் நிகழ்ந்த அற்புதங்கள்

எத்தனையோ அற்புதங்கள், முஹம்மது நபி (ஸல்)அவர்களின் மூலம் - இறைவனின் அனுமதி கொண்டு நிகழ்ந்துள்ளன. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அந்த அற்புதங்களை நேரில் பார்த்த சாட்சிகளாக உள்ளனர். எடுத்துக்காட்டாக -

மக்கத்து இணைவைப்பாளர்கள், தங்களுக்கு ஏதேனும் ஓர் அற்புதத்தை நிகழ்த்திக்காட்டுமாறு முஹம்மது நபியவர்களிடம் வேண்டியபோது, சந்திரன் பிளந்ததை நபியவர்கள் அந்த மக்க ளுக்குக் காண்பித்தார்கள். (ஸஹீஹு ல் புகாரி, 3637 ஸஹீஹ் முஸ்லிம் 2802)

மற்றோர் அற்புதம், முஹம்மது நபி(ஸல்)அவர்களின் கைவிரல் களில் இருந்து தண்ணீர் பீறிட்ட அற்புதமாகும். எப்பொழுது எனில், நபித்தோழர்கள், தாகமாக இருந்தார்கள், ஒரு பாத்திரத்தில் இருந்த சிறிதளவு தண்ணீரைத் தவிர, அவர்களிடம் வேறு எந்தத் தண்ணீரும் இல்லை, அந்தத் தோழர்கள் நபியவர்களிடம் வந்து, ‘இந்தப் பாத்திரத்தில் உள்ள சிறிது தண்ணீரைத் தவிர உளூ செய்யவும் குடிக்கவும் வேறு தண்ணீர் இல்லை’ என்று சொன்னார் கள். அப்பொழுது நபியவர்கள் தமது கையை அந்தப் பாத்திரத்தி னுள் வைத்தார்கள். அவர்களுடைய கைவிரல்களிடையே இருந்து தண்ணீர் பீறிட்டது. தோழர்கள் நீர் அருந்தினார்கள்., உளூ செய் தார்கள். அவர்கள், ஆயிரத்து ஐநூறு பேர் இருந்தார்கள்’ (ஸஹீ ஹு ல் புகாரி, 3576, ஸஹீஹ் முஸ்லிம் 1856)

நபி (ஸல்) அவர்களின் கையின் மூலம் வேறு பல அற்புதங்கள் நிறைவேறியுள்ளன. அல்லது அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன.

# 6 - முஹம்மது நபியவர்களின் எளிய வாழ்க்கை

தூதுத்துவத்திற்கு முன்பு நபி (ஸல்) வாழ்ந்த வாழ்க்கையுடன், நபி எனும் முறையில் தமது தூதுத்துவப் பணியைத் தொடங்கிய தற்குப் பின்னுள்ள வாழ்க்கையை நாம் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால் -

அவர்களைப் போலி நபி எனக் கருதுவது அறிவுக்குப் புறம்பா னது என்றுதான் நாம் முடிவுசெய்வோம். ஏதேனும் பொருளாதாரம், புகழ், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றை அடைவதற்காகவே

தம்மை நபியெனப் போலியாக வாதிட்டார்கள் எனக் கருதுவது அறிவுக்குப் புறம்பானது எனும் முடிவுக்குத்தான் நாம் வருவோம்.

தமது தூதுத்துவப் பணியைத் தொடங்குவதற்கு முன்னர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினை களோ சிக்கல்களோ எதுவும் இருக்கவில்லை. செல்வாக்குமிக்க - இலாபகரமான வியாபாரி எனும் முறையில் நிம்மதியான- போதுமான வருவாயை ஈட்டிக்கொண்டுதான் இருந்தார்கள். தூதுத்துவப் பணி யைத் தொடங்கிய பின்னர் - அதன் பொறுப்பை ஏற்றதன் விளை வாக - மோசமில்லாத, போதுமான பொருளாதார நிலையில்தான் இருந்தார்கள்.

இதனை விளக்குவதற்கு அவர்களது வாழ்க்கையைப் பற்றிய பின்வரும் அறிவிப்புகளைப் பார்ப்போம்:

உர்வா பின் ஸு பைர் (ரலி) அறிவிக்கிறார்கள்: என்னிடம் நபி களாரின் மனைவி ஆயிஷா (ரலி), 'என் சகோதரி மகனே! நாங்கள் முதல் பிறையைப் பார்ப்போம்., மீண்டும் முதல் பிறையைப் பார்ப் போம். இப்படி இரண்டு மாதங்களில் மூன்று தலைப்பிறைகளைப் பார்ப்போம். (அவ்வளவு நாட்களிலும்) அல்லாஹ்வின் தூதருடைய வீடுகளில் (உணவு சமைக்க அடுப்பில்) தீ மூட்டப்படவில்லை' என்று கூறினார்கள்.

நான், 'என் சிற்றன்னையே! ஏது (உணவு)தான் உங்களுக்கு வாழ்வு அளித்துக்கொண்டிருந்தது? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'கருப்பான இரண்டு பொருள்கள்: தண்ணீரும் ஈச்சம் பழமும்! ஆனால் அன்சாரிகள் சிலர், அல்லாஹ்வின் தூதருக்கு அண்டை வீட்டினராக இருந்தனர். பால் தரும் பெண் ஒட்டகங்கள் அவர்களிடம் இருந்தன. (அவற்றின் மூலம் கிடைக்கும்) தமக்குரிய பாலை நபியவர்களுக்கு அவர்கள் கொடுப்பார்கள். நபி (ஸல்), அதை எங்களுக்கு அருந்தக்கொடுப்பார்கள் என்று கூறினார்கள்' (ஸஹீஹு ல் புகாரி, எண்: 2567 ஸஹீஹ் முஸ்லிம் 2972)

நபித்தோழர்களில் ஒருவரான ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி) கூறு கிறார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், சுத்தமாகச் சலித்த மாவினால் செய்யப்பட்ட ரொட்டியைப் பார்த்ததில்லை, இறைவன், அவர்களை நபியாக அனுப்பிவைத்த காலத்தில் இருந்து மரணம் அடைந்தது வரையில்! (அதை உண்ணவில்லை)' (ஸஹீஹு ல் புகாரி, எண் 5413, தாரமி 2364)

நபியவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்:

'நபி(ஸல்)அவர்கள் படுக்கும் பாய், உமி நிரப்பப்பட்ட தோலாக இருந்தது' (ஸஹீஹ் முஸ்லிம் 2082, ஸஹீஹு ல் புகாரி, 6456)

நபித்தோழர்களில் ஒருவரான அம்ர் பின் ஹாரிஸ் (ரலி) என்பார் அறிவிக்கிறார்:

'நபி(ஸல்)அவர்கள், தமது மரணத்தின்போது தங்க - வெள்ளி நாணயங்கள் எதையும் விட்டுச் செல்லவில்லை., தமது வெண்ணி நிறக் கோவேறு கழுதையைத் தவிர, தங்களுடைய ஆயுதங்கள், தர்மமாக ஆக்கியிருந்த நிலம் ஆகியவற்றைத் தவிர (எதையும் விட்டுச் செல்லவில்லை!' (ஸஹீஹு ல் புகாரி, 2739, முஸ்னத் அஹ்மது 17990)

முஹம்மது நபி(ஸல்) அவர்கள், மரணம் அடையும் வரையிலும் இத்தகைய கடினமான நிலையில்தான் வாழ்ந்தார்கள். இத்தனைக் கும் பைத்துல்மால் எனும் முஸ்லிம்களின் பொதுச் சொத்து, நபி யவர்களின் அதிகாரத்தின் கீழ்தான் இருந்தது. மேலும் அவர்கள் மரணமாவதற்கு முன்பே அரேபிய தீபகற்பத்தின் பெரும்பாலான மக்கள், இஸ்லாத்தில் சேர்ந்திருந்தனர். மேலும் நபியவர்களின் தூதுத்துவத்திற்குப் பின்னர் 18 ஆண்டுகளில் முஸ்லிம்கள் பெரிய அளவில் வெற்றிகளை ஈட்டியிருந்தார்கள்.

உயர் அந்தஸ்து, செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றை அடை யும் நோக்கத்தில், தம்மை ஒரு நபியென்று முஹம்மது (ஸல்) வாதிட்டிருக்கலாம் என்பதற்கு சாத்தியம் உள்ளதா? உயர் பதவி, செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றை அனுபவிப்பதென்றால், சுவை யான உணவுகள், அழகிய ஆடைகள், மாடமாளிகைகள், படை பட்டாளங்கள் ஆகிய அனைத்தும் இணைந்திருப்பதுதானே நடை முறை ஆகும். குறிப்பால் உணர்த்தும் இத்தகைய விஷயங்களில் ஏதாவது முஹம்மது (ஸல்) க்குப் பொருந்தி வருகிறதா, என்ன?

நபியவர்களின் வாழ்வில் இருந்து - மின்வெட்டுவதுபோன்ற சில நிகழ்ச்சிகளைக் கீழே நாம் விவரிக்கிறோம்.,அவை இந்தக் கேள்வி களுக்குச் சரியான விடையை அளிக்கும்.

நபி, போதகர், ஆட்சியாளர், நீதிபதி என்கிற வகையில் பல்வேறு பொறுப்புகள் இருந்ததுடனேயே முஹம்மது நபி (ஸல்) அவர்கள், தம் வீட்டு ஆடுகளில் பால் கறப்பவராக, கிழிந்த ஆடைகளைத் தைப்பவராக, தங்களது செறுப்புகளைச் செப்பனிடுபவராக, வீட்டு வேலைகளில் (தம் மனைவியருக்கு) ஒத்துழைப்பவராக, நோய் வாய்ப்பட்ட ஏழைகளைச் சந்தித்து நலம் விசாரிப்பவராக இருந்தார் கள். மேலும் அகழ் தோண்டும் பணி நடைபெற்ற பொழுது தம் தோழர்களுடன் சேர்ந்து தாமும் தோள்களில் மண்ணை அள்ளிச் சுமந்து அவர்களுக்கு உதவிசெய்துள்ளார்கள். இந்த வகையில் நபியவர்கள், எளிமைக்கும் பணிவுக்கும் - திகைப்பூட்டும் முன்மாதிரி யாகத் திகழ்ந்தார்கள். (ஸஹீ ஹு ல்

புகாரி, முஸ்னத் அஹ்மத், முஅத்தா, தாரமி ஆகிய நூல்களைப் பார்க்கவும்)

முஹம்மது நபி(ஸல்) அவர்களின் மீது, அவர்களின் தோழர்கள் கொண்டிருந்த அன்பு, கண்ணியம், நம்பிக்கை ஆகியவை, ஆச்சரியம் தரும் அளவுக்கு இருந்தன. ஆயினும் தெய்வீகத்தன்மை என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என்றும், மனிதராகிய தமக்குக் கிடையாது என்றும்தான் எப்பொழுதும் நபியவர்கள் உறுதிப்பட கூறிக் கொண்டிருந்தார்கள்.

நபித்தோழர்களில் ஒருவரான அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'முஹம்மது நபி(ஸல்)அவர்களின் தோழர்கள், முஹம்மது நபியைவிட அதிகமாக எவரையும் நேசிப்பவர்களாக இருந்ததில்லை. ஆனாலும் தங்களிடம் நபி வரும்பொழுது அவருக்காக தோழர்கள் எழுந்து நிற்கமாட்டார்கள். ஏனெனில் ஏனைய சமூகத்தினர் தங்களுடைய பெரியவர்களுக்காக எழுந்து நிற்பதைப் போல தமக்காக மக்கள் எழுந்து நிற்பதை நபியவர்கள் வெறுப்பவராக இருந்தார்கள்' (முஸ்னத் அஹ்மத் 12117, திர்மிதி 2754)

இஸ்லாத்தின் வெற்றிக்கான எந்த நம்பிக்கை மின்னலும் ஏற்படுவதற்கு வெகுகாலம் முன்பு - துன்புறுத்தல் கொடுமையிழைத்தல் ஆகியவற்றின் நீண்ட காலகட்டத்தின் தொடக்கத்தில், சிலைவழிபாட்டுத் தலைவர்களின் தூதுவனாக உத்பா என்பவன் முஹம்மது நபி (ஸல்)யிடமும் அவர்களின் தோழர்களிடமும் வந்தான். நபியவர்களிடம் கூறினான்:

'நீர் கொண்டுவந்துள்ள இப்புதிய மதத்தின் மூலம் பணத்தை நீர் விரும்புகிறீர் என்றால், நாங்கள் அனைவரும் சேர்ந்து உமக்குப் பெரும் அளவு செல்வத்தைத் தருகிறோம்.,நீர் எங்கள் அனைவரையும் விட அதிக செல்வம் உடையவராக நீர் திகழ்வீர். தலைமைப் பதவியை நீர் விரும்புகிறீர் எனில், உம்மை எங்கள் தலைவராக ஆக்குகிறோம்., உம்மிடம் கலந்து ஆலோசிக்காமல் இனி எந்த விவகாரத்திலும் நாங்கள் முடிவு எடுக்கமாட்டோம். அரசாட்சியை நீர் விரும்புகிறீர் என்றால், உம்மை எங்களின் அரசராகத் தேர்வு செய்கிறோம் ...'

இதற்குப் பகரமாக முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது - ஒரே ஒரு விஷயத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான் அது. அந்தக் கோரிக்கை என்னவெனில், மக்களை இஸ்லாத்தில் சேருமாறு அழைப்பதையும், இறைவனை - இணைவைக்காமல் வணங்குமாறு அழைப்பதையும் நபியவர்கள் கைவிட வேண்டும் என்பதுதான்.

உலக ரீதியிலான லாபம் மட்டுமே எவரது குறிக்கோளாக உள் ளதோ அவரைப் பொறுத்த வரையில் இது, நல்லதொரு சந்தர்ப்பம் அல்லவா? இந்நிலையில் முஹம்மது நபியவர்கள் தயக்கம் அடை வதற்கு ஏதேனும் காரணம் இருக்க முடியுமா? அல்லது இதனை விடவும் சிறந்ததொரு இலாபத்தை அடைவதற்காக வாசலைத் திறந்து வைத்துக்கொண்டு கூடுதல் பேரம் பேசும் ராஜதந்திரத் திட் டத்துடன்தான் நபியவர்கள் இந்தச் சலுகையை ஏற்க மறுத்தார் களா? அப்படி ஒன்றுமில்லை!

ஆனால் நபி(ஸல்)அவர்கள் அளித்த பதில் இதுதான்: அள விலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ் வின் திருப் பெயரால் ஆரம்பம் செய்கிறேன் என்று ஓதத் தொடங்கி, (41 ஆம் அத்தியாயத்தின் 1 - 38) வசனத் தொடரை உத்பாவுக்கு ஓதிக்காட்டினார்கள். [37]

அத்தகைய சில வசனங்களின் (மொழிபெயர்ப்பு) வருமாறு:

‘ஹா - மீம், இது, அளவிலாக் கருணையும் இணையிலாக் கிரு பையும் உடைய இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்டதாகும். அரபி மொழியிலுள்ள குர்ஆனாகிய இந்த வேதத்தின் வசனங்கள், அறிவுள்ள மக்களுக்காக நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. நற்செய்தி சொல்லக்கூடியதாகவும் எச்சரிக்கை செய்யக்கூடியதாகவும் உள் ளது. ஆனால் இந்த மக்களில் பெரும்பாலோர் புறக்கணித்து விட்ட னரே. (இதனைச்) செவியேற்காமல் உள்ளனரே!’ (41 : 1 -4)

மற்றொரு தடவை, இஸ்லாத்தில் சேர்வதற்கு மக்களை அழைப் பதைக் கைவிடுமாறு பெரிய தந்தை (அபூ தாலிப்) முன் வைத்த வேண்டுகோளுக்கு -முஹம்மது (ஸல்) அவர்கள் அளித்த பதில் எந்த அளவுக்கு வீரத்துடனும் வினையத்துடனும் தூய்மையுடனும் இருந்தது என்றால், நபியவர்கள் கூறினார்கள்:

‘இறைவன் பெயரில் ஆணையிட்டுச் சொல்கிறேன், என் பெரிய தந்தையே! இவர்கள் எனது வலது கையில் சூரியனையும், எனது இடது கையில் சந்திரனையும் வைத்தாலும் சரியே, (மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும்) இந்தப்பணியை நான் கைவிட மாட்டேன், அல்லாஹ் இதை வெற்றி பெறச் செய்யும் வரையில் அல் லது இதனை நிறைவேற்றும் முயற்சியில் நான் அழிக்கப்படும் வரை யில்’ [38]

---

[37] இப்னு ஹிஷாமின் ஸீரத்துன்நபி பாகம் 1 பக்கம் 293 - 294

[38] இப்னு ஹிஷாமின் ஸீரத்துன்நபி பாகம் 1 பக்கம் 265 – 266

முஹம்மது நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் இந்தக் கொடுமைகளினால் 13 ஆண்டுகாலம் துன்பத்திற்கு உள்ளா னதோடு மட்டும் விஷயம் முடிவடையவில்லை. மாறாக இணைவைப் பாளர்கள், பல முறை முஹம்மது நபி (ஸல்)அவர்களைக் கொலை செய்வதற்கும்கூட முயற்சி செய்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் பெரிய பாறை ஒன்றை உருட்டிவிட்டு - அது நபியவர்கள் மீது விழுமாறுச் செய்வதற்கு முயற்சி செய்தார்கள்.[39]மற்றொரு சந்தர்ப்பத்தில் உண வில் நஞ்சைக் கலந்து நபியவர்களுக்கு கொடுக்க முயன்றனர். [40]

இதுபோன்ற துன்பங்களை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சகித்துக்கொண்டதும் தமது வாழ்வையே அர்ப்பணித்ததும் - எது வரையில் என்றால் அவர்களுடைய எதிரிகளின் மீது முழு வெற்றியை நிலைநாட்டிய பிறகுள்ள தியாகமும்கூட எதைக் காட்டுகிறது? அவர் களது பணிவும், மகத்தான புகழுக்குரிய நேரங்களில் அவர்கள் வெளிப்படுத்திய சிறப்பும் - தமது வெற்றிக்கு அடிப்படை, அல்லாஹ் ஒருவன் செய்த உதவிதானே தவிர, தமது சொந்தத் திறமை அல்ல என்று உறுதிபட தெரிவித்த ரீதியிலான பண்பும் விளக்கித் தருவது என்ன? இவை யாவும், அதிகாரமோகம் கொண்ட ஒரு மனிதனின் அல்லது ஆணவமான இயல்புடைய மனிதனின் தனிப் பண்புகளாக இருக்க முடியுமா, என்ன?

# 7 -இஸ்லாத்தின் அபாரமான வளர்ச்சி

இந்த அத்தியாயத்தின் இறுதியில், இஸ்லாத்தின் உண்மை நிலையை உறுதிப்படுத்தும் முக்கியமான அம்சத்தைச் சுட்டிக்காட்டு வது பொருத்தமாக இருக்கும்.

இந்த விஷயம் அதாவது. அமெரிக்காவிலும், உலகம் முழுவதி லும் இஸ்லாம்தான் மிக வேகமாகப் பரவி வரும் மதமாக உள்ளது என்பது, நன்கு அறியப்பட்ட விஷயமாகும். இத்தகைய இந்நிகழ்ச்சி தொடர்பாக சில புள்ளிவிவரங்கள் கீழே இடம் பெறுகின்றன:

- ‘இஸ்லாம், அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவிவரும் மத மாக உள்ளது. நமது மக்களில் பெரும்பாலோருக்கு வழிகாட்டி

[39] இப்னு ஹிஷாமின் ஸீரத்துன்நபி பாகம் 1 பக்கம் 298 – 299

[40] தாரமி, 68, அபூ தாவூத் 4510

யாகவும் நிலைப்பாட்டிற்கு அடிகோலுவதாகவும் அது திகழ்கிறது' (ஹிலாரி ரோதம் கிளிண்டன், லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்) [41]

❂ 'முஸ்லிம்கள், உலக அளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் மதத்தைச் சேர்ந்த மக்கள் ஆவர்' (மக்கள் தொகைக் கணக் கெடுப்பு புள்ளிவிவரம், யுஎஸ்ஏ டுடே) [42]

❂ 'இஸ்லாம் இந்நாட்டில் மிகவேகமாக வளர்ந்து வரும் மதமாக உள்ளது' Geraldine Baum., Newsday Religion Writer, Newsday [43]

❂ 'இஸ்லாம், அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவிவரும் மதம் ஆகும்' [44]

வியக்கத்தக்க இந்நிகழ்வு- 'இஸ்லாம் இறைவன் அருளிய உண் மையான மார்க்கம்தான்' என்பதை நிரூபிக்கிறது. அதிக அளவு எண்ணிக்கையிலான அமெரிக்கர்களும் பலதரப்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏனைய மக்களும் -

இஸ்லாம் சத்திய மார்க்கம்தான் என்று முடிவு செய்யும் முன்னர் அது பற்றி ஆழமாகச் சிந்திக்காமலும்தான் - அது, இறைவன் அரு ளிய மார்க்கம்தானா என்பதை உறுதி செய்யாமலும்தான் இஸ்லாத் தில் சேர்ந்திருக்கிறார்கள் என்று கருதுவது, அறிவுக்குப் புறம்பா னதாகும்.

இவ்வாறு இஸ்லாத்தில் இணைந்தவர்கள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாகவும், பலதரப்பட்ட வகுப்புகளையும் பழக்க வழக் கங்களையும் சமூக அந்தஸ்துகளையும் கொண்டவர்களாகவும் உள்ளனர். அவர்களில் அறிவியலாளர்களும் பேராசிரியர்களும் டாக்டர் பட்டம் பெற்றவர்களும் பத்திரிக்கையாளர்களும் அரசியல் வாதிகளும் நடிகர்களும்

---

[41] Larry B.Stammer, Times Religion Writer, "First Lady Breaks Ground with Muslims" Los Angeles Times. Home Edition, Metro Section, Part B, MAY 31, 1996. P. 3

[42] Timothy Kenny, "Elsewhere in the world", USA Today, Final Edition, New Section, February, 17, 1989. p.4A

[43] Geraldine Baum., "For Love of Allah." Newsday, Nassau and Suffolk Edition, part 11, March 7, p.4

[44] Ari L. Goldman, "Mainstream Islam Rapidly Embraced By Black Americans, "New York Times, Late City Final Edition, February 21, 1989, p. 1.

விளையாட்டு வீரர்களும் பிற முக்கிய பிரமுகர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள்.

இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள், இந்த நம்பிக்கையை -அதாவது குர்ஆன், அல்லாஹ் மொழிந்த வேதம் தான்., முஹம்மது நபி(ஸல்), இறைவனின் உண்மையான தூதர் தான்., இஸ்லாம், இறைவன் வழங்கிய உண்மையான மார்க்கம் தான் என்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**அத்தியாயம் - 2**

# இஸ்லாத்தின் தனிச்சிறப்புகள்

இஸ்லாம், தனிமனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏராளமான நன்மைகளை வழங்குகிறது. இந்த அத்தியாயத்தில் தனிமனிதர் களுக்குப் பயன்அளிக்கின்ற நன்மைகள் பற்றி விளக்கம் கொடுக்கப் படுகின்றன.

# 1 - நிரந்தரமான சுவனத்தின் வாசல்

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: '(நபியே! இவ் வேதத்தில்) நம்பிக்கை கொண்டு (அதன் அறிவுரைகளின்படி) நற் செயல்கள் செய்வோர்க்கு - கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக் கும் சுவனங்கள் நிச்சயம் உண்டென்று நற்செய்தி கூறுவீராக!'(2 : 25)

குர்ஆனில் இன்னோர் இடத்தில் கூறியிருக்கிறான்:

'ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடுங்கள், உங்கள் இறை வனின் மன்னிப்பை நோக்கியும், வானம் பூமி அளவுக்கு விசாலமான சுவனத்தை நோக்கியும் (ஓடுங்கள்) அல்லாஹ்வின் மீதும் அவனு டைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களுக்காக அது தயார் செய்யப்பட்டிருக்கிறது' (57 : 21)

முஹம்மது நபி(ஸல்) நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதா வது, சுவனத்தில் பிரவேசிப்பவர்களில் மிகவும் தாழ்ந்த படித்தரம் உடையவன், இவ்வுலகத்தையும் அதைப்போல் பத்து மடங்கு அதிகமாகவும் பெறுவான். (ஸஹீஹ் முஸ்லிம் எண் 186, ஸஹீ ஹு ல் புகாரி எண் 6571) மேலும் அவன், எதை விரும்புகிறானோ அதையும் அதைப் போல் பத்து மடங்கு அதிகமாகவும் பெறுவான்' (ஸஹீஹ் முஸ்லிம் 188, ஸஹீ ஹு ல் புகாரி 10832)

மேலும் முஹம்மது நபி(ஸல்)சொல்லியிருக்கிறார்கள்: 'ஒரு கால் எட்டு அளவிலான சுவனத்து இடம், இவ்வுலகத்தையும் அதிலுள்ள அனைத்துப் பொருட்களையும் விடச் சிறந்ததாகும்' (ஸஹீ ஹு ல் புகாரி எண் 6568)முஸ்னத் அஹ்மது எண் 13368) மேலும் சொன்

னார்கள்: 'சுவனத்தில் தயார் செய்து வைக்கப்பட்டுள்ள பொருட் களை எந்தக் கண்களும் பார்த்திருக்காது, எந்தக் காதுகளும் அவற்றைப் பற்றி கேட்டிருக்காது, எந்த மனிதனின் உள்ளமும் அவற்றைப் பற்றி கற்பனை செய்திருக்காது' (ஸஹீஹ் முஸ்லிம் 2825, முஸ்னத் அஹ்மது எண் 8609)

மேலும் சொன்னார்கள்:

'உலகத்தில் மனிதர்களிலேயே மிகக் கடுமையான துன்பத்திற்கு ஆளாகியிருந்த -சுவன வாசிகளைச் சேர்ந்த ஒருமனிதன் கொண்டு வரப்படுவான். சுவனத்தில் ஒருதடவை போட்டு எடுக்கப்படுவான். பிறகு அவனிடத்தில், 'மனிதனே! ஏதேனும் துன்பத்தை நீ பார்த்த துண்டா? ஏதேனும் கஷ்டத்தை நீ அனுபவித்ததுண்டா? என்று கேட்கப்படும். அதற்கு அவன், 'இல்லை! அல்லாஹ்வின் மீது சத்தி யமாக! என் இறைவா! எந்தத் துன்பமும் எனக்கு ஏற்பட்டதில்லை! எந்தக் கஷ்டத்தையும் நான் கண்டதே இல்லை' என்று சொல் வான்' (ஸஹீஹ் முஸ்லிம், 2807, முஸ்னத் அஹ்மது, 12699)

(அதாவது உலகில் அனுபவித்த கஷ்டங்களெல்லாம் மறந்து போகும் அளவுக்கு சுவனபதியின் இன்பம், மிகமிக ஆனந்தமாக இருக்கும்)

நீங்கள் சுவனபதியில் பிரவேசித்தீர்கள் எனில், எந்த நோயும் நோவினையுமின்றி, மரணம் பற்றிய கவலை ஏதுமின்றி மிகவும் பாக் கியசாலிகளாக வாழ்வீர்கள். மேலும் அல்லாஹ்வின் திருஉவப்பு உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். அங்கேயே என்றென்றும் நிலை யாகத் தங்கி வாழ்வீர்கள்!

குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: 'மேலும் எவர்கள் நம் வசனங் களை ஏற்று, நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களை - கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனப் பூங்காக்களில் நுழை விப்போம். அங்கே அவர்கள் என்றென்றும் நிலையாகத் தங்கி வாழ் வார்கள். அங்கு அவர்களுக்கு மிகத் தூய்மையான துணைவியர் இருப்பார்கள். மேலும் அவர்களை நாம் அடர்ந்த நிழலில் அமரச் செய்வோம்' (4 : 57)

(சுவனபதி பற்றியும் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை பற்றி யும் மேலும் அதிக விவரங்களை அறிவதற்கு, www.islam-Guide. com|hereafter எனும் இணைய தளத்திற்கு வரவும்)

## 2 - நரகத்திலிருந்து ஈடேற்றம்

குர்ஆனில் இறைவன் கூறுகிறான்: 'திண்ணமாக எவர்கள் நிரா கரிப்பை மேற்கொண்டு நிராகரிப்பாளர்களாகவே மரணம் அடைந்து விடுகிறார்களோ அவர்கள், தம்மைத் தண்டனையில் இருந்து காப் பாற்றிக்கொள்ளப் பூமி நிரம்பப் பொன்னை, ஈட்டுத் தொகையாகத்

தந்தாலும் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இத்தகையோருக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது. மேலும் அவர்களுக்கு உதவி புரிவோர் எவரும் இருக்க மாட்டார்' (3 : 91)

எனவே, இந்த வாழ்க்கை மட்டும்தான், சுவனத்தை வென்றெடுப்பதற்கும் நரக நெருப்பில் இருந்து ஈடேற்றம் அடைவதற்கும் உரிய ஒரே நல்வாய்ப்பு ஆகும். ஏனெனில் ஒருமனிதன், இறைநிராகரிப்பாளனாக மரணம் அடைந்துவிட்டால், அதன் பிறகு இறைநம்பிக்கை கொள்வதற்காக இவ்வுலகத்திற்கு மீண்டும் ஒரு முறை திரும்பி வருவதற்கான சந்தர்ப்பத்தை அவனால் பெறவே முடியாது.

இதோ! நிராகரிப்பாளர்களுக்கு மறுமை நாளில் என்ன கதி ஏற்படும் என்பது பற்றி குர்ஆனில் இறைவன் கூறியிருக்கிறான்:

'அந்தோ! நரகத்தின் விளிம்பில் அவர்கள் நிறுத்தப்படும்பொழுது அந்நிலையை நீர் பார்க்க வேண்டுமே! அந்நேரத்தில், 'அந்தோ! நாங்கள் உலகத்திற்குத் திரும்பிச் செல்ல ஒருவாய்ப்புக் கிடைக்காதா? (அவ்வாறு கிடைத்தால்) எங்கள் இறைவனின் திருவசனங்களைப் பொய்யென்று வாதிடமாட்டோமே! மேலும் இறைநம்பிக்கையாளர்களின் கூட்டத்தில் சேருவோமே!' என்று அவர்கள் புலம்புவார்கள்' (6:27) -ஆனால் எவருக்கும் மீண்டும் ஒருமுறை உலகத்திற்குத் திரும்பும் வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது!

முஹம்மது நபி(ஸல்) கூறினார்கள்: "நரகவாசிகளில் ஒருவனாகி விட்ட - உலக மக்களில் மிகவும் சுகபோகமாக வாழ்ந்த ஒரு மனிதன் கொண்டுவரப்படுவான், நரகில் ஒருமுறை போட்டு எடுக்கப்படுவான். பிறகு கேட்கப்படும்: மனிதனே! நீ எப்பொழுதாவது இன்ப நலத்தை அனுபவித்தது உண்டா? என்று! அதற்கு அவன், 'என் இறைவனே! உன் மீது ஆணையாக! எந்த இன்பத்தையும் நான் அனுபவிக்கவில்லை'என்று சொல்லுவான்" (ஸஹீஹ் முஸ்லிம், எண் 2807, முஸ்னத் அஹ்மது, எண் 12699)

(அதாவது உலகில் அனுபவித்த இன்பங்களெல்லாம் மறந்து போகும் அளவு நரக வேதனை மிகமிகக் கடுமையாக இருக்கும்)

# 3 - உண்மையான பாக்கியமும் உள்மன அமைதியும்

உண்மையான பாக்கியத்தையும் உளப்பூர்வமான அமைதியையும் - பேரண்டத்தின் படைப்பாளனும் அதனை நன்கு நிர்வகிப்ப னுமாகிய இறைவனின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். குர்ஆனில் இறைவன் கூறியிருக்கிறான்:



'(இறைநம்பிக்கைகொண்ட)இவர்களின் இதயங்கள், உண்மையில் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலம் நிம்மதி அடைகின்றன' (13:28)

மறுபுறம் - எவன், குர்ஆனை விட்டும் விலகிச் செல்கிறானோ அவன், இவ்வுலகில் கடினமான வாழ்க்கையைச் சந்திப்பான். குர்ஆனில் இறைவன் கூறியிருக்கிறான்:

'எவன் எனது (திக்ரை - குர்ஆன் எனும்) நல்லுரையைப்[45] புறக்கணிக்கிறானோ அவனுக்கு (இவ்வுலகில்) கடினமான வாழ்வு இருக்கிறது. மேலும் மறுமை நாளில் அவனை நாம் குருடனாக எழுப்புவோம்''(20 : 124)

மனிதர்களில் சிலர், செல்வத்தின் மூலம் கிடைக்கிற உலகாயத நிம்மதியை அனுபவித்து வருவதுடனேயே ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதற்கு இவ்வசனங்கள் விளக்கம் தருகின்றன.

உதாரணத்திற்கு - கேட் ஸ்டீபன்ஸ் (Cat Stevens) என்பவரை எடுத்துக்கொள்ளுங்கள். (புதிதாக இஸ்லாத்தில் இணைந்து யூசுப் இஸ்லாம் என்று புகழ்பெற்றுள்ள இவர்) இதற்கு முன்பு பிரபலமான பாப் இசைப்பாடகராக இருந்தார். சில நேரங்களில் ஓர் இரவில் மட்டும் 150000 டாலர் வரையில் சம்பாதித்துக்கொண்டிருந்தார். இவர் இஸ்லாத்தில் சேர்ந்த பிறகு உண்மையான பாக்கியத்தையும் அமைதியையும் பெற்றார். அவர், உலகாயத ரீதியில் முன்னர் பெற்றிருந்த 'வெற்றியில்' காணக்கிடைக்காத ஒரு பாக்கியமாகும் இது.[46]

புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்த மக்களின் சரித்திரங்களை நீங்கள் படிக்கவிரும்பினால், www.islam-Guide.com|stories எனும் இணைய தளத்திற்கு வருமாறு வேண்டுகிறோம். அல்லது why Islam is our

---

[45] வேறு வார்த்தையில் சொல்வதாயின் இப்படிச் சொல்லலாம்: 'எவன் குர்ஆன் மீது நம்பிக்கை கொள்ளவில்லையோ அதன் கட்டளைகளின்படி செயல்படவில்லையோ அவனுக்கு ...'

[46] (யூசுப் இஸ்லாம் அவர்களின் தற்போதைய முகவரி: 2, Digswell street, London N7 8JX, Unaited Kingdom. இஸ்லாத்தில் சேர்ந்த பிறகு எத்தகைய பாக்கியத்தை உணர்கிறீர்கள் என்று அவரிடத்தில் நீங்கள் கேட்க விரும்பினால் இந்த முகவரி யில் அவருடன் தொடர்பு கொள்ளலாம்)

**Only Choice? - இஸ்லாத்தை ஏன் நாங்கள் தேர்வு செய்தோம்? [47] எனும் நூலைப் பார்வையிடவும். இந்த இணைய தளத்திலும் இந்த நூலிலும் - புதிதாக இஸ்லாத்தில் இணைந்த இந்த மக்களின் கருத்துகளையும் உணர்வுகளையும் நீங்கள் படிக்கலாம். இவர்கள் எல்லாம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், வேறுபட்ட பின்ன ணிகளையும் கல்வி ரீதியில் மாறுபட்ட நிலைகளையும் கொண்ட வர்கள் ஆவர்.**

# 4 - முந்தைய பாவங்கள் முழுவதையும் மன்னித்தல்

**ஒரு மனிதன், புதிதாக இஸ்லாத்தில் இணைந்தால் இறைவன் அவனுடைய முந்தைய பாவங்களையும் தீய செயல்களையும் மன் னித்து விடுகிறான்.**

**அம்ர் பின் ஆஸ் (ரலி) என்கிற ஒருதோழர் முஹம்மது நபி (ஸல்) யிடம் வந்து, 'உங்களது வலது கையை நீட்டுங்கள்., நான் உங்களிடம் விசுவாசப் பிரமாணம் செய்து தர வேண்டும்' என்று சொன்னார். நபி(ஸல்) தமது வலது கையை நீட்டினார்கள். ஆனால் அம்ர் தமது கையை மடக்கிக்கொண்டார். நபி (ஸல்) 'அம்ரே! உனக்கு என்ன ஆனது?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'நான் ஒரு நிபந்தனை விதிக்க விரும்புகிறேன்' என்று பதில் அளித்தார். நபியவர்கள், 'நீ என்ன நிபந்தனை விதிக்க விரும்பு கிறாய்?' என்று கேட்டார்கள். அவர், 'இறைவன் என் பாவங்களை மன்னிக்க வேண்டும் என்பதுதான் அது' என்றார். அப்பொழுது நபி (ஸல்) 'புதிதாக இஸ்லாத்தில் சேர்வது என்பது, முந்தைய பாவங் களையெல்லாம் அழித்துவிடும் என்பதை நீ அறியவில்லையா?' என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், எண் 121, முஸ்னத் அஹ்மது, எண் 17357)**

**இஸ்லாத்தில் இணைந்த பிறகு ஓர் ஆண் அல்லது ஒரு பெண் ஒரு நற்செயலை அல்லது ஒருகெட்ட செயலைச் செய்ததன் பேரில் அதற்கான நற்கூலி - தண்டனை வழங்கப்படும்., பின்வரும் ஒரு நபிமொழியின் அடிப்படையில் அமையும்! (அதன் கருத்து வருமாறு:)**

---

[47] இது, முஹம்மது H.ஷாஹித் அவர்களின் நூல் ஆகும். இந்நூலின் பிரதி ஒன்று வேண்டும் எனில், மேலே கொடுக்கப்பட்ட இணைய தளத்தில் பெறலாம். அல் லது இந்நூலின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் தொடர்பு கொள் ளலாம்.

அருட்பேறும் உயர்வும் மிக்கவனாகிய உங்கள் இறைவன், பெரும் கிருபையாளன் ஆவான். ஒருவன் ஒருநல்ல செயலைச் செய்ய நாடினான்., ஆனால் அதை அவன் செயல்படுத்தவில்லை என்றால், ஒருநன்மை அவன் பெயரில் பதிவுசெய்யப்படும். ஒருவன் ஒருநல்ல செயலைச் செய்ய நாடி அதைச் செயல்படுத்தவும் செய் தால் அல்லாஹ் அதைப் பத்து நன்மைகளாகப் பதிவு செய்து கொள்கிறான்.,அது எழுநூறு மடங்குகளாக ஏன், அதற்கும் அதிக மாக ஏராளமான மடங்குகளாக அதிகரித்துக்கொண்டு செல்கிறது! ஒருவன் ஒருதீமையை நாடினான்., ஆனால் அதனைச் செய்ய வில்லை என்றால், ஒருநன்மை அவன் பெயரில் பதிவுசெய்யப்படு கிறது. ஆனால் அதைச் செயல்படுத்தினால் அவன் பெயரில் ஒரே ஒரு தீமை பதிவு செய்யப்படுகிறது., அல்லது இறைவன் அதை மன்னிக்கவும் செய்யலாம்' (பார்க்க: முஸ்னத் அஹ்மது,எண் 2515, ஸஹீஹ் முஸ்லிம், எண் 131)

அத்தியாயம் - 3

# இஸ்லாம் : முக்கியமான தகவல்கள்

# இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாமிய மார்க்கம் என்பது, இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்)க்கு வஹீ எனும் இறையருட்செய்தி மூலம் அருளப்பட்ட இறைச்சட்டங்களை ஏற்றுக்கொள்வதும் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதும் ஆகும்.

# இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

## (1) இறைவன் மீது நம்பிக்கை கொள்வது

இறைவன் மீது ஒருமுஸ்லிம் நம்பிக்கை கொள்ள வேண்டும். எப்படி என்றால், இறைவன் ஒருவனே., அவன் ஏகன்! மேலும் அவன் எப்படிப்பட்டவன் எனில், அவனுக்குக் குமாரர் என்று யாரும் இல்லை.,அவனுக்கு இணைதுணை என்று யாரும் இல்லை. வணக் கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. அவனே உண்மையான இறைவன். அவனைத் தவிர உள்ள தெய்வங்கள் அனைத்தும் போலியானவை. மேலும் அவனுக்கு, அழகிய திருப் பெயர்களும் ஆற்றல்மிக்க - பரிபூரணமான தன்மைகளும் உண்டு. அவனுக்குரிய இறைமையிலும் பரிபூரணத் தன்மைகளிலும் அவ னுக்கு இணையானவர் யாருமில்லை. இறைவன் திருக்குர்ஆனில் தன்னைப் பற்றி இவ்வாறு வர்ணிக்கிறான்:



(திருக்குர்ஆனின் 112 வது அத்தியாயத்தின்
அரபி எழுத்துக் கைவண்ணம்)

**'கூறுவீராக! அவன் அல்லாஹ், ஏகன். அல்லாஹ், எவரிடத்தும் எத்தேவையும் இல்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவை யுடையவர்களே ஆவர். அவனுக்குப் பிள்ளைகள் என்றும் பெற்றோர் என்றும் யாரும் இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவரும் இல்லை' (112 : 1 - 4)**

**பிரார்த்தனை, பணிவடக்கத்துடன் கீழ்ப்படிதல், தொழுகை ஆகிய வணக்கங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகுதியானவன், அந்த ஏக இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை.**

**இறைவன் மட்டும்தான், எல்லா ஆற்றல்களும் நிறைவாய் உள்ள வன்., அவனே இந்தப் பேரண்டத்தைப் படைத்தவன்., ஆட்சியா ளன்., பேரண்டம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு பொருளையும் நன்கு நிர்வகிப்பவன்.**

**மேலும் அவன்தான் எல்லா காரியங்களையும் நிர்வகிக்கிறான். தன் படைப்பினங்களின் பக்கம் அவன் தேவையாகுவதில்லை. அவனுடைய படைப்பினங்கள்தான் - தேவையான அனைத்து விவ காரங்களிலும் அவனைச் சார்ந்து நிற்பவையாக உள்ளன.**

**அவனே அனைத்தையும் செவியேற்பவனாகவும் பார்ப்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கிறான். அவனது அறிவுஞானம், எல்லாவற் றையும் வியாபித்துள்ளது. வெளிப்படையான ஒன்றானாலும் மறை வானதானாலும் சரியே, பொதுவான ஒன்றானாலும் தனிப்பட்ட தானாலும் சரியே! அனைத்தையும் முழுமையாக அவன் அறிந்து கொண்டிருக்கிறான். நிகழ்ந்தவை அனைத்தையும் இறைவன் நிச்ச**

யமாக அறிகின்றான். நிகழவிருப்பவை அனைத்தையும் அவன் அறிகின்றான். அவை எப்படி நிகழும் என்பதையும் அறிகின்றான்.

இப்பேரண்டம் முழுவதிலும் எந்த ஒன்று நிகழ்வதாக இருந்தாலும் அவனது அனுமதி இன்றி நிகழ்வதில்லை. அவன் நாடியது எதுவானாலும் அது உண்டாகின்றன., அவன் நாடாத எதுவும் உண்டாகாது. அவனுடைய அனைத்துப் படைப்புகளின் நாட்டத்திற்கு மேல் அவனது நாட்டம்தான் ஆதிக்கம் செலுத்துகிறது. எல்லாவற்றை விடவும் - எல்லோரையும் விடவும் ஆற்றல் நிறைந்தவன் அவன்தான். அவனே அனைத்தின் மீதும் ஆற்றல் உடையவன். நிச்சயமாக அவன், அளவிலாக் கருணையாளன், இணையிலாக் கிருபையாளன், நன்மை அளிப்பவன்.

முஹம்மது நபி(ஸல்)அவர்கள் மொழிந்த ஒரு ஹதீஸில் கூறியிருக்கிறார்கள்:

'ஒருதாய் தன் பிள்ளையின் மீது இரக்கம் கொள்வதை விடவும் அதிகமாக அல்லாஹ், தன்னுடைய படைப்பினங்களின் மீது இரக்கம் கொள்பவனாக இருக்கிறான்' (ஸஹீஹ் முஸ்லிம், எண் 2754, ஸஹீஹு ல் புகாரி, எண் 5999)

நிச்சயமாக அல்லாஹ், அநீதி செய்தல், வரம்பு மீறல் ஆகியவற்றை விட்டும் தூரமானவன். மேலும் அவனுடைய அனைத்து செயல்களிலும் ஆணைகளிலும் அவன் விவேகமானவன். ஒரு மனிதன், இறைவனிடம் இருந்து ஏதேனும் ஒன்றை நாடினால், நேரடியாகவே அவனை அழைத்துப் பிரார்த்தனை செய்யலாம். அது தொடர்பாகத் தனக்காக அல்லாஹ்விடத்தில் பேசி ஏற்பாடு செய்வதற்காக வேறு எவரிடமும் சென்று அவன் கோரிக்கை வைக்க வேண்டிய அவசியமில்லை.

அல்லாஹ், ஏசுநாதர் அல்லன்., ஏசுநாதர் அல்லாஹ் அல்லர். [48] சரியாகச் சொல்வதாயின், ஏசுநாதர்கூட இந்தத்தவறான கருத்தை

[48] லண்டன் பத்திரிக்கையாளர் சங்கம் 1984 ஆம் ஆண்டு ஜூன் 25 இல் இவ்வாறு அறிவித்தது:

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெரும்பாலான பாதிரிமார்களிடம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் மூலம் கருத்து கேட்கப்பட்டபொழுது, 'கிறிஸ்தவர்கள், ஏசுகிறிஸ்து கடவுளாகத்தான் இருந்தார் என்று நம்பிக்கை கொள்ளவது கடமையல்ல' என்று கூறினார்கள். இங்கிலாந்தைச் சேர்ந்த 39 பாதிரிகளில் சுமார் 31 பாதிரிகளின் கருத்தாகும் இது.

அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது: இந்த 19 பாதிரிமார்கள் கூறினார்கள்: 'ஏசுகிறிஸ்து, (God's supreme agent) இறைவனின் மிகப்பெரிய பிரதிநிதியாக இருந்தார் என்று நம்பிக்கை கொள்வதே போதுமானதாகும்' லண்டன் மாநகரின் ஒரு வாராந்திர தொலைக்காட்சி நடத்திய "Credo" என்கின்ற வாராந்திர மத நிகழ்ச்சி ஒன்றில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும் இது)

மறுத்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இறைவன், குர்ஆனில் கூறியிருக்கிறான்:

'திண்ணமாக, 'மர்யத்தின் குமாரர் மஸீஹ்தான் அல்லாஹ்' என்று கூறியவர்கள் சந்தேகமின்றி நிராகரிப்பாளர்களாக ஆகி விட் டார்கள். 'இஸ்ராயீலின் வழித்தோன்றல்களே! என்னுடைய இறைவ னும் உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை மட்டுமே வணங்குங்கள்' என்றுதான் திண்ணமாக மஸீஹ் கூறியிருந்தார். எவன் அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்குகிறானோ அவனுக் குத் திண்ணமாக அல்லாஹ் சுவனத்தைத் தடைசெய்துவிட்டான். மேலும் அவனது இருப்பிடம் நரகம்தான். இத்தகைய அநியாயக் காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை' (5 : 72)

இறைவன், முக்கடவுளரில் ஒருகடவுள் என்பதில்லை. இறைவன் குர்ஆனில் கூறியுள்ளான்:

'நிச்சயமாக, இறைவன் மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர் களும் நிராகரிப்பாளர்களாகி விட்டார்கள். உண்மையில் ஒரே இறை வனைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை. இவ்வாறு கூறு வதிலிருந்து இவர்கள் விலகிக் கொள்ளவில்லை எனில்- இவர்களில் உள்ள இத்தகைய நிராகரிப்பாளர்கள் அனைவரும், துன்புறுத்தும் தண்டனையை சந்தித்தே தீரவேண்டும். (அவ்வாறிருக்க) இவர் கள், அல்லாஹ்வின் பக்கம் திரும்பிட வேண்டாமா? அவனிடத்தில் பாவமன்னிப்புத் தேடிட வேண்டாமா? அல்லாஹ், பெரும் மன்னிப் பாளனாகவும் கிருபையாளனாகவும் இருக்கிறான். மர்யத்தின் குமாரர் மஸீஹ், ஓர் இறைத்தூதரே அன்றி வேறில்லை. அவருக்கு முன்னரும் இறைத்தூதர்கள் பலர் சென்றிருக்கிறார்கள். மேலும் அவருடைய அன்னை, வாய்மையுள்ள ஒரு பெண்மணியே ஆவார். அவர்கள் இருவரும் உணவு உண்பவர்களாகவே இருந்தார்கள். பாருங்கள்! (சத்தியத்திற்கான) சான்றுகளை எவ்வாறெல்லாம் அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்துகிறோம் என்பதை! அத்துட னேயே அவர்கள் உண்மையை விட்டும் எவ்வாறெல்லாம் பிறழ்ந்து செல்கிறார்கள் என்பதையும் பாருங்கள்!' (5 : 73 - 75)

இஸ்லாம் இந்தக் கருத்துகளை மறுக்கிறது. அதாவது படைத் தலின் ஏழாவது நாளில் இறைவன் ஓய்வு பெற்றான் என்பதையும் தன்னுடைய மலக்குகளில் ஒரு மலக்குடன் குத்துச்சண்டை போட் டான் என்பதையும் இறைவன் பொறாமை கொண்டு மனிதர்களுக்கு எதிராகச் சதியாலோசனை செய்தான் என்கிற கருத்தையும் மறுக்

கிறது. இதேபோல் இறைவன், யாரேனும் ஒருவரினுள் ஊடுறுவி மனித வடிவம் பெற்றான் என்பதையும் இஸ்லாம் மறுக்கிறது.

இஸ்லாம் இந்தக் கருத்துகளையும் மறுக்கிறது. அதாவது, யாரேனும் ஒருமனிதன், இறைவனின் சார்பில் அவதாரம் எடுத்தான் என்பதையும் மறுக்கிறது. இவை அனைத்தும் குஃப்ர் - இறைநிரா கரிப்பாக கணிக்கப்படுகிறது. இறைவன், மிக்க மேலானவன். மிக வும் உயர்ந்தோனாகிய இறைவன், எந்த ஒருகுறைபாட்டை விட்டும் மிக மிகத்தூரமானவன் ஆவான். தூய்மைமிக்க இறைவனாகிய அல் லாஹ், எப்பொழுதும் களைத்துப்போவதில்லை. சிற்றுறக்கமோ உறக்கமோ அவனைப் பிடிப்பதில்லை ...!

# அல்லாஹ் : சொல் விளக்கம்

(இப்பேரண்டம் முழுவதையும் படைத்த வணக்கத்திற்குரிய, ஏக னாகிய உண்மையான ஓர் இறைவன் எனும் கருத்துடைய) அல் லாஹ் என்கிற இந்த வார்த்தை, வணக்கத்திற்குரிய இறைவனின் பெயராகும். இது, அரபுமொழி பேசுகின்ற மக்களால் - அவர்கள் அரபு முஸ்லிம்களானாலும் அரபு கிறிஸ்தவர்களானாலும் சரியே - அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த வார்த்தை, வணக்கத்திற்குரிய ஏகனாகிய இறைவன் ஒரு வனுக்கே தவிர வேறு எவரையும் - எந்தப் பொருளையும் குறிப்ப தற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. அல்லாஹ் என்கின்ற இந்த வார்த்தை, குர்ஆனில் 2150 தடவைக்கும் அதிகமாகப் பயன்படுத் தப்பட்டுள்ளது. அரபி மொழியுடன் ஆழமான தொடர்புடைய மொழி யாகிய, ஏசு நாதரும் விரும்பிப் பேசிய [49] அராமிக் மொழியில் இறை வன் என்றால் அதன் பொருள், அல்லாஹ் என்றே கருதப்பட்டது.

# 2 - மலக்குகளின் மீது நம்பிக்கை கொள்வது

முஸ்லிம்கள், மலக்குகள் என்கின்ற படைப்பு உண்டு என்று நம் பிக்கை கொள்கிறார்கள். மேலும் மலக்குகள், மிகவும் உயர்வான ஒரு படைப்பினம்., அவர்கள், இறைவன் ஒருவனை மட்டுமே வணங்கி வழிபடுகிறார்கள்., இறைவனின் கட்டளைக்கு மட்டுமே கீழ்ப்படிகிறார்கள்., அவனது கட்டளையை மட்டுமே செயல்படுத்து கிறார்கள் என்றும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கிறார்கள்.

[49] NIV Compactet Dictionary of the Bible, Douglas, page 42

அந்த மலக்குகளில் ஒருவர்தான் ஜிப்ரீல் என்கின்ற மலக்கு. இவர்தான், இறைவேதம் குர்ஆனை முஹம்மது நபியவர்களுக்கு அருளியவர் ஆவார்.

# 3 - இறைவேதங்களின் மீது நம்பிக்கை கொள்வது

முஸ்லிம்களின் மற்றொரு நம்பிக்கை என்னவெனில், அல்லாஹ், தன்னுடைய தூதர்களுக்கு வேதங்களை அருளினான். அவை, மனித குலத்திற்கு ஓர் ஆதாரமாகவும் நேர்வழியாகவும் திகழ்கின் றன. இத்தகைய வேதங்களில் ஒன்றுதான் குர்ஆன் என்கிற வேதம். இதனை இறைவன், முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளினான். இந்தக் குர்ஆனை, எவ்வித மாற்றங்களுக்கும் களங் கத்திற்கும் உள்ளாகாமல் பாதுகாத்திட அல்லாஹ்வே பொறுப்பேற் றுள்ளான். குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

'திண்ணமாக நாம்தான், (குர்ஆன் என்கிற) இந்நல்லுரையை இறக்கினோம். மேலும் நாமே இதைப் பாதுகாப்பவராகவும் இருக்கி றோம்' (15 : 9)

# 4 - இறைத்தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வது

ஆதம் நபி முதற்கொண்டு - அல்லாஹ்வின் நபிமார்களின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் முஸ்லிம்கள், நம்பிக்கை கொள்கி றார்கள். அவர்களில் நூஹ், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஅகூப், ஈஸா (அலைஹிம்...) ஆகிய நபிமார்களும் உள்ளடக்கம். ஆனால் மனித குலத்திற்கு அருளப்பட்ட - நிலையான தூதுத்து வத்தை உறுதிப்படுத்தக்கூடிய கடைசித் தூதுச்செய்தியை முஹம் மத் நபி (ஸல்)அவர்களுக்கு அல்லாஹ் வஹி மூலம் அனுப்பினான். மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், இறைவன் அனுப்பி வைத்த இறுதித்தூதர் என்றும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கி றார்கள். இறைவன் குர்ஆனில் கூறுகிறான்:

'(மனிதர்களே!) முஹம்மது, உங்களுடைய ஆண்களில் எவருக் கும் தந்தையல்லர். ஆனால் அவர், அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக இருக்கிறான்' (33 : 40)

மேலும் நபிமார்கள் - ரசூல்மார்கள் அனைவரும் படைக்கப்பட்டி ருக்கும் மனிதர்கள்தான்., இறைத்தன்மைகளில் நின்றும் உள்ள

வணக்கத்திற்குரிய புனிதத்தன்மை நபிமார்களில் எவருக்கும் கிடை யாது என்றும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கிறார்கள்.

# 5 - இறுதித் தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொள்வது

முஸ்லிம்கள், இறுதித் தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொள்கி றார்கள். அப்பொழுது மனிதர்கள் அனைவரும் மீண்டும் உயிருடன் எழுப்பப்படுவார்கள்., அவரவரின் நம்பிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு இறைவன், கூலிகொடுப் பதற்காக மறுமையில் ஒன்றுதிரட்டப்படுவார்கள்!

# 6 - விதியின் மீது நம்பிக்கை கொள்வது

விதியின் மீது முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். ஆனால் விதியை நம்புதல் என்பதன் கருத்து, மனிதர்களுக்குச் செயல்படு வதற்கான சுதந்திரம் இல்லை என்பதல்ல. மாறாக மனிதர்களுக் குச் செயல்படுவதற்கான சுதந்திரத்தை இறைவன் வழங்கியுள் ளான் என்றே முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். இதன் கருத்து இதுதான்: சீரான வழியைத் தேர்வு செய்வதும் தவறான வழியைத் தேர்வு செய்வதும் மனிதர்களின் சக்திக்கு உட்பட்ட விஷயம்தான். மேலும் அவ்வாறு தேர்வு செய்வதன் பொறுப்பை அவர்களே ஏற்க வேண்டும் ...

விதி மீது நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் அடங்கி யுள்ளன.

1 - நிச்சயமாக அல்லாஹ், அனைத்தையும் அறிகின்றான்.

2 - நிகழ்ந்துள்ள அனைத்தையும் எதிகாலத்தில் நிகழக்கூடிய அனைத்தையும் அல்லாஹ் பதிவு செய்து வைத்துள்ளான்.

3 - அல்லாஹ் நாடியது நடைபெறும்., அவன் நாடாதது நடை பெறாது.

4 - அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தவன்.

(இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை கோட்பாடுகள் தொடர் பாக மேலும் விவரங்களை அறிவதற்கு இந்த இணைய தளத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்: www.islam-guide.com\beliefs)

# குர்ஆனுடன் வேறு மூலாதாரம் இஸ்லாத்தில் உண்டா?

ஆம்! உண்டு. அதுதான் நபிமொழிகள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மொழிந்தது, செய்தது, அங்கீகரித்தது ஆகிய அனைத்தும் இஸ்லாத்தின் இரண்டாவது மூலாதாரம் ஆகும். நபிமொழிகள் (ஹதீஸ்கள்) என்பதன் விளக்கம், நபியவர்கள் மொழிந்தது, செய்தது, அங்கீகரித்தது ஆகியவை பற்றி நபித்தோழர்களிடம் இருந்து, நம்பகமான முறையில் உறுதியாக எடுத்துரைக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் அவற்றில் அடங்கும். இத்தகைய நபிமொழிகள் மீது நம்பிக்கை கொள்வது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சேர்ந்ததாகும்.

# முஹம்மது நபி(ஸல்)அவர்களின் பொன்மொழிகளில் சில

۞ 'இறைநம்பிக்கையாளர்கள், பரஸ்பரம் இரக்கம் காட்டுவதிலும் அன்பு செலுத்துவதிலும் பரிவுகாட்டுவதிலும் ஓர் உடலைப் போன்றவர்கள் ஆவர். உடலில் ஓர்உறுப்பு, சுகவீனம் அடைந்தால், அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்திருக்கின்றன. காய்ச்சலுக்கு உள்ளாகிக் கஷ்டப்படுகின்றன' (ஸஹீஹ் முஸ்லிம், 2586, ஸஹீஹு ல் புகாரி, 6011)

۞ 'முஸ்லிம்களில் மிக அழகிய குணம் உடையவர் யாரோ அவர்தான், நிறைவான நம்பிக்கை உடையவர் ஆவார்.தம் மனைவி யரிடம் நற்குணத்துடன் நடந்து கொள்பவர்தான்,உங்களில் சிறந்த வர் ஆவார்' (முஸ்னத் அஹ்மது, 7354, தாரமி, 1162)

۞ 'தனக்கு விரும்புவதையே தன் சகோதரருக்கும் விரும்பாத வரையில் உங்களில் எவரும் முழுமையாக நம்பிக்கை கொண்டவராக ஆக முடியாது'(ஸஹீஹு ல் புகாரி, 13, ஸஹீஹ் முஸ்லிம்,45)

۞ 'பிறருக்காக இரக்கம் காட்டுபவர்கள் மீது, கருணைமிக்க இறைவனும் இரக்கம் காட்டுகிறான். பூமியில் உள்ளவர்கள் மீது நீங்கள் இரக்கம் காட்டுங்கள், வானத்திலுள்ளவன், உங்கள் மீது இரக்கம் காட்டுவான்' (தாரமி, 1995, அபூ தாவூத், 4941)

۞ 'உன் சகோதரன் முன்னிலையில் நீ புன்னகை புரிவதுகூட, உனக்கு ஒரு தர்மம் ஆகும்' (திர்மிதி, 1995)

❁ ‘ஒரு நல்ல வார்த்தைகூட தர்மம் ஆகும்’ (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், 1009, ஸஹீஹு ல் புகாரி, 2989)

❁ ‘இறைவன் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண் டவர், தன் அண்டை வீட்டாருக்கு நல்லுபகாரம் செய்யட்டும்’ (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், 48, ஸஹீஹு ல் புகாரி, 6019)

❁ ‘இறைவன் (நீதி வழங்கும் விஷயத்தில்) உங்கள் உடல் களையோ உங்கள் தோற்றங்களையோ பார்ப்பதில்லை. ஆனால் உங்கள் உள்ளங்களையும் செயல்களையும்தான் பார்க்கிறான்’ (நூல்: (ஸஹீஹ் முஸ்லிம், எண் 2564)

❁ ‘கூலியாளுக்கு - அவரது வியர்வை உலரும் முன்பு அவரது கூலியைக் கொடுத்துவிடுங்கள்’ (நூல்: இப்னு மாஜா, எண் 2443)

❁ ஒருமனிதன், கடுமையான தாகத்துடன் ஒரு பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தான். ஒரு கிணற்றைக் கண்டான். அதனுள் இறங்கி நீர் அருந்திக்கொண்டு வெளியே வந்தான். அங்கே ஒருநாயைக் கண்டான். அது,நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தது. தாகத்தினால் மண்ணை நக்கிக்கொண்டிருந் தது. அந்த மனிதன், ‘எனக்கு ஏற்பட்டது போன்ற தாகம் இந்த நாய்க்கு ஏற்பட்டிருக்கிறது’ என்று சொன்னான். உடனே (மீண் டும்) அந்தக் கிணற்றில் இறங்கினான். தனது செருப்பில் தண் ணீரை நிரப்பி, அதைத் தனது வாயில் கவ்வியபடியே மேலே வந்து. அந்த நாய்க் குத் தண்ணீர் புகட்டினான் ... அதனால் இறைவன் அந்த மனித னுக்கு நன்றி செய்தான். அவனுடைய பாவங்களை மன்னித்தான்.

அப்போது தோழர்கள், ‘அல்லாஹ்வின் தூதரே! இந்த வாயில்லா ஜீவன்கள் விஷயத்திலும் எங்களுக்கு நன்மை உண்டா?” என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், ‘உயிருடனுள்ள (பிராணிகள் அல்லது மனிதர்கள்) யாருக்கு உபகாரம் செய்தாலும் நற்கூலி உண்டு” (ஸஹீஹ் முஸ்லிம், 2244, ஸஹீஹு ல் புகாரி, 2466)

# இறுதித் தீர்ப்பு நாள் பற்றி இஸ்லாம் கூறுவது என்ன?

முஸ்லிம்கள், இறுதித்தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொள்கிறார் கள். அதாவது, இவ்வுலக வாழ்வு என்பது, அடுத்து வரவிருக்கும் வாழ்வுக்கான முன்னேற்பாடுதானே தவிர வேறில்லை என்று நம்பு கிறார்கள்.

மேலும் உலக வாழ்க்கை என்பது - ஒவ்வொரு மனிதனைப் பொறுத்தும்-மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்கான பரீட்சைக்

களமே ஆகும். இப்பேரண்டம் முழுவதும் அழிந்துபோன பிறகு, மரணித்தவர்கள் அனைவரும் - இறைவனின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்காக மீண்டும் உயிருடன் எழுப்பப்படும் பொழுது அந்நாள் வரும். என்றென்றும் முடிவு பெறாத நிலையான தொரு வாழ்க்கையின் தொடக்கமாக அந்நாள் அமையும். அந்த நாள்தான், எல்லா மனிதர்களுக்கும் - அவரவரின் நம்பிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு ஏற்ப நற்கூலியோ தண்டனையோ வழங்கப்படும் நாள் ஆகும்.

எவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறெவரும், வணக்கத்திற் குரிய இறைவன், இல்லை., முஹம்மது நபி, அல்லாஹ்வின் தூதர்' என்று நம்பிக்கை கொண்டு, இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக மரணம் அடைகிறார்களோ அவர்களுக்கு அந்நாளில் நற்கூலி வழங் கப்படும். அவர்கள் சுவனபதி செல்வார்கள்., அங்கே என்றென்றும் நிரந்தரமாகத் தங்கி வாழ்வார்கள். குர்ஆனில் அல்லாஹ் கூறியிருக் கிறான்:

"இன்னும் எவர்கள், நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந் தார்களோ அவர்கள் சுவனவாசிகள் ஆவர். அதில் அவர்கள் என் றென்றும் தங்கி வாழ்வார்கள்" (2 : 82)

ஆனால் எவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறெவரும், வணக் கத்திற்குரிய இறைவன், இல்லை., முஹம்மது நபி, அல்லாஹ்வின் தூதர்' என்று நம்பிக்கை கொள்ளாமல் - முஸ்லிம்களாக ஆகாமல் மரணம் அடைகிறார்களோ அவர்கள், அந்த நிரந்தரமான சுவன பதியை இழந்து விடுவார்கள்., மேலும் நரக நெருப்பினுள் செல்வார் கள்! குர்ஆனில் இறைவன் கூறியிருப்பது போன்று :

'ஒருவன், இஸ்லாத்தை விடுத்து வேறொரு மதத்தை மேற் கொள்ள விரும்பினால், அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் மறுமையில் நஷ்டமடைந்தவர்களில் ஒருவனாகவே அவன் இருப்பான்' (3 : 85)

மற்றோர் இடத்தில் கூறியிருப்பது போன்று: 'திண்ணமாக எவர் கள் இறைநிராகரிப்பை மேற்கொண்டு, இறையை நிராகரித்தவர் களாகவே மரணம் அடைந்து விடுகிறார்களோ அவர்கள், தம்மைத் தண்டனையில் இருந்து காப்பாற்றிட இந்தப்பூமி நிரம்பப் பொன்னை ஈட்டுத்தொகையாகத் தந்தாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட் டாது. இத்தகையோருக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது. மேலும் அவர்களுக்கு உதவி புரிவோர் எவரும் இருக்கமாட்டார்' (3 : 91)

எவரேனும் இப்படி ஒரு கேள்வி கேட்கலாம்: இஸ்லாம் ஒரு நல்ல மதம் என்று நான் கருதுகிறேன். ஆனால் நான் இஸ்லாத்தில்

சேர்ந்தால், எனது குடும்பமும், என்னுடைய நண்பர்களும் மற்றவர் களும் என்னைத் துன்புறுத்துவார்கள்., என்னைப் பரிகாசம் செய் வார்கள் ... ஆக! நான் இஸ்லாத்தில் சேர்ந்தால் நான் சுவனபதி செல்வேனா? நரக நெருப்பிலிருந்து ஈடேற்றம் பெறுவேனா?

இதற்கான பதிலை, முன்னர் சென்ற குர்ஆன் வசனத்தில் நாம் பெறுகிறோம். அதில் இறைவன் கூறியுள்ளான்:

'ஒருவன், இஸ்லாத்தை விடுத்து வேறொரு மதத்தை மேற் கொள்ள விரும்பினால், அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் மறுமையில் நஷ்டமடைந்தவர்களில் ஒருவனாகவே அவன் இருப்பான்' (3 : 85)

மக்களை இஸ்லாத்தில் சேருமாறு அழைப்பதற்காக தன்னுடைய தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைவன் அனுப்பிய பிறகு எவர் ஒருவரும் இஸ்லாமல்லாத வேறு மதத்துடன் இணைந் திருப்பதை நிச்சயமாக இறைவன், ஏற்றுக்கொள்ளமாட்டான். இறை வன்தான் நம்மைப் படைத்தவன்., அவன்தான் நமது பாதுகாவ லன். இப்பூமியிலுள்ள பொருட்கள் அனைத்தையும் நமக்காகவே அவன் படைத்துள்ளான். நம்மிடத்திலுள்ள அருட்கொடைகள், நல்ல பொருட்கள் ஆகிய அனைத்தும் இறைவன் வழங்கியவையே ஆகும்.

எனவே இத்தனைக்குப் பிறகும் - இறைவன் மீதும் அவனுடைய தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கை கொள்வ தையும் இறைவன் வழங்கியுள்ள இஸ்லாம் எனும் மதத்தையும் ஒரு மனிதன் மறுத்தான் என்றால், அப்படி மறுத்தவன் மறுவுலகத்தில் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் நீதியாகும்.

ஆனால் உண்மையில் நம்மைப் படைத்திருப்பதன் தலையாயக் குறிக்கோள், இறைவன் ஒருவனை மட்டும் நாம் வணங்க வேண் டும் என்பதுதான். அவனுக்கு மட்டுமே நாம் அடிபணிந்து வாழ வேண்டும் என்பதுதான். குர்ஆனில் இறைவன் கூறுவது போன்று:

'மனிதர்களையும் ஜின்னுகளையும் நான் படைத்திருப்பது, அவர்கள் என்னை வணங்கிட (எனக்கு அடிபணிந்திட) வேண்டும் என்பதற்காகத்தான்' (51 : 56)

இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த வாழ்க்கை குறுகிய கால வாழ்க்கை ஆகும். நிராகரிப்பாளர்கள், மறுமை நாளில், இவ் வுலக வாழ்வை எப்படிக் கருதுவார்கள் எனில், அவர்கள் இந்தப் பூமியில் வாழ்ந்தது, ஒருநாள் அல்லது சில மணிநேரங்கள் மட்டுமே தான் என்றே கருதுவார்கள். குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான்:

'பிறகு (அவர்களிடம்) அல்லாஹ், 'நீங்கள் பூமியில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தீர்கள்?' என்று கேட்பான். அதற்கு அவர்கள், 'ஒரு நாள் அல்லது ஒருசில மணி நேரங்கள் அங்கு தங்கியிருந் தோம்., கணக்கிடுவோரிடம் கேட்டுப்பார்க்கவும்' என்று கூறுவர்' (23 : 112 - 113)

மற்றோர் இடத்தில் கூறியுள்ளான்:

'நாம் உங்களை வீணாகவே படைத்துள்ளோம் என்றும் நம் மிடம் நீங்கள் திரும்பிவர மாட்டீர்கள் என்றும் கருதிக்கொண்டி ருந்தீர்களா? மிக உயர்ந்தவனாவான், உண்மையான அரசனாகிய அல்லாஹ்! அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே சங்கைமிகு அர்ஷின் உரிமையாளன்' (23 : 115 - 116)

மறுவுலக வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை ஆகும். நிச்சயமாக அது, ஆன்மீக ரீதியிலான வாழ்க்கை மட்டுமல்ல., மாறாக உடல்ரீதியிலான வாழ்வுமாகும் என்பது திண்ணம். அவ் வுலகில் நாம், நம்முடைய உயிர்களுடனும் உடல்களுடனும் வாழ் வோம்.

இவ்வுலக வாழ்க்கையை மறுவுலக வாழ்க்கையுடன் ஒப்பீடு செய்து முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் வின் மீது சத்தியமாக! மறுவுலகத்துடன் ஒப்பிட்டால் இவ்வுலக வாழ்வின் மதிப்பு, உங்களில் ஒருவர் தனது விரலைக் கடலில் முக்குவதுபோன்றதாகும். அதில் எவ்வளவு நீர் உள்ளது என்பதை அவர் பார்த்துக் கொள்ளட்டும்' (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 2858, முஸ்னத் அஹ்மது, எண் 17560)

இதுதான், மறுவுலகத்துடன் ஒப்பிடும்போது இவ்வுலக வாழ்வின் மதிப்பு ஆகும். கடல் நீருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், உலக வாழ்வு என்பது, ஒருசில துளிகளைத் தவிர வேறொன்றும் இல்லை.

# இஸ்லாத்தில் சேர விரும்புவர் என்ன செய்ய வேண்டும்?

அவர், முழு நம்பிக்கையுடன் '**லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்** (இறைவனை -அல்லாஹ்வை)த் தவிர வணக்கத்திற்குரிய உண்மையான தெய்வம் யாருமில்லை! மேலும் முஹம்மது, அல்லாஹ்வின் தூதர் ஆவார்) என்று மட்டும் மொழிவ தன் மூலம் அவர் இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிமாகலாம்.

இந்த வாக்கியத்தின் -'வணக்கத்திற்குரிய உண்மையான தெய் வம் யாருமில்லை, இறைவனைத் தவிர) என்கிற முதல் பகுதியின் கருத்து இதுதான்: வணங்கப்படுதற்கான தகுதி இறைவனுக்கே

தவிர வேறு யாருக்கும் இல்லை. மேலும் இறைவனுக்கு இணையோ குமாரரோ யாருமில்லை என்பதாகும்.

ஒருமனிதன், முஸ்லிமாக வேண்டும் எனில், அவன் மீது இதுவும் கடமையாகும். அதாவது,

❁ திருக்குர்ஆன், இறைவனே இறக்கியருளிள இறைவாக்கு ஆகும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

❁ (மரணித்தவர்கள் மீண்டும் உயிருடன் எழுப்பப்படும்) மறுமை நாளினைக் குறித்து - அது உண்மையே., குர்ஆனில் இறைவன் வாக்களித்தது போன்று அந்நாள் வந்தேதீரும் என்றும் அவர் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

❁ இஸ்லாம் எனது மார்க்கம் என்று உவந்தேற்றுக்கொள்ள வேண்டும்.

❁ இறைவனைத் தவிர வேறு எந்தப் பொருளையும் எந்த மனித னையும் அவர் வணங்கக்கூடாது. முஹம்மது நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்:

'தன்னுடைய அடியான் பாவமீட்சிதேடித் தன் பக்கம் மீளும் பொழுது, அது குறித்து அல்லாஹ் அதிகஅளவு மகிழ்ச்சி அடைபவ னாக இருக்கிறான்., அது, உங்களில் ஒருவர் (பின்வரும் சூழ் நிலையில்) அடையும் மகிழ்ச்சியை விட அதிகமாகும். அவர் ஒரு பொட்டல் பூமியில் தனது வாகனத்தில் பயணமாகிக் கொண்டிருந் தார். திடீரென அது அவரை விட்டும் காணாமல் போய்விட்டது! அவரது உணவும் பானமும் அதிலேதான் இருந்தன. இனி அந்த வாகனம் கிடைக்கப் போவதில்லை என அவர் நிராசைஅடைந்தார். பிறகு ஒரு மரத்தருகே வந்து அதன் நிழலில் ஓய்வாகப் படுத்திருந் தார்., (மரணத்தை எதிர்பார்த்தவாறு!) தனது வாகனம் கிடைக் கும் என்கின்ற நம்பிக்கையே அவருக்கில்லை. இந்நிலையில் திடீ ரென அந்த வாகனத்தை அவர் காண்கிறார்., அவர் முன்னிலை யில் அது நின்று கொண்டிருக்கிறது! உடனே அதன் கடிவாளத் தைக் கையில் எடுத்துக்கொண்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறி னார்: யா அல்லாஹ்! நீதான் என் அடிமை! நான் உனது எஜமா னன் என்று! அதிக அளவு மகிழ்ச்சியினால் அவரது வார்த்தை தடுமாறியது! (முஸ்லிம், 2747, புகாரி, 6309)



(லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று தலைவாசலில் எழுதப்பட்டுள்ளது)

# குர்ஆன் எதைப் பற்றி பேசுகிறது?

திருக்குர்ஆன் - இறுதியாக இறைக்கியருளப்பட்ட இறைவேதம் ஆகும். அதுவே, ஒரு முஸ்லிம் உடைய கொள்கைகள், செயல்கள் ஆகியவற்றிற் கான முதல் மூலாதாரம் ஆகும். மனித குலத்திற்குத் தேவையான எல்லாப் பிரச்னைகளைக் குறித்தும் அது பேசுகி றது. அவை வருமாறு: தத்துவம், கொள்கை கோட்பாடு, வழிபாடு, மனித உறவுகள், சட்டம் ஆகியவை போன்று!



ஆனாலும் குர்ஆன் பேசுகின்ற அதி முக்கியமான தலைப்பு, இறைவனுக்கும் அவனுடைய படைப்புகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியதாகும். அதே நேரத்தில், நீதிமிக்க சமுதாயம் -சீரான மனித நடைமுறை -நேர்மையான பொருளாதார அமைப்பு ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்ட லையும் விரிவான நற்போதனை களையும் குர்ஆன் வழங்குகிறது.

ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, குர்ஆன் எனும் வேதம் முஹம்மது நபி (ஸல்)அவர்களுக்கு அரபிமொழியில் தான் அருளப்பட்டது. ஆகையால் அப்படிப்பட்ட குர்ஆன், இன்னொரு மொழிக்கு, மொழிபெயர்ப்பு செய்யப்பட்டால் -அது, ஆங்கில மானாலும் வேறெந்த மொழியானாலும் சரியே - அது குர்ஆனாக ஆகாது. அந்த மொழிபெயர்ப்பு நூலை ஓதுவது, குர்ஆனை ஓதுவ தாகாது. அது, குர்ஆனின் கருத்துகளை மொழிபெயர்த்ததாகத் தான் ஆக முடியும். எந்த மூலமொழியில் அருளப்பட்டதோ அந்த அரபிமொழியில்தான் திருக் குர்ஆனை நாம் அடைந்திட முடியும்.

# முஹம்மது நபி (ஸல்) யார்?

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கமா நகரில் கி.பி. 570 ஆம் ஆண்டில் பிறந்தார்கள். அவர்கள் பிறப்பதற்கு முன்னரே அவர் களின் தந்தை இறந்த விட்டதால், அவர்களின் தாயாரும் அவர்கள்

பிறந்து சிறிது காலத்திலேயே இறந்துவிட்டதால், அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அவர்களின் பெரிய தந்தை (அபூ தாலிப்) ஏற்றார். அவர், பாரம்பரிய மிக்க குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவராக இருந்தார்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எழுத்தறிவு இல்லாதவராக - எழுதவும் படிக்கவும் இயலாதவராக வளர்ந்து வந்தார்கள். தமது மரணம் வரையிலும் இதே நிலையிலேயே வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நபித்துவம் வழங்கப்படுவதற்கு முன்னர் அவர்களுடைய கூட்டத்தினர் அறிவியல் விஷயங்களை அறியாத மக்களாக இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தார்கள்.

முஹம்மது நபி(ஸல்)அவர்கள், பெரியவராக வளர்ந்து வந்த பொழுது, உண்மையாளர், நம்பிக்கை நாணயமானவர், மரியாதையானவர், வாய்மையாளர் என்பதாக மக்களிடையே பிரபலமானார்கள். அவர்களது நாணயமும் நேர்மையும் எந்த அளவுக்கு இருந்தது எனில், ‘அல் அமீன்’ என்கிற சிறப்புப்பெயரைச் சூட்டி மக்களால் அழைக்கப்பட்டார்கள். (முஸ்னத் அஹ்மது 15078)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், மிக உயர்ந்த பக்திமானாக இருந்தார்கள். மேலும் தங்களுடைய சமூக மக்களின் பின்தங்கிய நிலையையும் அவர்களின் பலதெய்வ வழிபாட்டையும் கடுமையாக வெறுப்பவர்களாகவும் இருந்தார்கள்.

நாற்பது வயதை அடைந்தபொழுது முஹம்மது நபியவர்களுக்கு - ஜிப்ரீல் எனும் வானவர் மூலம், இறைவனிடம் இருந்து முதல் வஹி (இறையருட்செய்தி) அருளப்பட்டது. அது, 23 ஆண்டு காலம் தொடர்ந்தது. அவ்வாறு தொடர்ந்து அருளப்பட்ட வஹி நிறைவடைந்து குர்ஆன் என்று அழைக்கப்படுகிறது.



(மதீனா மாநகரில் உள்ள முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசல்)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், குர்ஆனை ஓதிக்காட்டத் தொடங்கியதுமே - அவர்களுக்கு இறைவன் அருளிய சத்தியத்தின் பக்கம் மக்களை அழைக்கத்தொடங்கிய உடனேயே, அவர்களும் அவர்களைப் பின்பற்றிய சிறிய கூட்டத்தினரும், இறைநிராகரிப்பாளர்களின் புறத்திலிருந்து கடும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அந்தத் துன்புறுத்தலின் கொடூரம் எந்த அளவுக்கு அதிகரித்தது எனில், இறுதியில் கி.பி. 622 ஆம் ஆண்டில் நாடு துறந்து செல்லுமாறு நபியவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான். இவ்வாறு மக்காவில் இருந்து -வடக்குத் திசையில் 260 மைல் தொலைவிலுள்ள மதீனமா நகருக்கு ஹிஜ்ரத் (குடிபெயர்ந்து) சென்ற நிகழ்ச்சிதான், ஹிஜ்ரி ஆண்டின் தொடக்கத்திற்கான அடையாளமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

பிறகு சில ஆண்டுகளுக்குள்ளாக முஹம்மது நபி(ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மக்கா நகர் திரும்பி வரும் நிலையைப் பெற்றார்கள். அங்கே அவர்களின் எதிரிகளை மன்னித்தார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் 63 ஆம் வயதில் மரணம் அடைவதற்கு முன்னர் அரேபியத் தீபகற்பத்தின் பெரும்பாலான மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். மேலும் அவர்கள் மரணம் அடைந்து ஒரு நூற்றாண்டு செல்வதற்குள் இஸ்லாம், மேற்கில் ஸ்பெயினில் வரையிலும் கிழக்கில் சீனா வரையிலும் பரவியது. இவ்வாறு இஸ்லாம் வேகமாகவும் அமைதியாகவும் பரவியதன் காரணி

களில் ஒன்று என்னவெனில் - அதன் போதனைகளின் தனிச் சிறப் பாகத் திகழும் உண்மையும் தெளிவும் ஆகும். ஒரே இறைவன் தான் உண்டென நம்பிக்கை கொள்ளும்படியும் அவன் ஒருவனே வணக்கத்திற்குத் தகுதியானவன் என்று ஏற்றுக் கொள்ளும்படியும் இஸ்லாம் அழைக்கிறது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், கண்ணியம், நீதி, கருணை, பரிவு, உண்மை, வீரம் ஆகிய நற்குணங்களின் முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தார்கள். மேலும் அவர்கள் ஒரு மனி தர் என்பதுடன் எல்லா விதமான கெட்ட குணங்களை விட்டும் தூரமாக விலகியே இருந்தார்கள். அவர்களது உழைப்பு, இறை வழியிலேயே இருந்தது. மறுவுலகில் இறைவனின் நற்கூலியை அடை வது மட்டுமே அவர்களது இலட்சியமாக இருந்தது. இத்தனைக்குப் பிறகும் நபியவர்கள், தமது அனைத்துச் செயல்களிலும் தொடர்பு களிலும் இறைவனின் உவப்பை நாடியவர்களாகவே, அவனை அஞ்சிய வண்ணமாகவே இருந்தார்கள்.

(முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றி மேலும் அறிந்திட இந்த இணைய தளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்: www.islam-guide.com\muhammed)

## இஸ்லாத்தின் வளர்ச்சி அறிவியல் முன்னேற்றத்திற்கு உதவியது எப்படி?

இஸ்லாம், அறிவையும் மதிநுட்பத்தையும் பயன்படுத்துமாறு மனி தனுக்குக் கட்டளையிடுகிறது. இஸ்லாம் பரவிய சில ஆண்டுகளுக்கு உள்ளாகவே மிகப்பெரிய நாகரிகங்களும் பல்கலைக் கழகங்களும் ஆக்கப்பூர்வமான வளர்ச்சியுடன் பிரகாசிக்கத் தொடங்கின. மேற்கத்திய, கிழக்கத்திய தத் துவங்களுக்கு மத்தியிலான பிணைப்பு, புதிய மற்றும் பழைய சிந்தனைகளுக்கு மத்தியி லான தொடர்பு ஆகியவற்றின் விளைவாக - மருத்தும், கணக்கு, இயற்பியல், கோளியல், பூகோளம், கட்டடவியல், கலை, இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் விரிவான முன் னேற்றங்கள் ஏற்பட்டன. அல்ஜீப்ரா, அரபி எண்ணியல், மற்றும் (கணிதவியலின் முன்னேற்



றத்திற்கு முக்கிய காரணியாகத் திகழும்) சுழியம் பற்றிய கருத்தோட்டம் போன்ற அனேக அடிப்படைக் கோட் பாடுகள், இஸ்லாமிய உலகத்திலிருந்து மத்திய ஐரோப்பாவுக்குச் சென்றன.

கண்டுபிடிப்புப் பயணங்களை மேற்கொள்ளும் ஆற்றலை ஐரோப்பா வுக்கு வழங்கிய அதி நவீன கருவிகள்கூட - எடுத்துக்காட்டாக, விண்கோள்களின் தூரத்தை அளவிடும் Astrolabe எனும் தொலை நோக்கி கருவி, கால்வட்டத்தை அளவிடும் கருவி, மாலுமி திசை காட்டும் நவீனக்கருவி ஆகியவைகூட முஸ்லிம்கள் மூலம்தான் பரிணாம வளர்ச்சி பெற்றன.



(தொலைநோக்கிக் கருவி: முதன்முதலில் முஸ்லிம்கள் கண்டுபிடித்த அதி முக்கி யமான நவீன அறிவியல் கருவிகளிலே ஒன்றாகும் இது. மேலும் மேற்குலகிலும் நவீன யுகத்திலும் பெரிய அளவில் பயன்படுத்தப்படும் கருவியுமாகும் இது)



முஸ்லிம் இயற்பியலாளர்கள் அறுவைச் சிகிச்சைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். அறுவைச்சிகிச்சை செய்வப் பயன்படும் பெரும்பாலான கரு விகளை ஆரம்ப நாட்களிலேயே கண்டுபிடித்து உலகிற்கு வழங்கியுள்ளார்கள்., மேலே உள்ள பழங்கால ஆவணங்களில் விவரிக்கப்படுள்ளது போன்று!

# ஏசுநாதர் எனும் ஈஸா நபி (அலை) பற்றி முஸ்லிம்களின் நம்பிக்கை என்ன?

முஸ்லிம்கள், ஈஸா நபி (அலை) அவர்களுக்கு முழுமையான கண்ணியமும் மரியாதையும் அளிக்கிறார்கள். மேலும் அவர்களை, மனித குலத்திற்கு அனுப்பப்பட்ட பெரிய நபிமார்களில் ஒருவராகக் கருதுகிறார்கள். அவர்கள் கன்னி மேரியிலிருந்து பிறந்தார்கள் என்பதை குர்ஆன், உறுதிபட எடுத்துரைக்கிறது. மேலும் குர்ஆனில் சூரத்து மர்யம் என்று தலைப்பிட்டு ஓர் அத்தியாயம் உள்ளது. குர்ஆன் ஈஸா நபி(அலை) அவர்களது பிறப்பைப் பின்வருமாறு வர்ணிக்கிறது:

“மலக்குமார்கள் (இவ்வாறு) கூறியதை நினைவுகூருங்கள். “மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உனக்கு தனது கட்டளை பற்றி நற்செய்தி சொல்கிறான். அதன் பெயர் மர்யத்தின் குமாரர் ஈஸா - அல் -மஸீஹ் என்பதாகும். அவர் இம்மையிலும் மறுமையிலும் கண் ணியமிக்கவராகவும் அல்லாஹ்வின் நெருங்கிய நல்லடியார்களில் ஒருவராகவும் திகழ்வார். மேலும் அவர் - தொட்டில் பருவத்திலும் பக்குவமான வயதை அடைந்த பின்பும் மக்களிடம் பேசுவார். (இதனைக் கேட்ட) மர்யம், என் இறைவனே! என்னை எந்த மனித னும் தீண்டாதிருக்க எனக்கு எப்படி குழந்தை பிறக்கும்? என்று வினவினார். அதற்கு, “அவ்வாறுதான் நடக்கும். அல்லாஹ், தான் நாடுகின்றவற்றைப் படைக்கிறான். அவன் எதையேனும் (செய்யத்) தீர்மானித்தால், ‘ஆகுக’ என்றுதான் அதற்கு கட்டளையிடுவான். உடனே அது ஆகிவிடுகிறது’ என்று அல்லாஹ் கூறினான்” (திருக் குர்ஆன் 3 : 45 - 47)

இவ்வாறே ஈஸா நபி (அலை) அவர்கள், இறைவனின் கட்டளை யினால் அற்புதமான முறையில் பிறந்தார்கள். ஆதம் (அலை) அவர்கள், தந்தையும் தாயுமின்றி படைக்கப்பட்டார்களே அதைப் போன்ற கட்டளையாகும் இது. அது பற்றி இறைவன் கூறியுள்ளான்:

“திண்ணமாக அல்லாஹ்விடத்தில் ஈஸாவின் நிலைமை, ஆதத் தின் நிலைமையைப் போன்றதாகும். அவரை மண்ணில் இருந்து அல்லாஹ் படைத்தான். பிறகு ‘ஆகுக’ என்று அவருக்கு ஆணை யிட்டான்., உடனே அவர் ஆகிவிட்டார் ” (3 : 59)

ஈஸா நபி (அலை) அவர்கள் தமது தூதுத்துவப் பணிகளுக்கு மத்தியில் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். குர்ஆனில் -ஈஸா நபி இவ்வாறு கூறியதாக இறைவன் நமக்கு எடுத் துரைகிறான்:

“திண்ணமாக நான் உங்கள் இறைவனிடம் இருந்து உங்களுக் குச் சான்றினைக் கொண்டு வந்துள்ளேன். நான் உங்கள் முன் பறவையின் உருவத்தைப் போல் ஒன்றைச் செய்து அதில் ஊது வேன்., அது அல்லாஹ்வின் அனுமதியுடன் பறவையாகி விடும். மேலும் நான் பிறவிக் குருடனையும் வெண் குஷ்டக்காரனையும் குணப்படுத்துவேன்.,இறந்தவர்களையும் - இறைவனின் அனுமதி யுடன் உயிர்பெற்றெழச் செய்வேன். மேலும் நீங்கள் எதை உண்டீர் கள்., எதை உங்கள் வீடுகளில் சேமித்து வைத்துள்ளீர்கள் என்பதையும் உங்களுக்கு நான் அறிவித்துத் தருவேன்” (3 : 49)

மேலும் முஸ்லிம்களின் நம்பிக்கை என்னவெனில், ஈஸா நபி (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை. மாறாக ஈஸா நபியை சிலுவையில் அறைய வேண்டும் என்பது அவர்களின் எதிரி களின் சதித்திட்டமாக இருந்தது. ஆனால் அவர்களை இறைவன் காப்பாற்றி, அவர்களைத் தன் பக்கம் உயர்த்திக்கொண்டான். மேலும் ஈஸாநபியைப் போன்ற தோற்றத்தை வேறொரு மனிதருக்கு இறைவன் ஏற்படுத்தினான். ஈஸா நபியின் எதிரிகள் அவரைப் பிடித்து - அவர்தான் ஈஸா என்று கருதி, அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இறைவன் குர்ஆனில் கூறியுள்ளான்:

‘ மேலும் அல்லாஹ்வின் தூதரும் மர்யமின் மகனுமாகிய ஈஸா - மஸீஹை நாங்கள்தான் கொன்றோம் என்று அவர்கள் கூறிய தாலும் (அவர்களை நாம் சபித்தோம்!) உண்மையில் அவர்கள் அவரைக் கொலை செய்யவுமில்லை., அவரைச் சிலுவையில் அறை யவுமில்லை. மாறாக அவரைப் போன்ற தோற்றம் வேறொருவருக்கு



பலஸ்தீனத்திலுள்ள அல்அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) பள்ளிவாசல்

ஏற்படுத்தப்பட்டது. (அவரைத்தான் அவர்கள் கொலை செய்தார் கள்) மேலும் ஈஸா விஷயத்தில் எவர்கள், கருத்து வேறுபாடு கொண்டார்களோ அவர்கள் இது பற்றி சந்தேகத்தில் இருக்கிறார் கள். யூகத்தைப் பின்பற்றுவதைத் தவிர இது பற்றி வேறு எந்த அறிவும் அவர்களிடத்தில் இல்லை. நிச்சமாக அவர்கள், அவரை (மஸீஹை) கொலை செய்யவே இல்லை' (4 : 157)

முஹம்மது நபி (ஸல்) அவர்களும் சரி, ஈஸா நபி (அலை) அவர்களும் சரி ஏகனாகிய ஒரே இறைவன் மீது நம்பிக்கை கொள் வது என்கின்ற அடிப்படைக் கொள்கையில் -முற்காலத்து நபி மார்கள் கொண்டுவந்த கொள்கையில் எந்த மாற்றத்தையும் செய்ய வில்லை. மாறாக அந்தக் கொள்கையைத்தான் முஹம்மது நபியும் ஈஸா நபியும் உறுதிப்படுத்தனார்கள்., அதையே புத்தாக்கம் செய்து பரப்பினார்கள். [50]

[50] (மேலும், முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். அதாவது, ஈஸா நபி (அலை) அவர்களுக்கு இறைவன், புனித பைபிளை அருளினான். அது, இன்ஜீல் என்று அழைக்கப்படுகிறது. அதன் சிலபகுதிகள் ஈஸா நபிக்கு இறைவன் அளித்த போதனைகள் எனும் பெயரில் புதிய ஏற்பாட்டில் இன்றைக்கும் உள்ளன. ஆனால் முஸ்லிம்கள்,இன்றைக்குள்ள பைபிள் மீது நம்பிக்கை கொள்கிறார்கள் என்பது இதன் பொருள் அல்ல. ஏனெனில் அது, இறைவனால் அருளப்பட்ட அசல் வேத மாக இல்லை. மாறாக அவர்கள் பல மாற்றங்களைச் செய்துள்ளார்கள். பல பகுதிகளை இணைத்துள்ளார்கள்., இன்னும் பல பகுதிகளைக் நீக்கியுள்ளார் கள். பைபிள் எனும் புனித வேதநூலை மறுஆய்வு செய்வதற்காக அமைக்கப் பட்ட குழு தெரிவித்த கருத்தாகும் இது. (பார்க்க: மறுஆய்வு செய்யப்பட்ட பதிப்பு) இந்தக்குழு, 32 ஆய்வாளர்களை உறுப்பினர்களாய் கொண்டதாகும். மேலும் அந்த மறுஆய்வு, மதப்பிரச்சார உயர்க் குழுக்கள் சார்பிலான ஐம்பது பிரதிநிதிகளால் கண்காணிக்கப்பட்டது. இந்தக்குழு, புனித பைபிளின் (மறு ஆய்வுப்பதிப்பின்) முன்னுரையில் பக்கம் 4 இல் கூறியுள்ளது: 'சில நேரங்களில் இது தெளிவாக உள்ளது. அதாவது, பைபிள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. மாற்றம் செய்யப்படாத அசல் பிரதி எதுவும் கிடைப்பதில்லை. எனவே இதுதான் வேதத்தின் அசல் வார்த்தைகளுடன் மிகவும் ஒத்துப்போகக் கூடியது என்று ஆய்வாளர்கள் எந்த பைபிளைக் குறித்து தெளிவு படுத்து கிறார்களோ அந்த பைபிளைத்தான் நாம் பின்பற்ற முடியும்' - இந்தக்குழு மேலும் அந்த முன்னுரையில் (பக்கம் 7 இல்) கூறியுள்ளது: 'சில குறிப்புகள் இணைக் கப்பட்டுள்ளன. அவை, மூலப்பிரதிகளில் செய்யப்பட்ட மாற்றங்கள், புதிய சேர்க்கைகள், நீக்கங்கள் ஆகியவற்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. (Mt 9, 34., Mk 3,16., 7,4., Lk 24, 32, 51, etc) பைபிளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மேலும் தகவல்களைப்பெற www.islam-guide.com\ bible எனும் இணைய தள முகவரிக்கு வரவும்)

(ஏசு நாதர் பற்றி மேலும் அறிவதற்கு, www.islam-guide. com\jesus எனும் இணையதள முகவரிக்கு வரவும்)

# பயங்கர வாதம் குறித்து இஸ்லாம் கூறுவது என்ன?

இஸ்லாம் ஒரு சாந்திமார்க்கம் ஆகும். அது பயங்கர வாதத்தை அனுமதிப்பதில்லை. குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

'தீன் - இறைமார்க்கம் தொடர்பான விஷயத்தில் உங்களுடன் எவர்கள் போர் புரியவில்லையோ- உங்களை உங்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றவில்லையோ அவர்களிடம் நீங்கள் நல்ல வித மாகவும் நீதியுடனும் நடப்பதை விட்டும் உங்களை அல்லாஹ் தடுப்பதில்லை. நீதிசெலுத்துவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிக் கிறான்' (60 : 8)

முஹம்மது நபி(ஸல்)அவர்கள் பெண்களையும் குழந்தைகளை யும் கொலைசெய்யக்கூடாது என்று ராணுவ வீரர்களுக்குத் தடை விதித்தார்கள்: 'ஏமாற்றாதீர்கள்., வரம்பு மீறாதீர்கள், பிறந்த குழந்தையைக் கொல்லாதீர்கள்' (ஸஹீஹ் முஸ்லிம் 1744, ஸஹீ ஹு ல் புகாரி 3015)

இன்னும் சொல்வதானால், துரோகம் செய்யாதீர்கள் என்றும் கொலை செய்வதில் வரம்புமீறாதீர்கள்., குழந்தைகளைக் கொல் லாதீர்கள் என்றும்தான் நபியவர்கள், கட்டளை பிறப்பிக்கக்கூடிய வர்களாக இருந்தார்கள்.(முஸ்லிம் 1731, திர்மதி 1408)

மேலும் கூறினார்கள்: 'முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்துள்ள குடிமகனைக் கொலை செய்பவன், சுவனத்தின் வாடையைக்கூட நுகர மாட்டான். நிச்சயமாக அதன் நறுமணம், நாற்பது ஆண்டுகள் பயணத்தூரம் வரை பெற்றுக்கொள்ளப்படும்' (நூல்: ஸஹீஹு ல் புகாரி 3166, இப்னு மாஜா 2686)

மேலும் நெருப்பைக்கொண்டு தண்டனை கொடுப்பதை முஹம் மது நபி (ஸல்) தடைசெய்தார்கள். (நூல்: அபூ தாவூத் 2675)

ஒருதடவை நபி(ஸல்)அவர்கள், கொலைக்குற்றத்தை இரண்டா வது பெரும் பாவமாகப் பட்டியலிட்டார்கள்.(நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 88, ஸஹீஹு ல் புகாரி 6871) இன்னும் சொல்வதானால், ஒரு தடவை எச்சரிக்கை செய்தவாறு கூறினார்கள்:

'நிச்சயமாக இறுதித் தீர்ப்பு நாளில் மக்களிடையே தீர்ப்பளிக்கப் படும் முதல் குற்றம், இரத்தம் சிந்திய குற்றமாம்' [51] (நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 1678, ஸஹீஹு ல் புகாரி 6533)

[51] (அதாவது, கொலை செய்தல், காயப்படுத்தல்)

இன்னும் சொல்வதானால், உயிரினங்களின் மீது இரக்கம் காட்டுவதற்குக்கூட முஸ்லிம்களுக்கு நபியவர்கள் ஆர்வமூட்டினார் கள்., அவற்றைத் துன்புறுத்துவதைத் தடைசெய்தார்கள்.

ஒரு தடவை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒரு பெண், பூனையைத் துன்புறுத்தியதற்காகத் தண்டிக்கப் பட்டாள். ஏனெனில் சாகும்வரையில் அதனை அவள் கட்டிப்போட்டி ருந்தாள். அதன் காரணமாக அவள் நரகம் சென்றாள். அதற்கு அவள் தீனி போடவுமில்லை., நீர் புகட்டவுமில்லை.,அதனை அவள் கட்டிப் போட்டிருந்தாள். தரையில் வளரும் புற்பூண்டுகளை உண் ணும் வகையில் கட்டை அவிழ்த்து அதைச் சுதந்திரமாக விடவும் இல்லை' (ஸஹீஹ் முஸ்லிம் 2422, ஸஹீஹு ல் புகாரி 2365)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: 'ஒருமனிதன், கடுமையாகத் தாகித்தவனாக ஒரு பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தான். ஒரு கிணற்றைக் கண்டான். அதனுள் இறங்கி தண்ணீர் அருந்திக் கொண்டு வெளியே வந்தான். அங்கே நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருந்த ஒருநாயைக் கண்டான். அது,தாகத்தால் தரையை நக்கிக்கொண்டிருந்தது. அந்த மனிதன், 'எனக்கு ஏற்பட்டது போன்ற தாகம் இந்த நாய்க்கு ஏற்பட்டிருக்கிறது' என்று சொன் னான். உடனே (மீண்டும்) அந்தக்கிணற்றில் இறங்கினான். தனது செருப்பில் தண்ணீரை நிரப்பி அதைத் தனது வாயில் கவ்விக் கொண்டு மேலே வந்து, அந்த நாய்க்குத் தண்ணீர் புகட்டினான் ... அதனால் இறைவன் அந்த மனிதனுக்கு நன்றி செய்தான். அவனுடைய பாவங்களை மன்னித்தான். அப்பொழுது தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! இந்த வாயில்லா ஜீவன்கள் விஷயத்திலும் எங்களுக்கு நன்மை உண்டா?" எனக் கேட்டார்கள். அதற்கு நபி யவர்கள், 'உயிருள்ள (பிராணிகள் அல்லது மனிதர்கள்) எவருக்கு உபகாரம் செய்தாலும் நற்கூலி உண்டு' (ஸஹீஹ் முஸ்லிம், 2244, ஸஹீஹு ல் புகாரி, 2466)

இதற்கும் மேலாக, உணவுக்காக ஓர் உயிர்ப்பிராணியை அறுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் நேரத்தில், அப்படி அறுக்கப்படும் அந் தப் பிராணிக்கு - அச்சத்தையும் வேதனையையும் முடிந்த வரை குறைக்கக்கூடிய வழிவகையைக் கையாளுமாறு முஸ்லிம்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்: (அந்த நபிமொழியின் கருத்து வருமாறு:) நீங்கள் (பிராணிகளை) அறுக்க வேண்டும் எனில், நல்ல முறையைக் கையாளுங்கள். ஒருவர், அந்தப் பிரா ணியை அறுக்கப் பயன்படுத்தும் கத்தியை நன்றாகத் தீட்டிக்கொள் ளட்டும். (நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 1955, ஸஹீஹு ல் புகாரி 1409)

இந்த நபிமொழிகளைப் போன்ற இன்னும் பல இஸ்லாமிய மூலா தாரங்களின் ஒளியில் தெரிய வருவது என்னவெனில்,

நிராயுதபாணிகளாக உள்ள குடிமக்களின் உள்ளங்களில் அச் சத்தையும் பீதியையும் தூண்டக்கூடிய செயல்கள் -

கட்டடங்களையும் பிற சொத்துகளையும் அழிக்கக் காரணமாக உள்ள செயல்கள் -

குண்டுகளை எறிவது, ஆண்களையும் பெண்களையும் குழந்தை களையும் கொன்று குவிப்பது ஆகிய செயல்கள் -

இவை அனைத்தும் இஸ்லாத்தின் பார்வையிலும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையிலும் தடைசெய்யப்பட்ட, கண்டனத்திற்குரிய செயல் களாகும். முஸ்லிம்கள் எத்தகைய மதத்தை - மார்க்கத்தைப் பின் பற்றுகிறார்கள் எனில், சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், இரக் கம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை போதிக்கும் இஸ்லாமிய சன் மார்க்கத்தைப் பின்பற்றுகிறார்கள். ஒரு சில முஸ்லிம்களுடன் இணைத்துச் சொல்லப்படுகின்ற இதுபோன்ற வன்முறைச் செயல் களுடனும் சம்பவங்களுடனும் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு எவ் விதத்தொடர்பும் கிடையாது. தனிப்பட்ட ஒரு முஸ்லிம் பயங்கர வாதச் செயலில் ஈடுபடுகிறார் எனில், அவர், இஸ்லாமிய ஷரீஅத் தின் குற்றவியல் சட்டத்தின்படி குற்றவாளியாக நிறுத்தி தண்டிக்கப் படுவார்.

# இஸ்லாத்தில் நீதியும் மனித உரிமைகளும்

இஸ்லாம், ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனையோ உரிமைகளை வழங்குகிறது. இஸ்லாம் பேணிப் பாதுகாத்து வரும் ஒருசில மனித உரிமைகள் இங்கே விளக்கப்படுகின்றன:

இஸ்லாமிய அரசாங்கத்தில் மனிதனின் உயிரும் உடைமைகளும் புனிதமாகக் கருதப்படுகின்றன., அவன், முஸ்லிமாக இருந்தாலும் சரி, அல்லாதவராக இருந்தாலும் சரியே!

இஸ்லாம், மானம் மரியாதையையும் பாதுகாக்கிறது. அதனால் தான் பிற மனிதர்களை வசைபாடுவதோ பரிகாசம் செய்வதோ இஸ் லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. முஹம்மது நபி (ஸல்) கூறி யுள்ளார்கள்:

‘திண்ணமாக உங்கள் உயிர்களுக்கோ உடமைகளுக்கோ உங்கள் மானம் மரியாதைகளுக்கோ பங்கம் விளைவிப்பது, பரஸ் பரம் உங்கள் மீது ஹராம் - தடைசெய்யப்பட்டுள்ளது’ (ஸஹீ ஹு ல் புகாரி 1739, முஸ்னத் அஹ்மத் 2037)

இனவாதத்திற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை. குர்ஆன் மனித குல ஒருமைப்பாட்டை மிகவும் அழுத்தமான முறையில் இவ்வாறு பறைசாற்றுகிறது: ‘மனிதர்களே! நிச்சமாக நாம் உங்களை, ஓர் ஆண் -ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம்.பிறகு நீங்கள் பரஸ்பரம் அறிமுகமாகும் பொருட்டு உங்களைச் சமூகங்களாகவும் கோத் திரங்களாகவும் ஆக்கினோம். உங்கள் இறைவனிடத்தில் அதிகம் கண்ணியம் வாய்ந்தவர், உங்களில் அதிகம் இறையச்சம் கொண் டவர்தான். [52] திண்ணமாக அல்லாஹ், அனைத்தும் அறிந்தவனா கவும் தெரிந்தவனாகவும் இருக்கிறான்’ (49 : 13)

செல்வம், அதிகாரம், இனம், ஆகியவற்றின் அடிப்படையில் தங்க ளுக்குத் தனிச்சிறப்பு இருப்பதாக - தனி மனிதனோ அல்லது சமு தாயமோ - யாரேனும் வாதிடுவதை இஸ்லாம் உறுதிபட மறுக்கிறது. ஏனெனில் இறைவன், மனிதர்கள் அனைவரையும் சமமாகவே படைத்திருக்கிறான். மேலும் ஒரு மனிதனை இன்னொரு மனிதனை விட்டும் வேறுபடுத்திச் சிறப்பு அளிப்பதன் அடிப்படை, சீரான கொள் கையும் பயபக்தியும்தானே தவிர வேறெதுவுமில்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

‘ஓ! மனிதர்களே! அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உங்கள் இறைவன் ஒருவனே! நிச்சயமாக உங்கள் மூதாதையர் ஒருவரே! அறிந்துகொள்ளுங்கள்! அந்நிய மொழிக்காரனை விட ஓர் அரபி யனுக்கு எந்தச் சிறப்பும் இல்லை.,அரபியனை விட அந்நிய மொழிக் காரனுக்கு எந்தச்சிறப்பும் இல்லை.கருப்பு நிறத்தவனை விட சிகப்பு நிறத்தவனுக்கு எந்தச் சிறப்பும் இல்லை., சிகப்பு நிறத்தவனை விட[53] கருப்பு நிறத்தவனுக்கு எந்தச்சிறப்பும் இல்லை., இறை யச்சத்தின் அடிப்படையிலேயே தவிர!’ (முஸ்னத் அஹ்மது, 22978)

இன்றைய தினம் மனித குலம் எதிர் கொண் டிருக்கும் மிகப்பெரிய பிரச்சினை இனவாதம் தான். முதலாம் உலக நாடுகள், சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஆற்றலைப் பெற்றிருக்க



[52] அதிக இறையச்சம் உடையவர் யார் எனில், எவர், ... விட்டும் விலகி இருக்கிறாரோ, மேலும் இறைவன் கட்டளையிட்டுள்ள நற்செயல் கள் செய்கிறாரோ, இறைவனைப் பயந்து அவன் மீது அன்பு செலுத்தி வாழ்கி றாரோ அவர்தான்.

[53] சில நிறங்களை மட்டும் இந்நபிமொழி குறிப்பிட்டிருப்பது, உதாரணத்தின் அடிப்படையில்தான். கருத்து இதுதான்: மனிதர்களுக்கு மத்தியில் நிறத்தின் அடிப்படையிலான எந்தப் பாகுபாட்டையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அது, வெள்ளை கருப்பு, சிகப்பு போன்ற எந்த நிறமானாலும் சரியே!

லாம். ஆனால் ஒருமனிதன், தன் சகோதரனை வெறுப்பதையோ அவனைக் கொலை செய்வ தையோ தடுப்பதற்கு அவற்றால் முடிவதில்லை!

முஹம்மது நபி (ஸல்) அவர்களது காலம் முதற்கொண்டு இன வாத்திற்கு எப்படி முடிவுகட்டுவது என்பதற்கு உயிரோட்டமான தோர் எடுத்துக்காட்டை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஆண்டு தோறும் மக்க மாநகர் நோக்கி மேற்கொள்ளப்படும் ஹஜ்ஜின் புனித பயணம், எல்லா இன மக்களுக்கு மத்தியிலான, சமூகங்களுக்கு மத்தியிலான உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவத்தை எடுத் துக்காட்டுகிறது. ஹஜ்ஜின்பொழுது உலகத்தின் அனைத்துப் பகுதி களில் இருந்தும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கமா நகருக்குப் பய ணம் மேற்கொள்கிறார்கள்.

இஸ்லாம், நீதி மார்க்கம் ஆகும். இறைவன் குர்ஆனில் கூறியுள் ளான்: '(முஸ்லிம்களே!) அமானத் - அடைக்கலப் பொருட்களை அவற்றிற்குரியவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்றும், நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங் கள் என்றும் திண்ணமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளை யிடுகிறான்' (4 : 58)

மேலும் இறைவன் கூறியுள்ளான்: 'மேலும் நீதி செலுத்துங்கள். திண்ணமாக அல்லாஹ், நீதி செலுத்துவோரை நேசிக்கின்றான்' (49 : 9)

இன்னும் சொல்வதாயின் எந்த மக்களை நாம் வெறுக்கிறோமோ அவர்களிடம்கூட நாம் நீதத்துடன் நடப்பது அவசியமாகும். இறை வன் குர்ஆனில் கூறியுள்ளான்:

'(இறைநம்பிக்கை கொண்டவர்களே!) எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்ட பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத் திற்கு மிகப் பொருத்தமானது' (5 : 8)

பிறரைத் துன்புறுத்துவது, அநீதி இழைப்பது, அவர்களுடன் மோசமாக நடப்பது ஆகியவை பற்றி முஹம்மது நபி (ஸல்) அவர் கள் இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

'மக்களே! அநீதி இழைப்பது [54]குறித்து அஞ்சுங்கள். நிச்சய மாக அநீதியானது, தீர்ப்பு நாளில் இருள்களாகும்' (முஸ்னத் அஹ்மத், 5798, ஸஹீஹுல் புகாரி 2447)

[54] பிறரைத் துன்புறுத்துவது, பிறருடன் அநீதியாக நடந்து கொள்வது அல்லது தவறாக நடப்பது ஆகிய அனைத்தும் இதில் அடங்கும்.

இவ்வுலக வாழ்வில் தங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை எவர்கள் கிடைக்கப் பெறவில்லையோ (அவை எந்த ஓர் உரிமை யானாலும்) அவற்றை அவர்கள், மறுவுலகில் அவசியம் பெற்றுக் கொள்வார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'மறுமை நாளில் உரிமைகள்- அவற்றின் உரிமையாளர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படும். (மேலும் தவறுகள் திருத்திக்கொள்ளப் படும்)' (ஸஹீஹ் முஸ்லிம் 2582, முஸ்னத் அஹ்மது 7163)

# இஸ்லாத்தில் மகளிர் உரிமைகள்

பெண்ணை இஸ்லாம் எப்படிப் பார்க்கிறதெனில், - அவள் திருமணம் செய்திருந்தாலும் செய்யாதிருந்தாலும் - தனக்குரிய முழு உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை பெற்ற ஒரு மனிதனாகவே பார்க்கிறது. சொத்துரிமை, சொத்துகளை நிர்வகிக்கும் உரிமை, சம்பாதிக்கும் உரிமை போன்ற அனைத்து உரிமைகளையும் - அது விஷயத்தில் (தந்தை, கணவர் போன்ற) எவரும் அவளுக்குப் பாதுகாப்பாளராக ஆகும் தேவையின்றியே - அவ்வுரிமைகளை அவள் பெறு கிறாள்!



வாங்கவும் விற்கவும் அன்பளிப்புச் செய்யவும் அவளுக்கு உரிமை உண்டு. நன்மையான காரியங்களுக்குத் தர்மம் செய்யும் உரிமை யும் உண்டு. தன்னுடைய பணத்தைத் தனது விருப்பப்படி செலவு செய்யவும் அவளுக்கு உரிமையுண்டு. கணவன் சார்பாக மனை விக்கு வழங்கப்படும் மணக்கொடையைத் தனது சொந்த விஷங் களுக்குச் செலவு செய்யும் உரிமையும் அவளுக்கு உண்டு. தன் னுடைய கணவனின் பெயரைப் பயன்படுத்தாமல் தனது குடுப்பத் தின் பெயரையே அவள் பயன்படுத்தலாம்.

இஸ்லாம் ஓர் ஆண்மகனுக்கு, மனைவியுடன் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறது. ஏனெனில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

'தங்கள் மனைவியரிடம் நல்ல முறையில் நடந்துகொள்பவர் யாரோ அவர்கள்தான் உங்களில் சிறந்தவர் ஆவர்' (நூல்: இப்னு மாஜா 1978, தாரமி 3895)

இஸ்லாத்தின் பார்வையில், அன்னையர் உயர் அந்தஸ்துக்கு உரியவர்கள் ஆவர். அவர்களிடம் மிக அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் கட்டளையிடுகிறது.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, ‘அல்லாஹ்வின் தூதரே! எனது அழகிய நட்பிற்கு மக்களிலேயே அதிகம் தகுதியுடை யவர் யார்? என்று வினவினார். அதற்கு நபியவர்கள், ‘உன்னுடைய தாய்’ என்று சொன்னார்கள். ‘பிறகு யார்?’ என்று அவர்கள் கேட் டார். அதற்கு நபியவர்கள், ‘உனது தாய்’ என்று சொன்னார்கள். ‘பிறகு யார்?’ என்று அவர்கள் கேட்டார். அதற்கும் நபியவர்கள், ‘உனது தாய்’என்று சொன்னார்கள். ‘பிறகு யார்?’ என்று அவர்கள் கேட்டார். அதற்கு நபியவர்கள், அப்பொழுதுதான், ‘உன் தந்தை’ என்று நபியவர்கள் பதில் சொன்னார்கள்” (ஸஹீஹ் முஸ்லிம் 2548, ஸஹீஹு ல் புகாரி 5971)

(இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றி மேலும் தகவல் களைப் பெற www.islam-guide.com\women எனும் இணையதள முகவரிக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்)

# இஸ்லாத்தில் குடும்ப அமைப்பு

மனித நாகரிகத்தின் அடிப்படை இலக்காகத் திகழக்கூடிய குடும்ப அமைப்பு, இன்றைக்குப் பிளவையும் சீர்குலைவையும் எதிர் நோக்கியுள்ளது. அதே நேரத்தில், இஸ்லாத்தின் குடும்ப அமைப்பா னது, கணவனின் உரிமைகள், மனைவியின் உரிமைகள், குழந் தைகளின் உரிமைகள், உறவினரின் உரிமைகள் ஆகிய உரிமை களை நுட்பமான சமநிலையில் நிர்ணயித்துள்ளது. அது, நல்ல கட்டுக்கோப்பான குடும்ப மட்டத்தில் -பொதுநலம், பெருந்தன்மை, அன்பு, பாசம் ஆகிய நல்லபண்புகளின் அடிப்படையிலான நடை முறைகளுக்கு ஊட்டமளிக்கிறது. மேலும் ஒன்றுபட்ட குடும்ப அமைப்பின் உறுதி நிலையை உருவாக்கக்கூடிய அமைதி, பாது காப்பு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. அதுதான், குடும்ப உறுப்பினர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு மூலாதாரமாகப் பார்க்கப்படுகிறது. மேலும் பல்கிப்பெருகி வாழும் குடும்பங்கள், செழிப்பான குழந்தைகள் ஆகியவற்றின் மூலம்தான் - அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம்தான், அமைதியும் மகிழ்வும் நிறைந்த சமூக அமைப்பை உண்டாக்க முடியும்.

# முதியோரை நடத்தும் முறை

இஸ்லாமிய உலகில் முதியோர் இல்லங்களைக் காண்பது மிக வும் அரிதாகும். ஏனெனில் ஒரு முஸ்லிம் தன் தாய் தந்தையரை - அவர்களது வாழ்க்கையில் மிகவும் கடினமாக காலகட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கவனிப்பதென்பது, சிறப்பாக

வும் பாக்கியமாகவும் மேலும் ஆன்மீக உணர்வு வளர்ச்சி அடைவ தற்குரிய நல்வாய்ப்பாகவும் கருதப்படுகிறது.

நாம் நம்முடைய பெற்றோர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது மட்டும் இஸ்லாத்தில் போதுமாகாது. மாறாக எல்லையில்லா அன் புடனும் கருணையுடனும் அவர்களிடம் நடந்துகொள்வதும் அவசி யமாகும். நாம் சிறுவர்களாக இருந்தபொழுது அவ்விருவரும் தங்க ளது நலனைவிட நமக்கு முன்னுரிமை கொடுத்து நம்மைக் கவனித் ததை நினைவுகூர்ந்திட வேண்டும். அதனால்தான் அவ்விருவருக் கும் மிக உயர்ந்த அந்தஸ்து வழங்கப்படுகிறது. முஸ்லிம் தாய் தந்தையர் முதுமை அடையும்பொழுது, அன்புடனும் பரிவுடனும் அர்ப்பணிப்புடனும் கவனிக்கப்படுகின்றனர். இஸ்லாத்தின் பார்வை யில், தாய் தந்தையருக்கு நல்ல முறையில் பணிவிடை செய்வது, இறைவழிபாட்டிற்கு அடுத்த அந்தஸ்துள்ள கடமையாக இருக்கி றது. இது, அவர்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிப்ப தாக உள்ளது. ஒரு முஸ்லிமின் தாயோ தந்தையோ, தள்ளாடும் அளவிலான முதுமையை அடைந்திருக்கும் பொழுது - அவர்களிடம் இருந்து சுயமாக எந்தத் தவறும் நிகழ்வது சாத்தியமில்லை எனும் நிலையில் - கோபமான வார்த்தை அவனிடமிருந்து வெளிப்படுவது இழி பண்பாகக் கருதப்படுகிறது. இறைவன் கூறியுள்ளான் :

“உம் அதிபதி (ஷரீஅத்தில் இவ்வாறு) தீர்ப்பு அளித்துள்ளான். அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்கக்கூடாது. தாய் தந்தையரிடம் மிகவும் கண்ணியமான முறையில் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். பெற்றோரில் ஒருவரோ இருவருமோ முதுமை அடைந்திருக்கும் நிலையில் உம்மிடம் இருந்தால் அவர்களை ‘சீ’ என்றுகூட நீங்கள் கூறக்கூடாது., அவர்களைக் கடிந்தும் பேசக் கூடாது. மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக. மேலும் அவர்களிடம் பணிவுடனும் கருணையுடனும் நடந்து கொள்வீராக. மேலும், ‘என் இறைவனே! சிறுவயதில் எவ்வாறு என்னை அவர்கள் கருணையுடனும் பாசத்துடனும் வளர்த்தார்களோ அவ்வாறு அவர் கள்மீது நீ கருணை புரிவாயாக’என்று இறைஞ்சுவீராக!” (17:23-24)

# இஸ்லாத்தின் ஐந்து கடமைகள்

இஸ்லாத்தின் ஐந்து கடமைகள், ஒருமுஸ்லிமின் வாழ்க்கை யைச் சீராகக் கட்டமைக்கக்கூடியவையாகத் திகழ்கின்றன. அவை வருமாறு: இறைவனைத் தவிர வேறு யாரும்- எதுவும் வணக்கத்திற் குரியவை அல்ல என்று சான்று பகர்தல், தொழுகையை நிலை

நாட்டுதல், ஜகாத் எனும் (எளியோர்க்கு உதவும்) தர்மம் வழங்கு தல், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்றல், (மக்காவுக்குப் புனி தப் பயணம் மேற்கொண்டு சென்று, அங்குள்ள கஅபா ஆலயத்தை ஹஜ் செய்தல், அங்கு சென்று திரும்ப சக்திபெற்றுள்ள மக்களின் மீது கடமை ஆகும்!

# 1 - நம்பிக்கையைப் பறைசாற்றுதல்

நம்பிக்கையைப் பறைசாற்றுதல் என்பது, முழுநம்பிக்கையுடன் "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்று நீங்கள் கூறுவதாகும். இதன் பொருள்: வணக்கத்திற்குரிய இறை வன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை., முஹம்மது அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்.

ஷஹாதத் எனும் இந்நற்சான்று வாக்கியத்தின் முதல்பகுதியின் கருத்து இதுதான்: வணங்கப்படுவதற்கான தகுதி, அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. மேலும் நிச்சயமாக இறைவனுக்கு இணைதுணை என்றோ குமாரர் என்றோ யாரும் இல்லை.

நம்பிக்கைக்கு இவ்வாறு நற்சான்று அளிப்பதற்கு ஷஹாதா என்று சொல்லப்படும். இது, ஓர் எளிமையான முறையாகும். இந்த வார்த்தையின் அர்த்தத்தில் முழு நம்பிக்கை கொண்டு இதை மொழிவது கடமையாகும். இதன் மூலம் இஸ்லாத்தில் சேரலாம்.[55] இவ்வாறு நற்சான்று வழங்குவது, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமை களில் மிகவும் முக்கியமானதாகும்.

# 2 - தொழுகையை நிலைநாட்டுதல்

ஒரு முஸ்லிம், தினமும் ஐந்து நேரம் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ஒரு தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஒருசில நிமிடங் களுக்கு மேல் தேவைப்படாது. தொழுகை என்பது, இஸ்லாத்தைப் பொறுத்த வரையில், அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் மத்தியிலான நேரடித்தொடர்பு ஆகும். ஏனெனில் அல்லாஹ்வுக்கும் அடியானுக் கும் மத்தியில் இடைத்தரகர் என்று யாரும் கிடையாது.

தொழுகையாளி, தனது தொழுகையின்பொழுது மனதில் மகிழ் வையும் அமைதியையும் நிம்மதியையும் உணர்கிறார்., தன்னை இறைவன் உவந்தேற்றுக்கொண்டான் என்று நம்புகிறார். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

[55] 'அல்லாஹ்' எனும் வார்த்தையின் விரிவான விளக்கம் 66 பக்கம் காண்க.

'பிலாலே! தொழுகை(க்கு வருமாறு அழைப்பதன்) மூலம் எங்களுக்கு நிம்மதி அளிப்பீராக' (அபூ தாவூத் 4985, முஸ்னத் அஹ்மது 22578) - பிலால் என்பார், நபித்தோழர்களில் ஒருவர்., தொழுகைக்கு பாங்கு சொல்லும் பணியில் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதிகாலை, மதியம், மாலைநேரம், சூரியன் மறைந்த நேரம், முன்னிரவு ஆகிய நேரங்களில் தொழுகை நிறைவேற்றப்படுகிறது.

வயல்வெளி, அலுவலகம், தொழிற்கூடம், பல்கலைகழகம் ஆகியவை போன்று எந்த இடமானாலும் அங்கே ஒரு முஸ்லிம் தொழுகையை நிறைவேற்றலாம். தொழுகை பற்றி மேலும் அறிய www. Islam - guide. com|prayer இணையதள முகவரியில் நாடவும்.)[56]

# 3 -(எளியோர்க்கு) ஜகாத் வழங்குவது

எல்லாப் பொருட்களும் இறைவனின் உடைமை ஆகும். மேலும் மனிதனின் கையில் உள்ள செல்வம், அவனிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கும் அடைக்கலப் பொருள் ஆகும். ஜகாத் எனும் வார்த் தையின் அசல் பொருளில், 'சுத்தப்படுத்தல், வளர்தல்' ஆகிய இரு அர்த்தங்களும் அடங்கும்.

ஜகாத் வழங்குதல் என்பதன் கருத்து, குறிப்பிட்ட உச்சவரம்புக்கு மேல் கைவசத்தில் இருக்கும் செல்வத்தில் இருந்து குறிப்பிட்ட சத விகிதத்தை, தேவைகளை உடைய - குறிப்பிட்ட ஏழைகளுக்கு வழங்குவதாகும். நிஸாப் எனும் உச்சவரம்பை எட்டியிருக்கும் தங்கம், வெள்ளி ஆகியவற்றில் இருந்தும் -இதே போல் 595 கிராம் வெள்ளியின் கிரயத்தை அடைந்திருக்கும் ரொக்கப் பணத்தில் இருந்தும் ஜகாத் கொடுக்க வேண்டும். அவை, சந்திரமான கணக்கிலான ஓர்ஆண்டு காலம் வரையில் -அவற்றின் உரிமையாளனின் கையில், இன்றியமையாத அடிப்படைத் தேவைகளுக்குப் போக, மேல் மிச்சமாக இருக்கும் பட்சத்தில் - அவற்றில் இருந்து ஜகாத் கொடுக்க வேண்டிய அளவு இரண்டரை சதவிகிதம் ஆகும். குறிப்பிட்ட அந்தத் தொகையை - ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் அந்தச் சொத்தில் இருந்து



[56] அல்லது M.A.K.Saqib எழுதிய 'இஸ்லாத்தில் தொழுகை வழிகாட்டி' எனும் (ஆங்கில) நூலைப் பார்வையிடவும். அதன் பிரதியைப் பெற விரும்பினால் மேலே கொடுக்கப்பட்டுள்ள இணைய தளத்திற்குச் செல்லவும்.

தனியாக எடுத்து வைப்பது என்பது, அந்தச் சொத்தைச் சுத்தப் படுத்துவதாக அமைகிறது. இது, தாவரங்களை வெட்டும் பொழுது ஏற்படும் நிலையைப் போன்றதாகும். தாவரங்களை இவ்வாறு வெட்டுவது, அவை, புதிதாக வளர்ந்து வருவதற்கு ஊக்கம் அளிப் பதாக அமைகிறது. ஒரு மனிதன், தானாக முன்வந்து அதிக அளவுதான தர்மங்கள் செய்து புண்ணியங் களைத் தேடுவதற்கு இது தூண்டுகோலாக அமைந்திட லாம்.

# 4 - ரமளான் மாதத்தில் நோன்பு நோற்றல்

முஸ்லிம்கள், ஒவ்வோர் ஆண்டும் ரமளான் மாதத்தில், [57] அதி காலை நேரத்திலிருந்து சூரியன் மறையும் வரையில், உண்பது, பருகுவது, மனைவியுடன் உடலுறவு கொள்வது ஆகியவற்றை விட்டும் விலகியிருப்பதன் மூலம் நோன்பைக் கடைப்பிடிக்கிறார்கள்.




ஊடல்ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை யில் பல்வேறு நன்மைகள் நோன்பில் உள் ளன. ஆயினும் அடிப்படையில் அது, ஓர் ஆன்மீகச் சுயப் பரிசுத்தத்திற்கான ஏற்பாடா கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக ரீதி யிலான சிலஇன்பங்களைத் தன் மீது விலக்கி வைத்து நோன்பை நோற்பதன் மூலம் - அப்படிச் செய்வது குறைவான சில மணிநேரம்தான் என்றாலும் - பசித்திருப்பவர்களின் பசியில், தானும் உண்மையாகப் பங்கு பெறு வதாக ஒரு நோன்பாளி உணர்கிறான். அவன், தனது ஆன்மீக வாழ்வில் முன்னேறிச்செல்வதைப் போல் இது அமைந்துள்ளது.

# 5 - மக்காவுக்குப் புனிதப் பயணம்

மக்காவுக்கு வருடாந்திர (ஹஜ்) புனிதப் பயணம் மேற்கொள் வது - உடல் மற்றும் பொருளாதார ரீதியில் அங்கு சென்று திரும்பு வதற்கு சக்தி பெற்றவர்களின் மீது - வாழ்நாளில் ஒரு தடவை கடமையாகும்.

[57] ரமளான் மாதம், ஹிஜ்ரி ஆண்டின் ஒன்பதாவது மாதம் ஆகும்.



கஃபா ஆலயம்

ஹாஜிகள் மக்காவிலுள்ள புனிதமிகு பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றும் காட்சி ஆகும் இது. முஸ்லிம்கள், தினமும் தொழுகையில் எந்தக் கஃபா ஆலயத்தை முன்னோக்கி நிற்கிறார்களோ அந்தக் கஃபா ஆலயம், இந்தப் பள்ளி வாசலில்தான் உள்ளது. உலகளாவிய முறையில் தொழுகையின் முன்னோக்கும் திசையாகத் திகழும் இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்புமாறு இப்ராஹீம் நபிக்கும் அவர்களின் மகன் இஸ்மாயீல் நபிக்கும் இறைவன் கட்டளையிட்டான்.

---

ஒவ்வோர் ஆண்டும் சுமார் இரண்டு மில்லியன் மக்கள், இந்தப் பூமிப் பந்தின் ஒவ்வொரு மூலையில் இருந்தும் மக்காவை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அத்துடன் மக்கத் திருநகர், புனிதப் பயணிகளால் எந்நேரமும் நெருக்கடியாகவே உள்ளது.

இந்த வருடாந்திர ஹஜ்ஜு க் கடமை, இஸ்லாமிய ஆண்டுக் கணக்கில் பன்னிரண்டாவது மாதத்தில் நிறைவேற்றப்படுகிறது.

புனிதப் பயணிகள், ஹஜ்ஜு க்கான பிரத்தியேக ஆடைகளை - இன, கலாச்சார ரீதியிலான அனைத்து வேறுபாடுகளையும் களையக்கூடிய எளிமையான ஆடைகளை அணிகிறார்கள். அதன் மூலம், இறைவனின் திருமுன் அனைவரும் சமம் எனும் நிலையுடன் காட்சி அளிக்கிறார்கள்.

ஹஜ்ஜின் கிரியைகளில், கஃபா ஆலயத்தை தவாப் -வலம் சுற்றி வருவதை ஏழுதடவை மேற்கொள்வதும் உள்ளது. ஸஃபா- மர்வா எனும் இரு குன்றுகளிடையே ஏழுதடவை ஸயி செய்வதும் உள்ளது. இது, (இஸ்மாயீல் நபியின் அன்னை) ஹாஜர், தண்ணீர் கிடைக்குமா என்று தேடிய பொழுது செய்தது போன்ற செயலாகும்.

பிறகு ஹாஜிகள் அனைவரும் அரஃபா மைதானத்தில் தங்கி இருந்து, [58] தங்களுடைய நாட்டங்களை நிறைவேற்றித் தருமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள்., மன்னிப்பு வழங்குமாறு

---

[58] இது, மக்கமா நகரிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவிலுள்ள மைதானம்.

அவனிடம் மன்றாடுகிறார்கள். மறுமை நாளினை நமக்கு நினைவூட்டக்கூடிய, அச்சமும் பீதியும் நிறைந்த காட்சியாகும் இது.

ஹஜ்ஜின் முடிவில் 'ஈதுல் அழ்ஹா' என்கின்ற பெருநாள் வருகிறது. தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தப் பெருநாளும், ரமளான் மாதத்தின் முடிவில் வருகின்ற நோன்புப் பெருநாளும் இஸ்லாமிய ஆண்டுக் கணக்கின்படி வருகின்ற வருடாந்திர - சிறப்புமிக்க இரு திருநாட்களாகும்.

(இஸ்லாத்தின் ஐந்து கடமைகள் குறித்து மேலும் அறிந்திட www. islam-guide. com\pillars எனும் இணைய தளத்தில் பார்க்கவும்)

# அமெரிக்காவில் இஸ்லாம்

அமெரிக்க முஸ்லிம்களைப் பற்றி பொதுப்படையாகக் குறிப்பிடுவது சிரமமானதாகும். அவர்களில், புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்தவர்களும் பழைய முஸ்லிம்களும் குடியேரியவர்களும் கம்பெனிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும் மருத்துவர்களும் உள்ளனர். இத்தகைய பலதரப்பட்ட மக்கள் ஒரு பொதுவான நம்பிக்கையில் ஒன்றிணைந்து உள்ளனர். நாடெங்கிலும் உள்ள ஏராளமான பள்ளிவாசல்களின் வழிகாட்டுதலின் கீழ் வாழ்கிறார்கள்.



ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள், வட அமெரிக்காவுக்கு வந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் வட அமெரிக்காவில் ஏராளமான முஸ்லிம்கள் இருந்தனர்.

அமெரிக்க மக்களில் நிறைய பேர், இஸ்லாத்தின் வட்டத்தினுள் வந்திருக்கிறார்கள். அவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், கல்வியாளர்கள், படிப்பறிவில்லாதவர்கள் எனப் பலதரப்பட்ட மக்களாய் உள்ளனர். இன்றைக்கு சுமார் ஐம்பத்து ஐந்து இலட்சம் முஸ்லிம்கள் அமெரிக்காவில் [59] உள்ளனர்.

[59] The World Almanac and Book of Facts 1996, Famighetti, page 644

# References
## பார்வை நூல்கள்

(1) Meteorology Today. மூன்றாம் பதிப்பு. வெளியீடு: West Publishing Company. ஆசிரியர்: Ahrens, C. Donald. 1988.

(2) The Use of Satellite pictures in weather Analysis and forecasting. Geneva: Secretarial of World Meteorological Organization. ஆசிரியர்: Andersion . Ralph K.; and others 1978

(3) The Atmosphere. மூன்றாம் பதிப்பு. Columbus; Charles E. Merrill Publishing Company. ஆசிரியர்: Ahrens, Richard. A ; John J. Cahir; Alistair B. Fraser; And Hans A. Panofsky. 1981

(4) The NIV Study Bible, New International Version. Grand Rapids, Michigan: Zondervan Publishing House. ஆசிரியர்: Baker, Kenneth; and others. 1985

(5) Weather, and Climate. Poole , Dorest: Blandfort Press Ltd ஆசிரியர்: Bodin , Ander 1968

(6) Anotemy of the Earth. London: World University Library. ஆசிரியர்: Cailleux, Ander' 1978

(7) The Space Atlas. London: Dorling Kindersley Limited. ஆசிரியர்: Couper, Heather; and Nigel Henbest. 1995

(8) Principles of Oceanography. Don Mills, Ontario: Addison – Wesley publishing Company ஆசிரியர்: Davis, Richard A., Jr. 1972.

(9) NIV Compact Dictionary of Bible . Grand Rapids, Michigan: Zondervan publishing House. ஆசிரியர்: Douglas, J.D.; And Merrill C. Tenney. 1989.

(10) Oceans. London: Mitchall Beazley publishers. ஆசிரியர்: Elder, Danny; and John oernetta. 1991.

(11) The World Almanac Book of Facts 1996. Mahwah , New Jersey : World Almanac Books. ஆசிரியர்: Famighetti, Robert. 1996.

(12) Oceanography, a View of Earth. 6th ed. Englewood Cliffs: Prentice - Hall, Inc. ஆசிரியர்: Gross, M. Grant. 1993.

(13) Integrated Principles of Zoology . 6th ed. St. Louis: The C.V. Mosby Company. ஆசிரியர்: Hickman, Cleveland P.; and others. 1979.

(14) Inrepretation of Meanings of The Noble Gur'an in the English Language . 4th revised ed. Riyath: Maktaba Dar-us

Salam. ஆசிரியர்: Al - Hilali, Muhammed T.; and Muhammed M. Khan.

(15) The holy Bible, Containing the Old and New testaments (Revised Standerd Version. New York: William Collins Sons & Co., Ltd.

(16) Al - Serah - Al - Nabaweyyah. Buirut: Dar El - Marefah. ஆசிரியர்: Ibn hesham, Abdul malek

(17) Understanding Islam and the Muslims . Washington, DC. 1989. The Islamic Affairs Department, The Embassy of Saudi Arabia.

(18) Marine Geology , New York: ஆசிரியர்: John Wiley & Sons, Inc

(19) Leeson, C.R; and T.S. Leeson. 1981 , Histology. 4th ed. Philadelphia: W.B Saunders Company

(20) Ludlam, F.H. 1980 Clouds and Storms. London: The Pennsylvania State University Press

(21) Makky, Ahmed A; and others. 1993. Ee'jaz al-Qur'an al-Kareem fee Wasf Anwa' al-Riyah, al-sohob, al-Matar. Makkah: Commission on Scientific Signs of Qu'ran and Sunnah

(21) Miller, Albert: and Jack C. Thomson. 1975 .Elements of Meteorology. 2nd ed. Colombus: Charles E. Merrill Publishing Company

(22) Moore, Keith L.; Marshall Johnson; T.V.N Persud; Gerald C. Goeringer; Abdulp Majeed A. Zindani; and Mustafa A.Ahmed. 1992. Human Development as Described in the Qu'ran and Sunnah. Makkah; Commission of Scientific signs of Qu'ran and Sunnah

(23) Moore, Keith L.; A.A.Zindani; and others. 1987. Al-E'ja al – Elmy fee al-Naseyah ( The Scientific Miracles infront of the head). Makkah: Commission of Scientific Signs of Qu'ran and Sunnah

(24) Moore Keith L. 1983. The Developing Human, Clinically Oriented Embryology, With Islamic Additions. 3rd ed. Jeddah. Dar Al- Qiblah

(25) Moore Keith L.; and T.V.N. Persaud. 1993. The Developing Human, Clinically Oreinted Embryology. 5th ed. Philadelphia: W.B.Saunders Company

(26) El. Naggar Z.R. 1991. The Geological Concept of Mountains in the Qu'ran. 1st ed. Herndon: International Insititute of Islamic Thought.

(27) Neufeldt, V. 1994. Webster's New World Dictionary. Third College Edition. New York: Prentice Hall

(28) The New Encyclopaedia Brittannica. 1981. 15th ed. Chicago: Encyclopaedia Brittanica Inc.
(29) Noback, Charles R.; N.L.Strominger; and R.J.Demarest. 1991. The Human Nervous System, Introduction and Review. 4th ed. Philadelphia: Lea & Febiger.
(30) Ostrogorsky, George. 1969. History of the Bysantine State. Translated from the German by Joan Hussey. Revised ed, New Brunswick: Rutgers University Press
(31) Press, Frank; and Raymond Siever. 1982. Earth. 3rd ed. San Francisco: W.H. Freeman and Company
(32) Ross, W.D.; and others. 1963. The Works of Aristotle Translated into English: Meteorological. Vol.3. London: Oxford University Press.
(33) Scorer, Richard; and Harry Wexler. 1963. A Colour Guide to Clouds. Robert Maxwell
(34) Seeds, Michael A. 1981. Horizons, Exploring the Universe. Belmont: Wadsworth Publishing Company
(35) Seeley, Rod R.; Trent D.Stephens; and Philip Tate. 1996. Essentials of Anatomy & Phisiology. 2nd ed. St.Louis: Mosby-Year Book, Inc.
(36) Sykes, Percy. 1963.History of Persia. 3rd ed. London: Macmillan & Co Ltd
(37) Tarbuck, Edward J.; and Frederick K. Lutgens. 1982. Earth Science. 3rd ed, Columbus: Charles E,Merill Publishing Company
(38) Thurman, Harold V. 1988. Introductory Oceanography. 5th ed. Columbus: Merrill Publishing Company
(39) Weinberg, Steven. 1984. The First Three Minutes, a Modern View of the Origin of the Universe. 5th Printing. New York: Bantam Books.
(40) Al – Zarkashy, Badr Al- Deen. 1990. Al-Borhan fee Oloom Al-Qu'ran. 1st ed. Beirut: Dar El-Marefah
(41) Zindani, A. A. This is the truth (Videotape). Makkah: Commission on Scientific Signs of the Qu'ran and Sunnah

## The Numbering of Hadeeths:

**The numbering of Hadeeths in this book is based on the following:**

- **Saheeh Muslim: According to the numbering of Muhammed F.Abdul-Baqy**

- Saheeh Al-Bukhari: According to the numbering of Fath Al-Bari
- Al-Tirmizi: According to the numbering of Ahmad Shaker
- Mosnad Ahmad: According to the numbering of Dar Ehya' Al-Torath Al-Araby, Beirut
- Mowatta' Malek: According to the numbering of Mowatta' Malek
- Abu-Dawood: According to the numbering of Muhammed Muhyi Al-Deen Abdul-Hameed
- Ibn Majah: According to the numbering of Muhammed F.Abdul-Baqy
- Al-Daremey: According to the numbering of Khalid Al-Saba Al-Alamy and Fawwaz Ahmed Zamarly

இஸ்லாத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் எனில், அல்லது இந்நூலின் ஆங்கிலப் பிரதிகள் வேண்டுமெனில், www.islam-guide.com\more எனும் இணைய தளத்தில் தொடர்பு கொள்ளவும்.

இந்நூல் தொடர்பாகக் கேள்விகள் கேட்க - கருத்துகள் தெரி விக்க வேண்டும் எனில், இந்நூலின் இணைய தளத்தில் தொடர்பு கொள்ளவும்:

www.islam-guide.com

அல்லது இந்நூலாசிரியருடன் தொடர்பு கொள்ளலாம். I.A. Ibrahim at: E-mail: Ib@i-g.org தொலைபேசி: (966-1) 454 - 1065 தொலை நகல்: (966-1)453-6842 தபால்பெட்டி எண் : 21679. Ruyadh 11485. Saudi Arabia

இஸ்லாத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள அல்லது இந்நூலின் அதிகப் பிரதிகளைப் பெற நீங்கள் விரும்பினால் இந்நூலாசிரியரு டன் தொடர்பு கொள்ளலாம்.

இஸ்லாத்தைப் பற்றி அறிந்திட கீழ்க்காணும் நூல்களையும் வாசிக்கலாம்:

(1) சத்திய மார்க்கம் (ஆசிரியர்: பிலால் பிலிப்ஸ்)

(2) இதுதான் உண்மை (அல்ஹரமைன் இஸ்லாமிக் ஃபவுண் டேஷன் வெளியீடு)

(3) குர்ஆனும் நவீன அறிவியலும் (ஆசிரியர்: மாரீஸ் புகைல்)

(4) இஸ்லாத்தை அறிந்துகொள்ள ... (ஆசிரியர்: மௌலானா அபுல் அஃலா மௌதூதி)

(5) மரணத்திற்குப் பின் ... (மடக்கோலைகள். World Asse mbly of Muslim youth.

(6) முஸ்லிமின் கொள்கை (ஆசிரியர்: முஹம்மது பின் ஸாலிஹ் உஸைமீன். Translated : டாக்டர். மானிஹு ல் ஜு ஹனி

(7) Interpretatipn of Meanings of the Noble Qur'an (ஆங்கிலம்) ஆசிரியர்: டாக்டர். முஹம்மது ஹிலாலி டாக்டர். முஹம்மது கான்

இந்நூல்களை பார்வையிட விரும்பினால் www.islam-guide. எனும் இணைய தளத்தில் காணலாம்.